ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—சு. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹூ புரட்டாதிமீ கஙஉ (29-9-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—கஙு.

## தோத்திரம்

ஆக்கையெ னும் இடிகரையை மெய்யென்ற பாவிநான் அத்துவித வாஞ்சையாதல்
அரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி ,ஆகும்அறி வவிழு இன்பந்
தாக்குபவகை யேதிநாட் சரியைகிரி யாயோக சாதனம் விடுத்த தெல்லாஞ்
சன்மார்க்க மல்லஇவை நிற்கஎன் மார்க்கங்கள் சாராத பேரறிவதாய்
வாக்குமனம் அணுகாத பூரணப் பொருள்வந்து வாய்க்கும் படிக்குபாயம்
வருவித் துவட்டாத பேரின்ப மானசுக வாரியினை வாய்மடுத்துத்
தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண் சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே சின்மயா னந்தகுருவே.

—தாயுமானசுவாமிகள்.

# தேசமுன்னேற்றத் திறவுகோல்

[திரு. சி. அகிலேஸ்வரன், தலைத்தீவு]

(முற்றொடர்)

'நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே' என்ற மெட்டு.

சட்டசபை யோரேநீவிர் செய்யும்கடமை—இன்னே
சரியாகச் செய்யாதிருத்தல் சோம்பல்மடமை
திட்டமுற்ற விவசாயம் காட்டவில்லையே—நீவிர்
தீவிரமாய் வேலைசெய்து காட்டவில்லையே. 1

பேடிகையி லேகொடுத்த பெண்ணின்கதியே—நாங்கள்
பிரியசம்மதம் நுமக்கு ஈந்தமதியே
கூடியநும் கூலிக்காக மாரடிக்கின்றீர்—பெரிய
கூட்டத்திலே போய்இருந்தும் வாய்அடைக்கின்றீர். 2

உங்கள்சாதி ஆள்வதற் குபாயம்செய்கின்றீர்—நும்
உடன்பிறந்தார் உயருதற் கபாயம்செய்கின்றீர்
சிங்களவர் தமிழர்என்று பேதம்செய்கின்றீர்—எங்கள்
தேசத்திற்கே நீர்பெரும் விரோதம்செய்கின்றீர். 3

பல்லாயிரம் ஜனங்கள்கூடி தெரிந்தெடுத்தோம்—எங்கள்
பதிஎன்று நம்பிநும்மைப் பரிந்தெடுத்தோம் [தேசத்
சொல்லாண்மையில் வேளாண்மையைத் தொடங்கிவிடுவீர்—
துன்பம்என்ற பஞ்சப்பேயை அடக்கிவிடுவீர். 4

இன்னபூமியில் இன்னபயிர் விளையும்என்றே—அறியும்
இசைந்தபரி சோதகரை அழையும்இன்றே
அன்னவரும் மண்வகைகள் சோதனைசெய்து—கூற
அரசாங்க மன்றில்நீரும் சோதனைசெய்து. 5

பாடுபட்டுப் பொக்கிஷத்திற் காசைப்பெறுவீர்—சரியாய்ப்
பங்கிடுவீர் ஒன்பது மாகாணங்கட்குமே
காடுவெட்டி எங்கும்பயிர்த் தோட்டம்ஆக்குவீர்—எதிர்
காலம்எங்கள் தேசத்திற்கோர் தேட்டம்ஆக்குவீர். 6

ஆறுமுதல் நீர்நிலயம் ஆழம்ஆக்கி—நீர்
அதிகதூரம் ஓடுதற்கு நீளம்ஆக்கி
வேறும்வேறும் நீர்தாங்கி கட்டல்வேண்டும்—பயிர்க்கு
வெள்ளம்ஓடும் வாய்க்கால்களை வெட்டல்வேண்டும். 7

யந்திரங்க ளாலும்தண்ணீர் பெய்தல்வேண்டும்—மேல்
நாட்டுமுறை யாகப்பயிர் செய்தல்வேண்டும்
எந்தநாளும் பல்வளங்கள் நல்கும்நாடு—எங்கள்
ஈழநாடே எப்பயிர்க்கும் ஏற்றநாடு. 8

ஆளும்அர சாங்கநிதி உதவியாலே—நீவிர்
அங்கத்துவம் ஆனதொரு பதவியாலே
நாளும்அர சியல்ஞானப் போக்கினாலே—உங்கள்
நட்புமுறை யான்இன்ப வாக்கினாலே. 9

வெள்ளைத்துரை மார்களை விளங்கவைத்து—எங்கும்
விவசாயம் செய்யப்பணம் வழங்குவித்து
உள்ளம்தள ராமுயற்சி ஊக்கம்கொண்டு—நீவிர்
ஒத்துழைத்தே ஒற்றுமையாம் ஆக்கம்கொண்டு. 10

நாட்டில்அஷ்ட லட்சுமிகள் வாசம்செய்ய—நும்மில்
நாங்கள்அனை வோரும்வெகு நேசம்செய்ய
வாட்டம்உறும் வயிற்றிற்கு உணவளிப்பீர்—வாக்கு
வல்லபத்தி னாலேபணம் வாங்கிக்கொடுப்பீர். 11

பயிர்த்தொழிற் கல்விஎங்கும் பரப்புதிரே—ஊரில்
பார்க்கும்இடம் எல்லாம்பயிர் நிரப்புதிரே
உயிர்த்துணை என்னஉம்மை நம்பினோர்க்கு—ஏற்ற
உபமானி யங்கள்பெற்று வழங்குதிரே. (சட்ட) 12

(வரும்)

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில், உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்."

# அகில இலங்கைத் தமிழ் வைத்திய மகாநாடு.

அகில இலங்கைத் தமிழ் வைத்திய மகாநாடும் ஔடதக் காட்சியும் யுவ௵ புரட்டாதி௴ ரு-௬-௭ (21, 22 23-9-35) ஆகிய மூன்று தினங்கள் வரை யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேசுவரக்கலாசாலை மண்டபத்தில் கூட்டப்பெற்றது.

ஔடதக் காட்சியை கௌரவ திருவாளர். பெரி சுந்தரம், M. A. (Cantab) கைத்தொழில் வியாபார விருத்திமந்திரி அவர்கள் புரட்டாதி௴ ரு௳ (21-9-35) சனிக்கிழமை முற்பகல் 10—மணியளவில் திறந்துவைத்தார்கள். அத்தருணம் மண்டப மேடையில் கௌரவ. திரு பெரி சுந்தரம் அவர்களுடன் ஔடதக் காட்சி வரவேற்புச் சபை அக்கிராசனராகிய நியாயதுரந்தரர் திரு. க. ஐயாத்துரை அவர்களும், மகாநாட்டு வரவேற்புச்சபை அக்கிராசனராகிய திரு. சு. நடேசபிள்ளை B. A., B. L., F. R. E. S., M. S. C. அவர்களும், மகாநாட்டுத் தலைவராகிய டக்டர். A. N. N. பணிக்கர் M. B. Ch. B. (Edin) M. R. C. S. (Eng) L. R. C. P. (Lond), I. M. S. (Retired), ஆயுள்வேத பூஷணம் (சென்னை) கொழும்பு சுதேச வைத்திய கலாசாலை அதிபருமாகிய அவர்களும், வடமாகாணப் பகுதிப் பிரதம வைத்திய அதிகாரியாகிய டக்டர். குறியான் அவர்களும், வடமாகாணப் பகுதி வித்தியாசாலைகளின் வைத்திய அதிகாரியாகிய டக்டர். ஜெயராம் அவர்களும், டக்டர். ஐசாக் தம்பையா நியாயவாதி அவர்களும், திரு. R. C. பிறக்டர் அவர்களும், ராசவாசல் முதலியார் T. காராளபிள்ளை அவர்களும் அமர்ந்திருந்தனர்.

ஔடதக் காட்சி வரவேற்புச் சபை அக்கிராசனராகிய நியாயதுரந்தரர் திரு. க. ஐயாத்துரை அவர்கள் கௌரவ திரு. பெரி சுந்தரம் அவர்களை வரவேற்று உபசரித்து ஔடதக் காட்சியைத் திறந்து வைக்குமாறு வேண்டிக்கொள்ள அவர், தமிழ் வைத்தியத்தின் பெருமை அதன் உற்பத்தி ஆகியவற்றைப்பற்றியும் அரசினர் தமிழ் வைத்திய விருத்தியின் பொருட்டு அத்தியா அவசியம் உதவி செய்யவேண்டுமென்பதைப் பற்றியும் வற்புறுத்திப் பேசியபின் இவ்வாறு ஔடதக் காட்சியும் மகாநாடுகளும் நடைபெறுவதால் ஆதரிப்பார் இன்றி மங்கும் பருவத்திலிருக்கும் ஆதிவைத்தியமாகிய தமிழ் வைத்தியம் மேல் ஓங்கி வளர்ந்து விருத்தியாவதற்கு வழியாக விருக்குமென்னும் பொருள்பட ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியபின் ஔடதக் காட்சியைத் திறந்துவைத்துப் பார்வையிட்டார்கள். ஔடதக் காட்சியில் தமிழ் வைத்திய சாஸ்திரங்களை அனுசரித்து யாழ்ப்பாணத்தில் வழங்கிவரும் வைத்திய முறைகளிற் பாவிக்கும் பலவகைப்பட்ட தாவர தாது வர்க்கங்களைக்கொண்டு நன்முறையில் தயார் செய்யப்பட்ட சூறணம், லேகியம், தைலம், குளிகை, மாத்திரை, கட்டு, பற்பம், செந்தூரம், சுண்ணம், செயநீர், திராவகம், தாதுவர்க்கச் சத்து வகைகள், ...பு முறைகள் முதலியன அடங்கிய ...கைப்பட்ட ஔடதங்களும் இர...த்தியத்திற் பாவிக்கும பல ...ட களிப்பு மெழுகு சேர் ...நச்செண்ணெய் வசிய ...ரிவெண்ணெய் முதலி ...வைத்தியத்திற்குரிய ...ஔடதங்களும் பல ...ான மூலிகை ...டிருந்தன. ...வைத்திய ஏடுகளும் வைத்தியப் புத்தகங்களும் ஔடதங்கள் பக்குவஞ் செய்யுங் கருவிகளும் வைக்கப்பட்டிருந்தன. ஔடதக் காட்சியைப் பார்வையிட்ட கௌரவ திரு. பெரி சுந்தரம் அவர்களும் டக்டர் A. N. N. பணிக்கர் அவர்களும் சென்ற வருடத்திலும் பார்க்க இம்முறை கொண்டு வந்த ஔடதங்கள் மிகவும் விசேடித்ததாக இருப்பதுடன் இச்சிறந்த முறையிலுள்ள தமிழ் வைத்தியத்தை விருத்திசெய்வதற்குத் தாங்களும் தங்கள் நண்பர்களும் கூடியவரையில் உதவி புரிவதாகவும் வாக்களித்துச் சென்றார்கள்.

ஔடதக்காட்சிக்கு இவ்வருடத்தில் முப்பது வைத்தியர்கள் ஔடதங்கள் முதலியன கொண்டுவந்திருந்தார்கள். அவர்களுள் ஒன்பது வைத்தியர்கள் கொண்டுவந்த ஔடதங்கள் மிகவும் விசேடித்தனவா யிருந்தன. அந்த ஒன்பது வைத்தியர்களுள் வைத்தியர் திரு. ஆ. சரவணமுத்து அவர்களுக்கு முதலாவது வகுப்பு அதிகாரப்பத்திரமும் தங்கப் பதக்கமும் அவர் ஔடதக்காட்சிக்குக் கொண்டுவந்த ஔடதங்களின் விசேடத்தன்மையை அனுசரித்து அளிக்கப்பட்டிருக்கின்றன. வைத்தியர் திரு. வி. கனகசபை அவர்களுக்கும், வைத்தியர் திரு. மு. முகம்மது அசீசுசாகிப் அவர்களுக்கும் முதலாவது வகுப்பு அதிகார பத்திரங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய ஆறு வைத்தியர்களுக்கும் இரண்டாவது வகுப்பு அதிகாரப்பத்திரங்கள் அளிக்கப்பட் டிருக்கின்றன. அவர்களின் பெயர்கள் கீழ்வருமாறு :—

1. வைத்தியர் வ. கனகசபை சுன்னாகம், 2. வைத்தியர் க. ஆறுமுகம் சுன்னாகம், 3. வைத்தியர் ச. கார்த்திகேசு திருநெல்வேலி, 4. வைத்தியர் சு. சுந்தரம்பிள்ளை காரம்பன், 5. வைத்தியர் நீ. மோசேஸ்பிள்ளை மாதகல், 6. வைத்தியர் இ. தியாகராசா நாயன்மார்கட்டு.

இவர்களுக்கன்றியும் இன்னும் இருவர்களுக்கு மூன்றாவது வகுப்பு அதிகார பத்திரங்களும், அறுவருக்குச் சதாரண அதிகார பத்திரங்களும், அவரவர் கொண்டுவந்த ஔடதங்களுக்குத் தகுந்தவாறு அளிக்கப்பட்டன.

மகாநாடு டாக்டர் A. N. N. பணிக்கர் அவர்களின்கீழ் யுவ வருட புரட்டாசி மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. டாக்டர் A. N. N. பணிக்கர் அவர்களை மகாநாட்டு வரவேற்புச் சபை அக்கிராசனராகிய சு. நடேசபிள்ளை வரவேற்று உபசரித்து மகாநாட்டைத் தலைமைவகித்து நடத்துமாறுவேண்ட, டாக்டர் A. N. N. பணிக்கர் அவர்கள் தலைமைவகித்துத் தலைமை ஆரம்ப உரையைக் கூறினர். தலைவர் ஆரம்ப உரையில் ஆயுள்வேத வைத்தியத்தின் உற்பத்தி, அதன்பெருமை, புராதன சித்திகள், மனிதனின் தத்துவங்கள், மேல்நாட்டு வைத்தியத்திற்கும் கீழ்நாட்டு வைத்தியத்திற்கும் உள்ள ஒற்றுமை, சுதேச வைத்தியத்தின் பிரிவுகள், ஒவ்வொன்றின் விசேடத்தன்மைகள், சித்த வைத்தியத்தின் உற்பத்தி, அதன்பெருமை, அதன் இரகசியங்கள் ஆகியவற்றைப்பற்றியும் அவ்வைத்தியங்களில் உள்ள சுகாதார ஆகார முறைகளைப்பற்றியும், மகாநாட்டில் நடைபெறும் மறு நிகழ்ச்சிகளின் ஆலோசனைகளில் இவ் அருமையான தமிழ்வைத்தியத்தை விருத்திசெய்வதற்கான வழிவகைகள் வகுக்குமாறும் யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியத்தைத் தனிமுறையில் விருத்தியடையச்செய்வதற்காகத் தகுந்தமுறையில் ஓர் சித்த வைத்திய கலாசாலை இருத்தல் அத்தியாவசியமென்றும் தற்பொழுது இவ்வைத்திய மகாநாட்டால் கூட்டப்பட்டுச் செவ்வனே நடத்திவரும் சுதேசவைத்திய கலாசாலைக்கு அரசினரும் சுதேசவைத்திய ஆலோசனைச் சபையும் பொருள் உதவிசெய்வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசியுள்ளார். இவ்வாறு மகாநாடுகளையும் ஔடதக் காட்சிகளையும் வருடாவருடம் கூட்டுவதனால் சித்தவைத்தியம் விருத்தியடைவதற்கும் சித்த வைத்திய நூல்களில் புதைந்துகிடக்கும் இரகசியங்கள் வெளிப்படுவதற்கும் அவ்வாறு வெளிப்படுவதனால் வியாதிகளால் கஷ்டப்படும் இலட்சக்கணக்கான மக்களுக்கும் அவர்களின் தேச கால வழக்கங்களுக்கு ஏற்ற வைத்தியமுயற்சி சிகிச்சைகளினால் நன்மைசெய்ய இயலுமென்பதாகவுங்கூறி மகாநாட்டின் நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்தார்கள்.

தலைவரின் ஆரம்ப உரையின் பின்பு மறு நிகழ்ச்சிகளுக்காக மகாநாடு அடுத்ததினம்வரை தள்ளிவைக்கப்பட்டது. இரண்டாம் நாளாகிய 6-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை (22-9-35) பிற்பகல் 3—மணியளவில் மகாநாடு யாழ்ப்பாணம் நல்லூரில் இருக்கும்பிரபலவைத்தியராகிய திரு க. கந்தசாமி அவர்களின் தலைமையின்கீழ் மேற்படி மண்டபத்தில் கூட்டப்பட்டது. அத்தருணம் பரமேசுவரக் கலாசாலை உபஅதிபர் திரு. வ. துரைச்சாமிப்பிள்ளை B. A. Hons (Lond.) அவர்கள் இயற்கை வைத்தியம் (narture cure) என்னும் விஷயமாக ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இதன்பின்பு கீழ்வரும் நிர்ணயங்கள் முறையே பிரேரிக்கப்பட்டும் அனுவதிக்கப்பட்டும் அனுசரிக்கப்பட்டும் சர்வசம்மதமாய் நிறைவேற்றப்பட்டன.

1-வது நிர்ணயம்.

"அரசினர் சுதேசவைத்திய விருத்திக்கென்று வருடா வருடம் கொடுக்குந் தொகையில் ஒரு பகுதியை இம்மகாநாட்டினால் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் தமிழ் வைத்திய அதிகார சபையிடம்; தமிழ் வைத்தியத்தை விருத்திசெய்வதற்காக யாழ்ப்பாணத்தில் மேற்படி அதிகார சபையினால் ஸ்தாபிக்கப்பட்டு செவ்வனே நடத்தப்பட்டு வரும் சுதேசவைத்திய கலாசாலையின்பொருட்டு செலவிடக் கொடுக்குமாறு அரசினரை இம்மகாநாடு தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகின்றது."

2-வது நிர்ணயம் :

"தற்பொழுது கொழும்பில் இருக்கும் சுதேசவைத்திய ஆலோசனைச் சபையில், தமிழ் வைத்தியத்தின் பிரதிநிதிகள் தகுந்தவாறு இன்மையால் தமிழ் வைத்தியம் விருத்தியடைவதற்கு ஏதுவில்லாதிருக்கின்றது. ஆதலால் ஆலோசனைச் சபையைத் திருத்தி இச் சபையில் நாலு தமிழ் வைத்தியர்களும் நாலு சிங்கள வைத்தியர்களும் நாலு அரசாங்க சபை அங்கத்தவர்களும் நாலு சுதேசவைத்திய அபிமானிகளும் இருக்குமாறு வகுக்கும்படி இம் மகாநாடானது அரசினரைத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகின்றது."

3-வது நிர்ணயம் :

"சிங்கள வைத்தியர்களுக்கு அரசினர் வருடாவருடம் (வேதமுகாந்தரம்) (வேத ஆராய்ச்சி) (வேதமுதலியார்) எனனும் சன்மானங்கள் வழங்குவதுபோல் தமிழ் வைத்தியர்களுக்கும் அச்சன்மானங்களையோ அன்றேல் அதைப்போன்ற வேறு சன்மானங்களையோ அவரவர் தகுதிக்குத் தகுந்தவாறு, வழங்குமாறு இம் மகாநாடானது அரசினரைத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகின்றது"

நிர்ணயங்கள் நிறைவேற்றப்பட்டபின்னர் நியாயதுரந்தரர் திரு. R. சுப்பிரமணியம் அவர்களின் குறிப்புரையுடனும் வந்தனோபசாரத்துடனும் அன்றைய நிகழ்ச்சிகள் நிறைவேறின.

மூன்றாம் நாளாகிய 7-ந்௳ திங்கட்கிழமை (23-9-35) முற்பகல் 10 மணியளவில் மகாநாட்டின் அங்கத்தவர்கள் கூட்டம் மேற்படி மண்டபத்தில் வைத்தியர் திரு. க. கந்தசாமி அவர்களின் தலைமையின்கீழ் கூடப்பெற்றது. அக்கூட்டத்தில் மகாநாட்டின் தீர்மானங்களைக் காலக்கிரமத்தில் நிறைவேற்றி வைப்பதற்காக ஒரு அதி நிர்வாகசபையும் (Executive Committee) தெரிவுசெய்யப்பட்டது. அதன்பின்னர் மகாநாட்டின் நோக்கங்களாகிய,

1. தமிழ்வைத்தியத்தை முறைப்படி கற்பிப்பதற்கேற்ற சுதேசவைத்திய கலாசாலை; 2. வைத்திய சம்பந்தமான புத்தகங்கள் ஏடுகள் அமைந்த புத்தகாலயம்; 3. வைத்தியத்திற்குரிய சகலமூலிகைகளையும் வளர்க்கும் மூலிகைத்தோட்டம்; 4. வைத்தியத்திற்குரிய தாது தாவர சங்கமப் பொருள்களமைந்த மூலிகைசாலை; 5. சகல ஔடதங்களும் தயார்செய்யக்கூடிய சுதேசவைத்திய ஔடதசாலை; 6. எவ்வகை நோய்களுக்கும் வைத்தியஞ்செய்யக்கூடிய ஓர் பொது வைத்தியசாலை பொது ஆரோக்கியசாலை முதலியவற்றை ஸ்தாபிப்பதற்கும் அவற்றைக்கொண்டு நன்முறையில் நடத்துவதற்குமாக தமிழ்வைத்திய அதிகாரசபை (Thamil Medical Council of Coylon) அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அன்று பிற்பகல் மூன்றுமணிக்கு மகாநாடு திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையின்கீழ் மேற்படி மண்டபத்தில் கூடப்பெற்றது. அவ்வாறு கூடப்பெற்ற மகாநாட்டில் திரு. G. G. பொன்னம்பலம், B. A , L. L B., M. S. C அவர்கள் தமிழ் வைத்தியத்தின் விருத்தியைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியபின்னர் ஔடதக்காட்சியில் சிறந்த ஔடதங்களுக்காக அவர்களால் தங்கப்பதக்கமும் அதிகார பத்திரங்களும் வழங்கப்பட்டன.

இதன்பின்னர் கீழ்வரும் நிர்ணயங்கள் முறையே பிரேரிக்கப்பட்டும் அனுவதிக்கப்பட்டும் அனுசரிக்கப்பட்டும் சர்வசம்மதத்துடன் நிறைவேற்றப்பட்டன.

4 வது நிர்ணயம் :

"வேதாலா" என்னுஞ் சொல்லானது சிங்கள வைத்தியரையே குறிக்கின்றமையால் அச்சொல்லை 1927-ம் ஆண்டு திருத்தி வகுத்த வைத்திய சட்டம் 42-ம் பிரிவு 22-ம் இலக்கத்திலும் மற்றும் அதிகார பத்திரங்களினின்றும் நீக்கி அச்சொல்லுக்குப்பதிலாக 'வைத்திய' என்னுஞ் சொல்லைப் பாவிக்குமாறு இம்மகாநாடானது தாழ்மையுடன வேண்டிக்கொள்ளுகின்றது"

5-வது நிர்ணயம் :

"சுதேச வைத்தியர்களுக்கு விசேடமாகத் தமிழ் வைத்தியர்களுக்கு கஞ்சா அத்தியா அவசியம் மருந்தாகப் பாவிப்பதற்கு தேவைப்படுவதால் இம்மூலிகையைத் தகுந்தவாறு பெறுவதற்கு ஏற்ற வழிவகைகளை வகுக்குமாறு இம்மகாநாடு அரசினரைத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றது."

நிர்ணயங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் மகாநாட்டின் அன்றைய தலைவரின் முடிவுரையுடனும் மகாநாட்டின் பொதுக் காரியதரிசியினால் கூறப்பட்ட வந்தனோபசார வாழ்த்துடனும் மகாநாட்டின் நிகழ்ச்சிகள் நிறைவேறின. —கடித.

## குஷ்டரோகிகளின் பரிதாபம்

கனந்தங்கிய தருமசீலர்களே!

நோய்கள் எல்லாவற்றிலும் கொடிதாகிய குஷ்டரோகத்தாற் பீடிக்கப்பட்டு ஹெந்தலையிலுள்ள குஷ்டரோக வைத்தியசாலையில் இருந்து கஷ்டத்தை அனுபவித்துவரும் நாங்கள், வருடமொருமுறை நிகழும புண்ணியதினமாகிய தீபாவளியன்று எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ்செய்யவும், கோடிவஸ்திரம் அணியவும் விரும்பியிருப்பதால், தருமசீலர்களாகிய தாங்கள் இயன்ற உதவியைக் கீழேகாணும விலாசத்துக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
க. ரெங்கசாமிப்பிள்ளை
சைவப்பிணியாளர்சங்க
காரியதரிசி.

விலாசம்:—
சைவப்பிணியாளர்சங்கம்,
ஹெந்தலை ஆஸ்பத்திரி
வத்தலை போஸ்ற்
சிலோன்.

**பத்திரக்கிரயம்**

[இல]ங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 5.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கால்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான
விளம்பரங்களுக்குச்
சலார் வேறு.

தொகுதி—சு. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹூ புரட்டாதிமீ கஉ (29-9-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—கங.


## முதன் மந்திரியாரின் இங்கிலாந்து யாத்திரை.

### இலங்கைக்கு நற்காலம் வருகிறதாம்.

### அரசியற்றிருத்தம் ஏற்படவும் இடமுண்டு.

### ஆனால் யுத்தம் நிகழ்ந்தால்...........

இலங்கை யரசாங்கசபைப் பிரதமமந்திரியாராகும் கௌரவ D. B. ஜெயத்திலகா அவர்கள் 21-9-35 சனிக்கிழமை லண்டனிலிருந்து கொழும்புக்கு வந்து சேர்ந்தார். பத்திரிகை நிருபர்க்கு அவர் கூறியதாவது:—

"இப்போது குடியேற்றநாட்டு மந்திரியாக இருக்கும் மெஸ். மால்கோம் மக்டொனல்டு அவர்கள் இலங்கை வாசிகளின் பெருநண்பன். அவருடன் இலங்கை யரசியற் றிருத்த விஷயமாகவும், வியாபார விஷயமாகவும் இருமுறை அதிகநேரம் பேசினேன். அவர் எங்கள் முன்னேற்றத்தில் அக்கறையுடையவராய்க் காணப்பட்டனர். தேசாளுமன்றத்தின் அடுத்த தெரிவு (நவம்பர் மாதம்) முடிந்தவுடன் எங்கள் விஷயங்களில் அனுதாபங் காட்டுவாரென்பது எனது நம்பிக்கை. பிரதானமாக அரசியற்றிருத்தத்தைக் குறித்துச் சிரத்தைகொள்வாரென நம்புகிறேன். அடுத்த தெரிவிலும் அவர் சித்தியடைவாரெனவும், இவ்வுத்தியோகத்தையே பெறுவாரெனவும் பெரிதும் நம்பப்படுகிறது."

#### இலங்கையும் ஏகாதிபத்திய வியாபாரமும்

"பிறிட்டிஷ் ஏகாதிபத்திய வியாபார மகாநாட்டின் கூட்டங்களில் இலங்கைவாசிகளின் பிரதிநிதி கட்டாயமாகச் சமுகமளிப்பதன் அவசியத்தைக் குடியேற்றநாட்டின் மந்திரியாருக்கும், ஏகாதிபத்திய தேசாளுமன்றப் பிரதிநிதிகள் கூட்டத்திலும் எடுத்துக் காட்டினேன். ஒட்டாவாவில் நடந்த வியாபார மகாநாட்டில் இலங்கைவாசிகளின் பிரதிநிதி நேராக அனுப்பப்படாதமையால் வந்த குறைகளை எடுத்துக் காட்டினேன். இலங்கைப் பொருள்களுக்கு, பிரதானமாக காரீயம் (Plumbago) தேங்காய்ப் பொருள்களுக்குப் பிறிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில் பிரதானமாக இங்கிலாந்தில் இறக்கப்படுங்கால், விதிக்கப்படும் வரி எவ்வளவோ குறைக்கப்படவேண்டும். இலங்கைவாசிகள் தமது பொருளாதாரநிலையைச் சீர்ப்படுத்துவதற்கு இப்பொருள்கள் விலை அதிகரித்தல் இன்றியமையாதது."

#### இங்கிலாந்தின் பொருளாதார நிலை

"இங்கிலாந்தில் இப்போது பொருளாதாரநிலை பெரிதும் சீரடைந்துளது. தொழில்கள் நன்கு விருத்தியடைய வாரம்பித்துவிட்டன. உலகில் இங்கிலாந்து தொழிலபிவிருத்தியில் முதன்மையடைந்துவிட்டது. ஆங்கிலேயர் தமது ஆற்றலில் பெரிதும் நம்பிக்கையுடையவர். ஐரோப்பிய மற்றைய நாட்டவரும் பிறிட்டிஷாரின் அபார சக்தியைக் கண்டு பேராச்சரியமடைகின்றனர். பொருளாதாரநிலை பங்கமடைந்தும்சீர்குலைந்தும்பிறிட்டிஷார் பழைய உன்னதநிலை யடைவதைக் கண்டு எவரும் அச்சமடைகின்றனர். ஒட்டாவா மகாநாட்டின் பிரேரணைகளால் அடைந்த சிலாக்கியங்களே பிறிட்டிஷார்க்கு நன்மைகளை விளைத்தனவாகும். பிறிட்டிஷார் இலங்கைப் பொருள்களுக்கு வரி விதிப்பதில் சகாயங் காட்டின அது எங்களுக்கு மாத்திரமன்று பிறிட்டிஷார்க்கும் நன்மையாகும். பிறிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில நாடுகளின் விருத்தி ஒன்றோடொன்று தொடர்புடையதாகும். ஆகையால் ஒத்தபடியே முன்னேறவேண்டும். ஒரு நாட்டினைப புறக்கணித்துவிட்டு முன்னேறவியலாது. ஆகையால், இலங்கைப் பொருள்களுககும் நற்காலம் கட்டாயம் வந்தேசேரும்."

#### இத்தாலியரின் யுத்தமுயற்சி

"இப்போது இத்தாலிக்கும் அபிசீனியாவுக்குமிடையில் ஏற்பட்ட தகராறு விஷயமாகப் பிறிட்டிஷார் கைக்கொண்டமுறை பிறிட்டிஷாரின் பல்வேறு கட்சியினராலும் ஆதரிக்கப்படுவதாகும். பெலன்குறைந்த அபிசீனியரை இத்தாலியர் நசித்துவிட ஆரம்பிக்கும் கோரத்தைக்கண்டு பிறிட்டிஷார் அடக்கொணு ஆத்திர முடையவராகக் காணபபடுகின்றனர். பிறிட்டிஷாரின் கோபம் என்னவடிவ மெடுக்குமென்பதை மத்தித்தரைக் கடலுக்கூடாகவரும்போது காணலானேன். பிறிட்டிஷாரின் கடற்படையின் பெலனைக்கண்டதும் அவர்கள் வேண்டுமாயின் எந்த அற்பசாதியினரையும் பாதுகாக்கும் வன்மையுடையரென அறிந்தேன. யுத்தக் கப்பல்கள் அணிவகுத்து மத்தித்தரைக் கடலில் நடமாடும் கெம்பீரமானகாட்சி யாவர்க்கும் அச்சத்தை விளைக்கக் கூடியதாகும். கடற்கரை யெங்கே பிறிட்டிஷார்க்குளதோ அங்கேயெல்லாம போதிய ஆகாயக் கப்பற்படையும் உளதாகும. நான்வந்த கப்பலில் 50 ஆகாய கமனிகள் வந்து போட்செற் துறைமுகத்தில் இறங்கினர்."

#### அதிகம் சென்றுவிட்டார்

"இத்தாலிய சர்வாதிகாரியாகும் முஸோலினி யுத்தாவேசங்கொண்டு எல்லைகடந்து சென்றுவிட்டார். அதனுற்றான் பின்வாங்க வெட்கப்படுகிறார். இப்போது யுத்தமுயற்சிகளைநிற்பாட்டின் இத்தாலியில் பெருங்கலகம் ஏற்படவுங்கூடும். முசோலினிதான் சன்னதங்களைக் கிளப்பினார். பின் அதனை அடக்க வியலாதவராய் மலைக்கின்றார். இந்த யுத்த ஆரம்பம் எல்லாம் பிரான்சியர் கைக்கொள்ளும் முறைகளையே பொறுத்துளது. பிரான்சியர் பிறிட்டிஷாருடன் உறுதியாகநின்று துணைசெயயின் யுத்தம் ஒருபோதும் ஏற்படநியாயமில்லை. பிரான்சியர் நிலை மிகவும் சங்கடமானது. இப்போது அவர் சர்வதேசசங்கத்திற்குப் பேச்சளவிலேயே உதவியளிக்கின்றனர், செய்கையில் எவ்வளவுக்கு அவர்கள் சர்வதேசசங்கத்தின் ஆதிக்கத்தைக்காக்க உதவி செய்வாரென்பது இனித்தான் அறியக்கிடக்கின்றது. யுத்தம் ஏற்படின் பிரான்சியர் ஒரு கட்சியையும் சேராது நடுவில் நிற்கக்கூடும். இப்போது ஒன்றும் திடமாகச் சொல்லவியலாது. பிரான்சியரின் நிலை இப்போ அந்தரங்கமானது."

"பிறிட்டிஷ்சாதியார் மறுபடி இளமையடைந்து விருத்தியடைவதைக்கண்டு திரும்பினேன். பிறிட்டிஷாரின் பெருமை மேல்நிலையிலுள்ளது. அவர்களின் செல்வம், அதிகாரம், நிலப்படை, கடற்படை ஆதிக்கம் இன்னும் உலகில் பெரிதாக மதிக்கப்படுகிறது."

## இலங்கையில் பிறிட்டிஷ் அரசியல் வரலாறு

### ஆட்சிமுறைகளில் மாற்றம்

### 1915-ம் ஆண்டுக் கலகத்தின் பேருக அரியதொண்டாற்றிய தீரர்

### சேர். அருணாசலமவர்களின் தொண்டு

### சிங்கள - தமிழர் ஒற்றுமை

நவாலியூர் "சத்தியநாதன்."

"நியூரிவியூ" என்ற மாதவெளியீட்டில் இலங்கையின் அரசியல் வளர்ச்சியைப் பற்றிப் பத்திரிகை உலகுக்கு இலங்கையளித்த பேருன திரு. எஸ். கே. ஜே. கிறுதர் எழுதும் கட்டுரையின் சாராம்சம்: இலங்கையானது பலவிதத்திலும் இந்தியாவை ஒத்திருக்கிறதென்று குறிப்பிட்டு ஆசிரியர் எழுதுவதாவது: ஏமினென்ஸ் சமாதான உடன்படிக்கையின் பயனுக 1802-ம் ஆண்டு ஜனவரி மாதம முதலாம் தேதி இலங்கை ஒரு பிறிட்டிஷ் கலனியாகப் பிறிட்டிஷார் கைப்பட்டது. அப்போது பிரதம நீதிபதி, பிரதம சேனுபதி, பிரதம காரியதரிசி என்னும் மூன்று உத்தியோகஸ்தரைக் கொண்ட ஒருசபை ஏற்படுத்தப்பட்டு அவர்களே இலங்கையின் அரசியல் நிர்வாகங்களை நடத்திவந்தார்கள். இந்த அரசாட்சிமுறை 1833-ம் ஆண்டுவரை நடைபெற்றது. அதனபின் அவ்வாண்டில் சட்டநிருபணசபைஎன்றும், சட்டநிர்வாகசபை என்றும் (Legislative and Executive Councils) இரண்டுசபைகள் உண்டாக்கப்பட்டன. சட்ட நிர்வாக சபையில் 5 உயர்தர உத்தியோகஸ்தர்களும், சட்டநிருபண சபையில் 10 உத்தியோகஸ்தர்களும் ஸ்தானம் வகித்தார்கள். 1837-ம் ஆண்டிலே சட்டநிருபணசபையில் 2 உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர் இடம்பெற்றார்கள். 1845-ம் ஆண்டிலே 6 உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களுக்கு இடமளிக்கப்பட்டது. 1889-ம் ஆண்டில் 8 பேர் இடம்பெற்றனர். அடுத்த 20 வருடமாக இலங்கை அரசியல்முறையில ஒருவித மாற்றமும ஏற்படவில்லை. ஆனால் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களுக்குச் சட்டநிருபணசபையில் செல்வாக் கிருக்கவில்லை: கவர்னர் அவர்களின் அபிப்பிராயங்களைப் பொருட்படுத்தாமல் எத்தனையோமுறை அவர்களுடைய விருப்பத்துக்குமாருக நடந்தார். இதையறிந்த பொதுசனத் தலைவர்கள் பொதுசனஅபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாத சட்டநிருபணசபையால் ஒரு பிரயோசனமும ஏற்படாதென்பதைப் பலமுறை இடித்துரைத்தார்கள். இம்மாதிரியான கிளர்ச்சியால் 1910-ம் ஆண்டில் சட்டநிருபணசபை மாற்றி யமைக்கப்பட்டது. 11உத்தியோகஸ்தர்களும் 10 உத்தியோகத்தரல்லாதாரும உடையதாகப் புதிய சட்டநிருபணசபைஏற்பட்டது. தேர்தல்மூலம பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும்முறை முதல்முதல் 1910-ல்தான் கொண்டுவரப்பட்டது. 10 உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களில் நால்வர் தேர்தல்மூலம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களில் இருவர் ஐரோப்பிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் ஒருவர் இலங்கையர் பிரதிநிதியாகவும மற்றவர் பறங்கியர் சமூகப் பிரதிநிதியாகவும தெரியப்பட்டார்கள.

இலங்கையர் பிரதிநிதிகளாகக் காலஞ்சென்ற நமது பெருந் தலைவனர் திரு (பின் சேர்.) ராமனாதனும, டக்டர் (பின் சேர்.) மக்டொனல்டு பெர்னாண்டோவும் போட்டி போட்டார்கள். இந்தத் தேர்தல் போட்டியில் ராமனாதருக்கு 1,645 வோட்டும், பெர்னாண்டோவுக்கு 981 வோட்டும் கிடைத்தன. இந்த தேர்தலில் சாதி சமயம என்ற பாகுபாட்டை நினையாமல் தேர்தல் நடைபெற்றது.

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.)

**விருந்தினரைக் காக்குமுதவி யிவ்வளவென்ப தொன்றில்லை, விருந்தினர் தகுதியளவேயாம்.**

# "ஆகாயவசனி" (15-9-35)

## கொழும்பு

—குல. சபாநாதன், வேள்ளவத்தை.

## சின்னத்தம்பிப் புலவர்

(முற்ரெடர்)

இப்புலவரின் காலத்தை விரிவாக எடுதது ஆராய்ந்து கூறுதற்கு விருப்பமுண்டு. எனினும், எனக்குக் குறிக்கப்பட்ட நேரம் மிகக்குறைவாதலின் அவற்றையெல்லாம் கூறுது செல்ல வேண்டியிருக்கிறது. இவர் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இருந்தவர் என்பது சிறிது சிறிதாக வலியுற்றுவருகின்றது. ஆனுல் சந்தேகங்கள் பலவுண்டு.

இவரியற்றிய நூல்களுள், மறசையந்தாதி, கல்வளையந்தாதி, பருளை விநாயகர் பள்ளு, கரவை வேலன் கோவையாகிய நான்கும் அச்சில் வெளிவந்துள்ளன. இச்செய்யுட்களில் சொற்சிறப்பும் பொருட்செறிவும் ஒருங்கே யமைந்துகிடக்கின்றன. இவருடைய நூல்களுள் இவ்வருடத்தில் வெளிவந்தது 'கரவை வேலன் கோவை'யெனும் நூலாகும். இது பிரம்மஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்களின் குன்ருமுயற்சியால் வெளிவந்திருக்கின்றது. "கோவையென்பது தமிழ்ப் பிரபந்தங்களுள் அகப்பொருட்கு இலக்கியமாக அமைந்தது. அகப்பொருட் டுறைகளை ஒரு வரலாற்றுமுறையில் தொடர்புபெறக் கோத்தமைத்து, இயற்றப்பெற்ற நானூற்றின் மிக்க கலித்துறைகளையுடையது." ஒருகோவை பாடுதற்குப் பஞ்சலக்கண அறிவு வேண்டியதால், இந்நூலைப் பாடிமுடித்தல் இலகுவான செயலன்று. "யாவையும் பாடிக் கோவை பாடு" என்பது பழமொழி. அதாவது பலவகைப் பாடல்களையும் பாடிக் களைதீர்ந்தபின்பு கோவைபாடமுயலுதல் வேண்டுமாம். இந்தக் கோவையில் புகழப்பட்டவர் கரவெட்டியில் இருந்த வேலாயுத முதலியார் எனும் ஒரு வேளாண்பிரபு. இந்த வேலாயுதமுதலியார் புலவருக்குப் பொன்கொடுத்தார் என முன்சொன்னேன். அப்பொன் இப்பொழுது மண்ணுகிவிட்டது. ஆனுல் புலவர் கொடுத்தபொருளோ என்றும்நின்றுநிலவுகிறது. வேலாயுதமுதலியாரினும் பார்க்கப் பன்மடங்கு பணமுடைய குபேரர்கள் அக்காலத்தில் இருந்திருக்கலாம். ஆனுல் அவர்களைப்பற்றி இப்பொழுது ஒன்றுமே தெரியாது. இம்முதலியார் தமது பொருளைச் சிறந்த முறையிற்செலவழித்ததால் இப்புலவராற் புகழப்பட்டு இவருடைய புகழை இன்றும் யாம் அறிந்து மகிழக் கூயடிதாயிருக்கின்றது. செல்வர் அளிக்கும் பொருளினும் புலவர் அளிக்கும் பொருளே சிறந்தது என ஒரு புலவர் பெருமை பாராட்டுகிருர்.

"காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை
யாகாப் பொருளை யபயனளித் தான்புகழாம்
ஏகாப் பொருளளித்தேன் யான்.

புலவர்கட்குப் பெரும்பாலும் கொடிய வறுமையே பெரிய இடையூற்றை உண்டாக்கிவந்தது. இப்பொழுதும் அதுவே அவர்களை வாட்டுகின்றது. கல்விச்செல்வம் நிறைந்துள்ள புலவர்கட்குப் பொருட்செல்வம் பெரும்பாலும் இல்லாதொழியும். சரஸ்வதி இருக்குமிடத்தில் இலக்குமி இருக்கமாட்டாள். உங்கள் வீடுகளைப் போல மாமிக்கும் மருமகளுக்கும் ஒற்றுமை கிடையாது. புலவர்கள் தம் வறுமையினை அரசரிடமும் பிரபுக்களிடமும் கூறி அதனைத் தீர்க்க முயலுவார்கள். அப்பொழுது அவர்கள் வறுமையின் கொடுமையினை மனம் கசிந்துருகும்படி அழகிய செய்யுட்களால் எடுத்துக் காட்டுவார்கள். பொருள் வறுமையால் அவர்களது கவிச்செல்வம் வெளிப்படும். குமுணராசன் தன் சகோதரனேடு விரோதப்பட்டுக் காட்டில் இருந்தபோது அவனிடஞ் சென் றிரக்கின்ருர் ஒப்பிலாமணிப் புலவர். அதனை எங்ஙனம் கேட்கின்ருரென்பதைக் கேளுங்கள்.

"ஆடெரி படர்ந்த கோடுய ரடுப்பில்
ஆம்பி பூப்பத் தீம்பசி யுழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறுஞ்சுவைதொறும்பால்காணமல்
குழவி தாய்முக நோக்க
மனைவி யென்முக நோக்க யாமும்
நின்முக நோக்கி வந்தனங் குமண."

அடுப்பில் காளான் பூத்தது. எனவே பல நாட்கள் சமையல்செய்யாது கொடிய வறுமைப் பிணியால் முழுக்குடும்பமும் வருந்தினமை தெரிகிறது. அழியும் பொருளை யீந்தமையாலன்றோ புறநானூறு, பட்டினப்பாலை முதலிய பல அழியாப் பொருள்களைப் புலவர்கள் அழித்திருக்கின்ருர்கள்.

"முற்ரெடர் பிற்செய்த முறைமையால் வந்தசெல்வ, மிற்றைநாட் பெற்ருேமென் றெண்ணுது பாழ்மனமே, யற்றவர்க்கு மீயாம லரன்பூசை யோராமற், கற்றவர்க்கு மீயாமற் கண்மறந்து விட்டனையே."

எனப் பட்டினத்தடிகள் வருந்திக் கூறுவதையும் கவனியுங்கள். ஈகையின் சிறப்பினைப் பல நூல்களிலும் விரித்துக் கூறியிருப்பதால் அவற்றையெல்லாம் நான் மீட்டும் கூறவேண்டியதில்லை. பிள்ளைப்பேறில்லாது பணத்தைச் சேகரிக்கும் தமிழ்மக்கட்கு ஒரு சிறு புத்திமதி சொல்ல விரும்புகிறேன். உங்களுடையமரணசாதனத்திலாயினும் (நீங்கள் உயிரோடிருக்கும் வரை ஈய மனம் வாராதாதலின்) உங்கட்குப் பின் உங்கள் பொருள் புலவர்களைப் பாதுகாத்தலில் செலவிடவேண்டுமென எழுதிவையுங்கள். புலவர்களாற் பாடப்பட்டோர் சுவர்க்கம் புகுவர் என்னும் கொள்கையு முண்டாதலின், இந்த வழியாலும் உங்கட்குச் சுகமுண்டு. உங்கள் புகழும் நிலவுலகத்திலே நீடித்துநிற்கும். ஏழைப்புலவர்களும் ஆறுதலடைந்து தமிழில் சிறந்த நூல்களை இயற்றுவார்கள். இக்காலத்தில் சிறந்த புலவர்கள் இல்லையென நீங்கள் கவலைப்படவேண்டாம். சுவாமி விபுலானந்தர், வித்துவான் பிரம்மஸ்ரீ. சி. கணேசையர், கருணையபாண்டியப் புலவர், நவநீதகிருஷ்ண பாரதியார், வண. ஞானப்பிரகாச சுவாமிகள், சோமசுந்தரப்புலவர், பண்டிதர் மகாலிங்கசிவம், வித்துவான் சுப்பையாபிள்ளை, பண்டிதர் கணபதிப்பிள்ளை முதலிய பல அறிஞர்கட்கு வேண்டும் வசதிகளமைத்துக் கொடுப்பின் தமிழுலகம் அடையும் பயனை அளவிட முடியுமா? ஈழம் செந்தமிழ் நங்கை நடம் புரியும் புண்ணிய பூமியாகவன்றோ மாறிவிடும். இதுபோலவே இந்தியாவிலும் பல புலவர்கள் இருக்கின்ருர்கள். அங்கள் நாட்டிலே நீண்ட பெயருடன் ஆண்டுக் கொருமுறை விழாக் கொண்டாடும் சபைகட்குக் குறைவில்லை. ஆனுல் இவற்ருல் பெறும் பயன்தான் மிகக் குறைவு.

இனி, இந்தக் 'கரவைவேலன் கோவை' எனும்புத்தகத்தைப்பற்றிச் சிலசொல்வேன். இந்நூல்முழுமையும் அகப்படாது சில செய்யுட்கள்மட்டும் கிடைத்தமை எமது துரதிஷ்டந்தான். சில செய்யுட்கள் தஞ்சைவாணன் கோவைச் செய்யுட்களினும் சிறந்தனவாகக் காணப்படுகின்றன. இச்செய்யுட்களை ஆகாயவசனிமூலம் கேட்டின்புறுதல் மிகவும் கஷ்டம். இவற்றை இனிய குரலுடைய இளம்பெண் அவற்றிற்குரிய ராகத்துடன் படிக்கக் கேட்பீர்களாயின், அப்பொழுதே அவற்றின் சுவையினை அறிவீர்கள். இப்பொழுது வாசிக்கவிருக்கும் பாட்டுக்கள் ஒத்த உருவும் திருவும் குணனும் அன்பும் உடைய ஒரு இளம்பெண்ணும் வாலிபனும் ஒரு சோலையிலே விதிவசத்தால், சந்தித்து ஒருவரையொருவர் காண்கின்றனர். கண்டதும் இவ்வளவு அழகுவாய்ந்த பெண்ணரசி பூவுலகத்தினளோ, அல்லது தேவலோகத்தினளோ, அல்லது வேறெந்த லோகத்தினளோ என நம்பி ஐயுறுவான். அங்ஙனம் ஐயுற்றபின் இவளுடைய கண் இமைக்கின்றமையாலும், கால் நிலத்திற் படிதலாலும், கண்ணி வாடியிருத்தலாலும், இவள் பூவுலகத்தினள்தான் எனத் தெளிவான். இங்ஙனம் அன்பாலுண்டாய அனுபவங்கள் பலவற்றைத் தொடர்பாகக் கூறிச் செல்கின்றது இந்நூல். முதலிலே ஒருவரையொருவர் கண்டதும் ஐயம் நிகழ்கின்றது.

கங்கா தரன்சிலை யோரத மோகவி
லும்பனியோ, வெங்காள போசன சாலைய
தோவியன் முத்தமிழும், மங்காது வந்த
கரவையில் வேலன் வரையிலிசை, சிங்கார
வல்லியர் வாழ்பதி யாதெனத் தேர்கிலமே.

### துணிவு

பூவென்ற மாலிலங் கேசனை நாளைக்
குப் போர்புரிய, வாவென்ற வீரன் கரவை
யில் வேலன் மகீபதிமேற், பாவென்ற
வாணிப் பவளச்செவ் வாய்மடப் பாவையிவ,
ளேவென்ற காதள வோடிய பார்வை
யிமைக்கின்றதே.

### குறிப்பறிதல்

"மருநோக்கும் வண்டறை யைம்பா
லளக மடந்தைகண்ணி, லிருநோக் குடைய
து காணெஞ்ச மேயிரு நோக்கதனி, லொ
ருநோக்கு நஞ்ச மொருநோக் கமிர்த முயர்
பதுமத், திருநோக்கு மார்பன் கரவையின்
வேலன் சிலம்பகத்தே."

பருளை விணயகர் பள்ளு: இது சோழியபுரத்திலுள்ள பருளாய் என்னும் சிற்றூரிலுள்ள விநாயகர்மீது பாடப்பட்டது. இதிலே சந்தச்செய்யுட்கள் பெரும்பாலுமுண்டு. முதற்கண் ஈழமண்டலத்தினதும், சோழமண்டலத்தினதும் வளன் மிக விரிவாகக் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். பள்ளி பள்ளரின் வாழ்க்கையை மிக நயமாக எடுத்துக் காட்டியிருக்கிருர். ஈழமண்டலத்தின் வளங்கூறும்,

"மஞ்ச ளாவிய மாடங்க டோறும்
மயில்கள் போன்மட வார்கணஞ்சூழு, மஞ்ச
ரோருகப் பள்ளியின் வான்சிறை யன்ன
வன்னக் குழாம்விளை யாடுந், அஞ்சு மேதி
சுருக்களைச் சிறைச் சுருக்க ளோடிப் பலாக்
கனி சீறி, யிஞ்சி வேலியின் மஞ்சலிற்போ
ய்விழு மீழ மண்டல நாடெங்க ளூடே"

பண்ணிற் ருேயப் பொருண்முடிப்
புகட்டிப் பாடும் பாவலர்க் கீந்திட வென்
றே, யெண்ணிப் பொன்முடிப்புக் கட்டி
வைத்திடு மீழ மண்டல நாடெங்க ளூடே."

"கற்ற நூலுணர் பண்டிதன் மார்பஞ்ச
காவி யஞ்சட் கலைக்கட ருேய்ந்து, மெற்
றை நாளுங்கல் வித்திறம் பார்த்திடு மீழ
மண்டல நாடெங்க ளூடே"

என்பவைபோன்ற செய்யுட்கள் பலவுண்டு. மழைபெய்தலை வர்ணிக்குமிடத்து இச்சொற்களைப் பெய்திருக்கும் முறையே அதனை நன்கெடுத்துக் காட்டும்.

"கருமயி லாடக் குயிலினம் ல
கவியின மோடக் கரடி புல்வாய், ...
புலி யாளித் திரள்மரை சாரற் புறமுழை
பதறிக் கிடுகிடவே, யருகுழை தவளக் குல
மலை தகாத் தடகிரி யின்முத் துதிர் தரவே,
சொரிமல ரகிலப் பலமா முறியச் சோவெ
னமாரி பொழிந்ததுவே"

மூத்த பள்ளி முறையிடலும் மிக நயமாயிருக்கும். அவற்றுள்ளும் இரண்டொன்றைக் சேளுங்கள்.

"கட்டு நீர்வயற் செய்கையுந் தீண்
டான் கலகப் பள்ளி மயல்வலைப் பூண்டான்,
பட்டியின் மாட்டைக் கிட்டியும் பாரான்
பழைய தாரமென் றென்னையுஞ் சேரான்,
சட்டைக் காரியை விட்டுப் பிரியான் சற்றே
பிரிந்தாலு மிங்குத் தரியான், பெட்டிச்
சோற்றுக்குங் கள்ளுக்கும் நெல்லெல்லாம்
பெட்டியா லள்ளிக் கொட்டினு னுண்டே"

"மஞ்சொத்தகுழலா—விளையவள்—குஞ்
சுக்குமுதலா--நெல்லு--மணிவிற்றுத்தட்டா
ன்—கையிற்—பணிசெய்வித்திட்டான், வஞ்
சத்துக்குரியாள்--கற்ற--விஞ்சைக்குப்பெரி
யா—ளிட்ட—மருந்துக்குவிருந்தா--கிக்கொ
ண்—டிருந்துட்கிக்கரைந்தான், கஞ்சிக்குப்
பிறகே—நின்று—கெஞ்சிக்கொண்டிருப்பா—
னவள்— காலையும்பிடிப்பா—னவள்சொன்னல்
—நாகமும்பிடிப்பான், பிஞ்சுற்றமதிநே—ரொ
ற்றைக்--கொம்பொத்தகரியா--யெட்டிப்—
பிடியுங்கைச்சவுக்காற்--கட்டி—யடிமின்கா
ணுண்டே"

இந்நூலிலே மாட்டுவகை, மீன்வகை, விதைவகை, பள்ளிகளின் பல பெயர்கள் முதலியன மிக வழகாயும் விரிவாயும் சொல்லப்பட்டிருப்பதால் அந்நூலைத் தமிழ்மக்கள் ஒருமுறையாவது பாடிப்பார்த் தின்புறுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். மற்றைய இருநூல்களும் அந்தாதிகள். அவை பெரும்பாலும் பயின்றுவருகின்றன.

கல்வளையந்தாதி: கல்வளையெனும் பகுதியிலுள்ள விநாயகர்மீது பாடப்பட்டது. இதற்கு இயற்றமிழ்ப்போதகாசிரியர் வல்வை திரு ச. வயித்தியலிங்கபிள்ளை அவர்கள் ஓர் அழகியவுரை எழுதியிருக்கின்ருர்கள். இதனைத்தழுவி இந்துசாதனப்பத்திராதிபர் திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களும் எளியநடையில் ஓர் உரையினை வெளியிட்டிருக்கின்ருர். இதில் ஒரு செய்யுளில் ஈயாத லோபியைப் பாடுவதாற் பயனில்லை எனத் துன்பத்தோடு தெரிவிக்கிருர்.

"தனக்காக்கை யன்றி வழங்காரைப்
பாடித் தளர்பசிய, தனக்காக்கை யுண்ணு
முடல்வீக் கிடச்சலித் தேன்சிலைவே, டன
க்காக்கை போக்கிய நோக்கினன் மைந்த
தண் காரினைச்சந், தனக்காக்கை நீட்டு
தென் கல்வளை யன்பர் சகாயத்தனே"

அடுத்த நூல் மறசையந்தாதி. இது வேதாரணியேஸ்வரார்மீது பாடப்பட்டது. இதற்கு உடுப்பிட்டி ஸ்ரீமத். அ. சிவசம்புப்புலவர் சிறந்தவோர்உரையெழுதியுள்ளார். அதுவே இன்றும் பயிலப்பட்டுவருதல் அவ்வுரையின் சிறப்புக்குத் தகுந்த அத்தாட்சியாகும்.

தனது பாடலின் சிறுமையினைச் சின்னத்தம்பிப் புலவர் காட்டுமுகத்தால் புலவரின் பாவியற்றும் ஆற்றல் சிறந்து விளங்குவதைப் பாருங்கள்.

"மனக்காக்கை மூவர் தமிழ்க்குயில்
வாணிபை வைத்தகுதை, புனக்காக்கை
வஞ்ச வினையேன்புன் ஞவி லுரைத்ததமிழ்,
சினக்காக்கை வாயி னுறங்குரற் சொல்
லொக்குஞ் சேண்முகிற்சந், தனக்காக்கை
மீட்டு மறைக்காட்டில் வாழ்சிவ சம்பரனே"

இவ்வந்தாதியில் அகப்பொருட்டுறைகளினும் பல செய்யுட்கள் வந்துள்ளன. இவை யாவற்றையும் விரித்துக்கூறலாமென எண்ணிவந்தேன். நேரமாயிற்றென அதிபர் அறிவிப்பதால் இத்துடன் நிறுத்துகின்றேன். அறிஞர்களே! இப்புலவர் இருந்தகாலத்தில் இன்னும் சில புலவர்களிருந்தார்கள். அவர்களைப்பற்றியும் வேறு ஈழத்திற் சிறந்த புலவர்களைப்பற்றியும் காலம் வாய்ப்புழி எடுத்துரைக்க எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி, வேள்வி தலைப்படா தார்.

# வருகிறது! வருகிறது!! இலங்கைக்கு வருகிறது!

## சேர் ஜயதிலகர் கொணர்ந்த அதிஷ்டப்பெட்டி

### அதிலுந் தப்பி இதிலுந் தப்பினால் அதிஷ்டந்தான்.

### டொனமூர்த்திட்டத்தின் அனுபவம்.

**கரையோரத்தில் தள்ளாடும் காங்கிரஸ்.** **விசேடகூட்ட விளம்பரம்.**

(நமது கொழும்பு நிருபர்.)

கொழும்பு, செப். 26.

"வருகுது, வருகுது, இலங்கைக்கு நல்லகாலம் வருகுது. அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் நல்லகாலம் வருகுது" எனக் குடுகுடுப்பைஅடித்துக்கொண்டு சேர் ஜயதிலகர் கொழும்பில் வந்திறங்கியிருக்கிறார்.

ஆனால் அவர் பத்திரிகை நிருபர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலிருந்து தற்போதைய அரசாங்க சபையின் ஆயுட்காலத்திலோ அல்லது சமீபத்திலோ இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தம்கிடைக்கமாட்டாதென்று தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. அவர் சொல்லுவதைக் கேளுங்கள்:—

"குடியேற்றநாட்டு மந்திரி திரு. மல்கொம் மக்டொனல்டை நான் இரண்டுமுறை சந்தித்தேன். நான் கூறியதை அனுதாபத்துடனும் வெகு கவனமாகவும் கேட்டார். இரண்டாவது சம்பாஷணை முடிவில் எனது கோரிக்கைகளைத் தாம் கவனமாகப் பரிசீலனை செய்வதுடன் இலங்கைத் தேசாதிபதியுடனும் அவைகளைப்பற்றி யோசிப்பதாக அவர் என்னிடம் சொன்னார். இத்தாலியா அபிசீனிய தகராறு காரணமாக யுத்தம் ஏற்படாத பட்சத்தில் நவம்பரில் அல்லது ஜனவரியில் இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடைபெறும்.

திரு. மக்டொனல்ட் தேர்தலில் வெற்றிபெறுவாரென்றும் அவர் மீண்டும் குடியேற்றநாட்டு மந்திரி பதவியை வகிப்பாரென்றும் நாம் நம்பியிருக்கலாம். அப்படியானால் நமது பிரச்சினைகள் அவரது கவனத்தைப் பெறுமென்பதில் சந்தேகமில்லை.

சேர் ஜெயதிலகரின் நம்பிக்கை நிறைவேறுவதற்கு எத்தனை நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென்று பாருங்கள்:— யுத்தம் ஏற்படாமலிருக்கவேண்டும். (அக்டோபர் 15-ந் தேதி யுத்தம் ஆரம்பிக்கக்கூடும் என்று இன்றைய பத்திரிகைகள் கூறுகின்றன); தேசீய அரசாங்கமும் திரு. மக்டோனல்டும் வெற்றி பெறவேண்டும்; திரு. மக்டோனல்டுக்கு மீண்டும் மந்திரி பதவி கிடைக்கவேண்டும்; அதுவும் குடியேற்றநாட்டு மந்திரிபதவியாக விருக்கவேண்டும். (தேர்தல்களின்பின் மந்திரி சபையில் அதிக மாற்றங்கள் செய்யப்படுவது வழக்கம்); இலங்கையர்மீது தற்பொழுது ஏற்பட்டுள்ள அனுதாபம் அப்பொழுதும் தணியாமல் இருக்கவேண்டும். (அவருடைய பேர்பெற்ற தந்தையார் இன்னுஞ் சில மாதங்களுக்குள் இந்தியாவுக்குக் குடியேற்றநாட்டந்தஸ்து வழங்கவேண்டும்" என்று பிரதமமந்திரி பதவியேற்பதற்குச் சில மாதங்களுக்கு முன் திருவாய்மலர்ந்தவர்), அவ்வனுதாபத்தைச் செயல்மூலமாகக்காட்ட ஆர்வமும் பலமும் துணையும் இருக்கவேண்டும்; இந்த நிபந்தனைகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்ட பின்பும் இலங்கையர் ஒரு மனதாகத் தங்களுக்கு அரசியல் சீர்திருத்தம் வேண்டுமெனக் கேட்டு அதைப்பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாதவரை எந்த மந்திரியாவது அல்லது அரசினராவது அரசியலில் சீர்திருத்தம் கொடுக்க முன்வருவாரா? என்று சில சந்தேகிகள் கேட்கக்கூடும்.

இவைகளையெல்லாம் நமது ஜெயதிலகர் அறிந்திருக்கவில்லையென்று நாம் கூறவில்லை. அறிந்திருந்தாலும், இலங்கையரை ஏமாற்றிவிடலாமென்றெண்ணி இவ்வாறு சொல்லுகிறார் என்றும் நாம் சொல்லவில்லை. இலங்கையின் அரசியல் சீர்திருத்தத்துக்காகத் தம்மாலியன்றதை அவர் இங்கிலாந்தில் செய்துவிட்டார். இங்கிலாந்துக்குப் போகும்பொழுது தம்மால் அங்கு அதிகம் செய்யலாமென்ற நம்பிக்கையுடனும் அவர் செல்லவில்லை. இங்கிலாந்துக்குப் பிரயாணமாவதற்குச் சிலநாட்களுக்குமுன், "எமது கோரிக்கைகளுக்கு இங்கிலாந்தில் தற்பொழுது ஆதரவு கிடைக்குமென்று நான் நம்பவில்லை. நம்மில் அனுதாபம் உள்ள எவரும் இப்பொழுது அங்கு அதிகாரத்திலில்லை என்ற கருத்துப்பட அவர் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

பின் அவர் இப்பொழுதுகூறும் மொழிகளின் அர்த்தமென்ன? உமது முயற்சியால் என்ன பலன் விளைந்திருக்கிறதென்று கேட்பவர்களுக்கு "எல்லாம் விரும்பத்தக்க முறையில் நடந்தால் நமக்கு அரசியல் சீர்திருத்தம் கிடைக்கும்" என்று அவர் பதிலளிக்கிறார். ஆனால் எல்லாம் நாம் விரும்புகிறபடி நடக்காதென்பதை அவரும் அறிவார். நாமும் அறிவோம்.

திரு. மல்கொம் மக்டொனல்டின் அனுதாபத்தை நம்பியிருப்பதைத் தவிர சேர் ஜெயதிலகர் வேறு எதுவும்செய்யத் தயாராயிருப்பதாகத் தெரியவில்லை. அவருடைய வயதையும் இலங்கையின் சென்றகாலத் தலைவர்களின் வரலாறுகளையும் அறிந்தவர்கள் இதில் ஆச்சரியமடையமாட்டார்கள். அவருடைய தலைமையில் அதிருப்திகொண்டவர்கள் அவருடைய சென்றகாலச் சேவைகளைப் பாராட்டி அவருக்கு நன்றிகூறிவிட்டு வேறுவழிகளைக் கோலுவதுதான் முறை.

நான்கு வருடங்களுக்குமுன் அரசாங்கசபையைப் பகிஷ்கரித்தவர்களும் அதில் பிரவேசித்தவர்களில் பெரும்பாலாரும் இந்த 'நான்கு வருடங்களுக்குள்ளும் சில சீர்திருத்தங்களைப் பெற்றுவிடலாமென எதிர்பார்த்திருந்தார்கள். அவர்கள் மனத்தில் நம்பிக்கை குடிகொண்டிருந்தது, சிறுபான்மை வகுப்பினர் மனத்தில் தேசீய உணர்ச்சி கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்தது. அவை யாவும் இப்பொழுது மறைந்துவிட்டன. நாட்டினர் மனத்தில் சீர்திருத்த விஷயத்தில் ஒரு பெரிய அசிரத்தை ஏற்பட்டிருக்கிறது. சிறுபான்மை வகுப்பினரில் ஒருசாரார் வகுப்புவாதக்கூச்சலைக் கிளப்பியிருக்கிறார்கள்.

தற்போதைய நிலைமையின் காரணங்களும் அதை நிவர்த்தி செய்யும் வழிகளும் நாட்டின் நன்மையை விரும்புவோரின் கவனத்தைப் பெறவேண்டுமென்பதில் ஐயமில்லை.

அரசியல் சீர்திருத்தம் பெறுவதற்கு இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலின் முடிவை நம்பியிருப்பதால் பிரயோசனமில்லையென "டெயிலி நியூஸ்" பத்திரிகை கூறி, அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைகளுக்குப் பொதுசன ஆதரவு இருப்பதாகத் தோற்றினால் அக்கோரிக்கைகள் விஷயத்தில் பிரிட்டிஷ் மந்திரிமார் அதிக கவனஞ் செலுத்துவார்" என்று திரு. பிரெடரிக் கிரப் கூறியிருக்கும் யோசனையை இலங்கைத் தலைவர்களுக்கு அர்ப்பணம் செய்கிறது. மேலும் நான்கு வருடங்களுக்குமுன் சேர்ஜயதிலகாவும் அவரது சகாக்களும் டொனமூர் திட்டத்தைக் கட்டித் தழுவி அதைத் தைரியமாகக் கண்டித்து நின்ற யாவரையும் பொதுவாழ்க்கையிலிருந்து தூரத்தினார்களென்றும் இப்பொழுது அவர்களது அபிப்பிராயங்கள் சரியானவையெனத் தெரியவந்திருக்கிறபடியால் அவர்களை அழைத்து அவர்களுடன் ஒத்துழைப்பது சேர் ஜயதிலகா கூட்டத்தினரின் கடமையென்றும்தற்போதைய அரசியலில் மகாசனங்களுக்குஏற்பட்டுள்ள அதிருப்தி வெளிப்படவேண்டுமானால் இப்படிச்செய்வது அவசியம்என்றும் அப்பத்திரிகை இடித்துரைக்கிறது.

இது ஒருபுறமிருக்கத் தற்போதைய அரசியல் நிலைமையைக் கவனிக்க இலங்கைக் காங்கிரஸ்சபை ஒரு விசேஷ மகாநாட்டை வருகிற சனிக்கிழமை கூட்டத் தீர்மானித்திருக்கிறது. சகல சமூகத்தினரின் பிரதிநிதித்துவத்தையும் ஒருகாலத்தில் பெற்றிருந்த இம்மகாசபை கரையோரப் பகுதிச் சிங்களரில் ஒருசிலரின் கூட்டமாக இப்பொழுது தள்ளாடிக்கொண்டிருக்கிறது. இச்சபை தனது பலவீனத்தையும் தான் தேசத்துக்கு வழிகாட்டக்கூடிய நிலைமையிலிருக்கவில்லையென்பதையும் இன்னுஞ்சரியாக உணர்ந்திருக்கவில்லை. சில திருத்த இயக்கத்தைப் பலப்படுத்துவதற்காகச் சிலவருடங்களின்முன் இலங்கையில் தோன்றிய தேசீயசபை சிலமாதங்களுக்குமுன் மறைந்ததற்குக் காங்கிரஸும் பொறுப்பாளியாக விருந்ததென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அரசியல் துறையில் இலங்கை முன்னேறவேண்டுமானால் காங்கிரஸ் சகல சமூகங்களின் பிரதிநிதித்துவத்தையும் பெற்றிருக்கவேண்டுமென்பதையும் அதை அத்தகைய சபையாக்கும் பொறுப்பு அதிலுள்ளவர்களை மட்டுமன்றி அதற்கு வெளியிலிருப்பவர்களையும் சார்ந்திருக்கிறதென்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

வருகிற சனிக்கிழமை கூடவிருக்கும் விசேஷ மகாநாட்டைக் குறித்துக் காங்கிரஸ் அங்கத்தினருக்கு விடுத்திருக்கும் அறிக்கையில் பின்வரும் வசனங்கள் காணப்படுகின்றன.

"இந்நாட்டின் பொருளாதார அரசியல்வாழ்க்கையில் ஒரு நெருக்கடியான நிலைமை தற்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கசபைக்குள்ளேயும் வெளியிலும் ஒரு மோசமான நிலைமை யேற்பட்டிருக்கிறது. அரசாங்கசபையில் கட்சிக்கட்டுப்பாடு குலைந்துவருகிறது. அனேகமாக எல்லா முக்கிய விஷயங்களிலும் சில அங்கத்தினர்கள் தாங்கள் நினைத்தபடி நடந்துகொள்ளுகிறார்கள். நிர்வாகசபை ஆட்சிமுறை இதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும். வேறு சில அங்கத்தினர்கள் பிற்போக்கான கொள்கைகளையுடைய கட்சிகளையும் வகுப்புப் பிரிவினைகளை ஆதாரமாகவுள்ள கட்சிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இச் சிறு கட்சிகள் முற்போக்கான சட்டங்களுக்கு ஆபத்தை விளைக்கக் கூடியனவாக இருக்கின்றன.

நாட்டில், பொதுமக்கள் மனதில் பெரிய அதிருப்திகாணப்படுகிறது. இதற்குப் பலகாரணங்களைக் குறிப்பிடலாம். அரசியல் திட்டத்துக்கும் அமுல் நடத்த முயன்றவர்களுக்குமாறாகச் செல்வாக்குவாய்ந்த சில பத்திரிகைகள் விடாப்பிடியாகப் பிரசுரம் நடத்திவந்தபடியால் பொதுசனங்கள் மனதில் அரசியல் திட்டத்தைப்பற்றி அதிருப்தியும் தலைவர்களிடத்தில் அவநம்பிக்கையும் ஏற்பட்டது. மேலும் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுவந்த பலர் அரசாங்கசபைக்குச்சென்றபின் அதிகநேரத்தைப் பொதுவேலைகளில் கழிக்க முடியாமலிருந்தார்கள். இன்னோரன்னகாரணங்கள் பொதுசன அபிப்பிராயம் உருப்படுவதற்குத்தடையாகவிருந்தன. தற்போதைய அரசியல்திட்டத்தில் பின்வருந்திருத்தங்கள் அவசியமாக இருக்கின்றன.

(1) பிரதம உத்தியோகஸ்தர் மூவரும் அரசாங்க சபையிலிருந்து நீக்கப்படவேண்டும்.

(2) பண நிர்வாகமும் அரசாங்க உத்தியோகஸ்தரும் அரசாங்க சபையின் அதிகாரத்துக்குஉட்படவேண்டும்.

(3) தேசாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கவேண்டும்.

(4) பொறுப்பு வாய்ந்த மந்திர சபை ஏற்படவேண்டும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப் பிரச்சினை தீர்ந்துவிட்டது. இது சம்பந்தமான சகல கிளர்ச்சிகளுக்கும் டொனமூர்த்திட்டம் சாவுமணி அடித்துவிட்டது. மேலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டதால் சிறுபான்மை வகுப்பினர்களின் நலவுரிமைகளுக்கு எவ்வித பாதகமும் நேரிடவில்லையென்பதைச் சென்றகால அனுபவம் தெளிவாகக் சாட்டியிருக்கிறது. நாட்டின் சேமத்துக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்றதல்லவானபடியால் அதைக் காங்கிரஸ் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவந்திருக்கிறது. அது தனது அபிப்பிராயத்தை மாற்றுவதற்கு இப்பொழுது எவ்வித காரணத்தையும் காணவில்லை.

எல்லாச் சமூகங்களின் நியாயமான தேவைகளும் காங்கிரஸின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறும். ஆனால் நாட்டின் பொதுநலவுரிமைகளுடன் முரண்படாத சில விசேஷ சிறுபான்மை நலவுரிமைகள் இருக்கக்கூடுமென்பதைக் காங்கிரஸ் உணர்ந்திருக்கிறது. அப்படியான உரிமைகளைக் காங்கிரஸ் எப்பொழுதும இயன்றவரை ஆதரிக்கத் தயாராயிருக்கிறது. மேலும் தற்போதைய தேர்தல் தொகுதிகள் சற்றுப் பெரிதாகவிருக்கிறபடியால் டொனமூர் விசாரணைச்சபையினர் ஏற்கனவே சிபார்சு செய்தபடி அவைகளின் தொகையை 65 ஆக, அதிகரிக்கவேண்டுமென நாங்கள் சிபார்சுசெய்கிறோம். இப்படிச் செய்தால் சிறுபான்மைவகுப்புப் பிரதிநிதிகளின் தெரிவுக்கு அதிக வசதியேற்படும்."

நமது அரசியல் தலைவர்களும் பொதுசனங்களும் அரசியல் சீர்திருத்த விஷயத்தில் எவ்வளவு சிரத்தையெடுத்து வருகிறார்களென்பது சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்திலிருந்து தெரியவரும்.

சேர் ஜயதிலகா, இங்கிலாந்திலிருந்து வந்திறங்கிய அதே தினத்தில் திரு. பிரான்ஸிஸ் டீ. சொய்ஸா அவர்கள், பலப்பிட்டியில் நடந்த தேர்தலில் தோல்வியுற்றார்கள். அரசியல் சீர்திருத்தத்துக்காக இவரளவு வேறெவரும் சமீப காலத்தில் உழைக்கவில்லையெனச் சொல்லலாம். டொனமூர் திட்டத்தைக் காங்கிரஸ் அங்கீகரித்ததும் இவர் (ஒரு காலத்தில் இவர் அதன் தலைவர் பதவியை வகித்தவர்) அதிலிருந்து விலகி, முதலில் லிபரல் சங்கத்தையும் பின்னர் தேசீய சபையையும் ஸ்தாபித்து நாட்டில் அரசியல் சீர்திருத்தக் கிளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தார். இந்த இரு ஸ்தாபனங்களின் முதல் தலைவர் இவரே. சென்ற பதினைந்து வருடங்களாக இவர் சனப்பிரதிநிதியாக வர முயற்சி செய்தும் இவர் இதுவரை வெற்றி பெறாதது இலங்கையரின் துரதிர்ஷ்டவசமே.

விருந்தாளிகளைக் காப்பாற்றாதார் பொருளைக் காப்பாற்றி யிழந்தோமென்பர்.

## தற்காலக் கல்விமுறை.

### திரு. K. S. அருள்நந்தி அவர்கள்:

இப்போது அனுசரணையிலிருக்கும் கல்விமுறையை முற்றாக உதவாதெனக் கண்டிப்போருடன் நான் இணங்கமாட்டேன். தற்போதைய கல்விமுறையில் சில பல குறைகள் உளவென்பது உண்மையே. அதனுல் நமது இளைஞர் நற்சீவியத்தை நடத்தச்செய்ய அது சிறிதும் உதவிசெய்யவில்லை என்று எப்படிக் கூறுவது? கல்வி விருத்திக்குத் தடையாயிருக்கும் கஷ்டங்களெல்லாவற்றையும் எதிர்த்து நீக்கக்கூடிய ஒருகுறிக்கப்பட்ட வழிகிடையாது. இப்போது கல்விகற்பிக்கும் நோக்கத்தில் மாற்றம் ஏற்படவேண்டியதே அவசியம். காலத்தையும் பலதிறப்பட்ட நிலைமைகளையும் நோக்கி அவைகட்கியைந்த ஒரு வழியை இலக்காகக் கொள்ளாவிடின் ஆசிரியர்கள் தம்மிடம் விடப்படும் மாணவரை உயர்ந்தநிலைக்குக் கொண்டுவர வியலாதவராவார். இப்போது அவசரம் ஏற்படவேண்டியது பாடத்திட்டங்களில் மாற்றங்கள் அல்ல. மாணவர்கள் நற்பழக்கமும் நடத்தையுமுடையராகக் கூடியதாய் விவேகத்தோடுகூடிய முறையில் கல்வி கற்பிப்பதே. பொதுவாக மாணவரை நன்னிலைக்குக் கொண்டுவரக்கூடிய வழிகளை ஆசிரியர்களே தேடி வகுப்பில் அனுட்டிக்கவேண்டும். சில ஆசிரியர்கள் இவ்வேலைக்கு ஆயத்தமில்லாதிருக்கலாம். ஆனுல் தகுதியும், பலநாட் பயிற்சியும். கல்வியாற்றலும் அதிகம் கைவரப்பெற்ற ஆசிரியர்கள் முன்வந்து வழிகாட்டுவது மிகப் பிரதானம்.

### திரு. க. பாலசிங்கமவர்கள்:

மாணவரின் கல்விமுறை அவர்கள் வசிக்கும் நாட்டிற்கு ஏற்றவிதமாக வகுக்கப்படவேண்டும். ஒரு தேசத்தின் செல்வநிலை அந்நாட்டின் விலைமிகுந்த நிலப்பாகத்தால் நிதானிக்கப்படுவதன்று. அந்நாட்டின் மாணவரின் கல்விநிலையிலிருந்தே மட்டிடப்படும். பசிநோய் பிடித்த இளைஞர் நன்மாணுக்கராவதெப்படி? தேசப் பெருமக்களாவது எப்படி? யாழ்ப்பாணத்தில் இறப்போர் தொகை மற்றைய பாகங்களிலும் மிகவுங் கூடவாகும். காட்டுச்சுரமே அநேகர் இறப்பதற்குக் காரணமாயிற்று. போதிய உணவு சாப்பிடாது இருப்போரே காட்டுச்சுரத்தால் பீடிக்கப் படுகின்றனர். போதிய நல்ல உணவு சாப்பிடாமையால் யாழ்ப்பாணத்தாரை வருத்தும் இன்னெரு நோய் க்ஷயரோகமாகும். யாழ்ப்பாணத்தில் இந்நோயால் 854 பேர் இறந்தனர். காலியில் 618; கண்டியில் 453; இரத்தினபுரியில் 438.

வித்தியாசாலைகளில் ஆடு, கோழிகள் மாணவர் முயற்சியால் வளர்க்கப்படின் போதிய பாலும் முட்டையும் பெறக்கூடியதாகும். வித்தியாசாலைகளில் கோழி ஆடுகள் வளர்க்க வயதிஏற்படாவிடின், மாணவர் தமது வீடுகளில் அவைகளை வளர்க்கலாம்.

### மெஸ். A. G. பிறேஸர்:

இலங்கையில் கல்வி உரிய முறையில் சித்தியடையவேண்டின் தேசபாஷை மூலமாக—கீழ்வகுப்புகளில் பிரதானமாகத் தேசபாஷை மூலமாக அது கற்பிக்கப்படவேண்டும். அவ்வகுப்புகளில் ஆங்கிலத்தைச் சம்பாஷணை வழியாகக் கற்பிக்கலாம். மாணவர் பத்தாவது வயதை அடையமுன் தமது தாய்ப்பாஷையை நன்கு கற்றுவிடுவார். ஆங்கிலத்தையும் பிழையின்றிப் பேசும் ஆற்றல் பெற்றுவிடுவார். அதன்பின் உயர்தரக்கல்வியை வேண்டுமாயின் ஆங்கிலத்திற் கற்கலாம்.

தேசபாஷை கற்பதில் அதிக நேரம் செலவழிக்கவேண்டியதில்லை. ஆபிரிக்காவிலும் நான் இம்முறையையே கையாண்டு சித்திபெய்தினேன். இம்முறையாகக் கல்வி பயிற்றிவந்ததனுல் ஒரு குறையும் ஏற்படவுமில்லை. இரு பாஷைகள் மூலமாகக் கல்வி கற்பிப்பது கஷ்டமன்று. தற்காலத்தில் உலகில் ஆங்கில பேச்சாளரில் முன்னணியில் நிற்கும் ஸ்ரீமான். ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும் தேசபாஷை மூலமாகக் கல்வி கற்று உயர்நிலையை அடைந்தவராவர். ஆபிரிக்காவில் வித்தியாசாலைகளில் மாணவர்க்குக் கைத்தொழில், கமத்தொழில் என்பன கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

## கலாசக்கரம்

தங்கள் பணிவிடைசெய்யும் வேலைக்காரன் இவ்வளவு நேரமாகியும் ஏன் இன்னமும் வரவில்லையென்று மொறுமொறுக்கும் எசமானரைப்போல, அநேகர் இன்னமும் மழை வரக்காணுேமே! என்னகாரணம்!! என்று கடுகடுத்து ஆத்திரப்படுகிறார்கள். மத்தித்தரைக்கடல் சேர்ந்த தேசங்களைநோக்கிப் பறந்துசெல்லும் விமானப்படைகளின் அதிர்ச்சியினுல் கார்கால முகில்கள் எத்துண்டு போயினவெனச் சிலர் கூறுகின்றனர். ஒவ்வொரு தேசத்திலும் அவ்வத்தேச விஸ்தாரத்துக்கேற்ற விகிதமாக மழை பெய்வதற்கும் கடலிலே மழை பெய்யாமல் தடுப்பதற்கும் சர்வதேச மகாநாட்டிலே ஓர் பிரேரணையைப் பிரேரிக்கலாமென்பதும் ஒரு நல்ல வழிதான். கருமார்த்தமாக அந்நிய நாட்டு மந்திரி உள்நாட்டு மந்திரி முதலானவர்களுக்கு யாரும் தெரிவிப்பதுபோல எமது நடேசன் மழையின்னமும் வாராமைக்குக் காரணம் யாதென மழைநாட்டு மந்திரிக்கு மனுப்பண்ணினுன். "தானம்சுருங்கின் வானம்சுருங்கும்" என்பதே மழைநாட்டு மந்திரியார் இறுத்த விடையாகும்.

*  *  *

முதலாம்மணி யடித்தது. ஆசிரியர் வகுப்பினுட் பிரவேசித்தார். பிள்ளைகள் எழுந்து வந்தனம் செய்தபின் ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

ஆசிரியர். தம்பீ! நீர் எந்தவூர்?

மாணுக்கன். ஐயா! என் ஜெனனவூர் மத்தியமாபதியாகும்.

ஆ. நீர் ஓர் செல்வச்சீமானுடைய அருந்தவப் பாக்கியம்போலக் காணப்படுகிறீர். ஆனுல் உம்மிடத்தில் பெரும் குறைவுதான் ஒன்றிருக்கிறது.

மா. ஐயா! நான் சிறுவனுதலினுல் ஒரு குறைவுமாத்திரமல்ல, அநேக குற்றங்கள் என்னிடத்துண்டு.

ஆசி. அவைகளையெல்லாம் நான் இங்கே கூறவரவில்லை. அவைகள் நீ வளரவளரத் திருத்தமடையும். வேறென்றைப்பற்றியே யான்படும் கவலையெல்லாம்.

மா. ஐயா! தயவுசெய்து அதனைக் கூறுங்கள்.

ஆ. தம்பீ! உமது நன்மைகருதியே சொல்லுகிறேன். விஷயம் இரகசியமாக விருக்கவேண்டும். நீர் எங்கள் சமயத்துட் பிரவேசிக்கவேண்டும்; எங்கள் கடவுளையே இன்றுமுதலாக வணங்குதல் வேண்டும்.

மா. ஐயா! உங்கள் கடவுள் எங்கள் கடவுள் மற்றவர்களுடைய கடவுள் என்று அபிப்பிராயப்படுகிறீர்களே! எல்லாமாகக் கடவுளின் மொத்தத் தொகை எவ்வளவாகும்?

ஆ. உமக்குப் பழக்கவழக்கம் தெரியாது. ஆசிரியர் முன்னிலையிலே எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை உமது வகுப்பிலுள்ள மாணவரைப்பார்த்து நீர் பின்பற்றிக் கொள்ளவேண்டும்.

மா. ஐயா அப்படியே செய்கிறேன். எனனிடம் கூறியதுபோல இனிமேல் எங்காவது கடவுளைப் பன்மைப்படுத்தி விடாதீர்கள்! அப்படிச் சொன்னுல் உங்களுக்கு மாத்திரமன்றி உங்களிடம் பாடங்கேட்கும் எமக்கும் ஒரு பேரவமானமாகும். (இது சிலநாட்களுக்குமுன் ஓர் கல்லூரியில் நிகழ்ந்த சம்பவமாகும்.

உலகத்திலுள்ள எல்லா அணைகளிலும்பார்க்க அமெரிக்காவிலுள்ள "போல்டர்டாம்" என்னும் அணையே மிகப்பெரியதாம். இப்பொழுதுதான் இந்த அணைவேலை முற்றுப்பெற்றதாம். பிரமாண்டமான இந்த அணை 41,500,000,000 தொன் நிறையுள்ள தண்ணீரைக் கொள்ளக்கூடியதாக விருக்கிறது. குறித்த ஏரியில் நீர் நிரம்புமானுல் அமரிக்கதேசம் அதன்பாரத்தைத் தாங்கமாட்டாது கவிழ்ந்துவிடுமோ என்னும் கவலையுற்றவர்களாக அங்குள்ள பூகோள ஆராய்ச்சி நிபுணர் யோசனைசெய்கிறுர்களாம். அப்படியான விபத்து நேராவண்ணம் மற்றப்பக்கத்திலும் ஓர் பெரிய அணையை அமைக்கலாமென்பது எமது யோசனையாகும். அல்லது அகத்தியமுனிவரை மற்றப்பக்கத்துக்கு அழைத்துக்கொண்டு போனுலும் போதும். * *

மேல்நாட்டுச் சைவத்தின் துரித விருத்திக்கு இன்றியமையாத் துணையாளராயிருப்பவருள் சித்தூர்ப்பண்டிதரும் ஒருவராவர். இவர் இப்பொழுதுதான உதயகிரியிலிருந்து புறப்பட்டு வெளிவருகின்றுர். அருந்தவஞ்செய்து படாப்பாடுபட்டுப் பெற்று வளர்த்தெடுக்கப்பட்ட புத்திரனெருவன், தன்பிதா இறந்தபின் தானும் அப்பிதாவுக்குக் கொள்ளி வைத்தல் அதிபாதகமாகுமென்று வாதாடுகின்ற வட்டச் சைவரின் வழித்தோன்றலாக இவர் வந்துள்ளார். குறித்த பண்டிதர் இப்பொழுது பெரிய புராணத்தை விரித்துவிளக்கிக் குறிப்புரையும் வரைதலாகிய தொழிலிலீடுபட்டிருக்கின்றுர். இவர் வெளியிடும் குறிப்புகளுட் சிலவற்றை இங்கே தருகின்றேம்:— "கோட்புலி நாயனுரும் மிகக்கொடிய பாதகரேயாவார். .......... தாய்தந்தையரை வதைத்தது ஒருபுறமிருக்க, ஒன்றுமறியாத சிசுவை சோறுண்டவளின் பாலையுண்டது என்று அதனையும் கொன்ற இவரறிவை என்னென்பது! .........."

"கழற்சிங்கநாயனுர்,.......... இவர் சிவனடியாரென்னும் பெயருக்குரியவருமன்று. பெரியார் வகுப்பில் ஒருவராக மதிக்கப்படத் தக்கவருமன்று."

இவரினும்பார்க்க வீரரான தீரர் பலர் இன்னும் வருகிறுர்கள்; பின்னும் வருகிறுர்கள். ஆனுல் இவர் மிகவும் பிந்திவிட்டார்; இப்பொழுது "நாளல்லாநாட்பூத்த நன்மலரு" மாயினுர். எமது பண்டிதர் சுந்தரமூர்த்தி நாயனுர் காலத்தில் வந்திருந்தால் திருத்தொண்டத் தொகையருளும் உத்தியோகம் இவருக்கே கிடைத்திருக்கும். அல்லது சேக்கிழார் நாயனுர் காலத்தில் வந்திருக்கலாம். அதையும் கைவிட்டுவிட்டார். ஐயோ பாவம்! இவர் இரண்டுங்கெட்டா ரென்பதே எமது விசனமாகும். இந்த அடியார்களுக்குப் பெரும்பேற்றைக் கொடுத்தருளிய ஒரு பெரும் பொருளைப்பற்றி யாதும் கூறுது விட்டமையும் வருந்தத்தக்கதாம். பண்டிதரைப்பற்றிய விஷயம் இவ்வளவுடன் முற்றுப்பெற்றது.

### 'லைசென்'சில்லாது மாடு வெட்டியதற்கு 50 ரூபா அபராதம

யாழ்ப்பாணம் பொலீஸ் கோட்டில் பொலீஸ் நீதிபதி திரு. K. கனகசபை முன்பாக, சென்ற ஆவணி மாதம் 22-ந்திகதியன்று லைசென்சில்லாமல் மாட்டை வெட்டியதாக, சோனக தெருவைச் சேர்ந்த தம்பி மரைக்காயர் சுல்தான் காதர் என்பவர் மீது சனிற்றறிஇன்ஸ்பெக்றர் திரு. V.M. கதிர்காமர் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு சென்ற 23உ விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஈற்றில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ரூபா50 அபராதம் விதித்தார். ந. நி.


## லங்கா பினன்ஸ் கம்பெனி

**The Lanka Finance Company**

**Kankesanturai Road, Grand Bazaar JAFFNA**

காரியாலயம் :

காங்கேசன்துறை ரேட்டு, பெரியகடை, யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புச்சீட்டுகள் இப்போது அமைக்கப்படுகின்றன :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | வகு. | ரூ. 1000/- | ரூ. 40/- | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | ,, | ,, 500/- | ,, 20/- | ,, | 25 | ,, |
| C | ,, | ,, 250/- | ,, 10/- | ,, | 25 | ,, |
| D | ,, | ,, 125/- | ,, 5/- | ,, | 25 | ,, |
| E | ,, | ,, 75/- | ,, 3/- | ,, | 25 | ,, |
| F | ,, | ,, 100/- | ,, 10/- | ,, | 10 | ,, |
| FNC | ,, | ,, 250/- | ,, 10/- | ,, | $12\frac{1}{2}$ | ,, |
| WC | ,, | ,, 250/- | ,, 5/- | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | ,, | ,, 125/- | ,, 5/- | ,, | 25 | ,, |
| தினசரி B1&2 | ,, | 100/- | ,, 1/- | ,, | | |

கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி வேண்டிய விபரங்கள் அறிந்துகொள்ளலாம்.

மனேஜர், லங்கா பினன்ஸ் கம்பெனி,
காங்கேசன்துறை ரேட், யாழ்ப்பாணம்.

(33) 22-9-35


உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா, மடமை மடவார்க ணுண்டு.

# இந்தியச் செய்திகள்.

### அடுத்த காங்கிரஸ் தலைவர்

அடுத்தவருடக் காங்கிரஸ் தலைமையை யார் வகிக்கும் தகுதியுடையரென்பது இப்போது ஆலோசிக்கப்படுகின்றது. ஸ்ரீமான் C. இராசகோபாலாச்சாரியார் மறுபடியும் அரசியல் விஷயங்களில் புகுந்து காங்கிரஸ் தலைமையை வகிப்பாரென யாவரும் எண்ணினர். அவர் தமது ஆரோக்கியக் குறைவு காரணமாக முற்றாக மறுத்துவிட்டனர். இப்போது இவ்விஷயம் வார்டாவில் ஆலோசிக்கப்பட்டதாகவும், மகாத்மாகாந்தியடிகளும் பண்டிதர் ஜவகர்லால்நேரு அவர்களே ஏற்றவரெனக் கருதுவதாகவும் கூறப்படுகிறது. மற்றைய காங்கிரஸ் தலைவர்களும் அப்படியே கருதுகின்றனராம். பல விஷயங்களையும் நோக்குங்கால் பண்டிதரே ஏற்றவரெனக் காணப்படுகின்றார். காங்கிரஸ் புதிய கட்சியினர்களை அடக்கியாளும் சக்தி அவர்க்குண்டென்பதில் சந்தேகமின்று.

### மகாத்மா இடம்மாறுகின்றார்

சென்ற ஒருவருடமாக மகாத்மா காந்தியடிகள் மத்தியமாகாணத்திலுள்ள வார்டா நகரை மத்தியஸ்தானமாக்கிக்கொண்டு தமது கடமையை ஆற்றிவந்தனர். டிசம்பர்மாத முடிவுடன் அவ்விடத்தை விட்டகலப்போவதாகப் புதினங்கள் கூறுகின்றன. பம்பாய் காங்கிரஸ்வாதிகள் மகாத்மா மறுபடியும் காங்கிரஸ் சபையிற் கலந்து தொண்டாற்ற முன்வருவாரென எதிர்பார்க்கின்றனர். வார்டா நகரை விட்டு எவ்விடத்தில் சென்று வசிப்பாரென்பதும் இன்னும் அறியக்கூடியதாயில்லை. மகாத்மா காந்தியடிகள் முன்வந்து மற்றைய தொண்டர்களுடன் கலந்து தொண்டாற்றினாற்றான் தற்போது தூக்கமடைந்துள்ள சுதந்தரப்போர் புத்துயிரைப் பெறுமென கர்நாடகதேச காங்கிரஸ் தலைவராகும் கங்காதரராவ் தேசபந்தே என்பவர் கூறினர்.

### கண்டிக்கின்றனர்

இராசப்பிரதிநிதியால் அவசியமென நற்சாட்சிப் பத்திரம்பெற்று சட்டமான அடக்குமுறைச்சட்டம், அனுட்டானத்துக்கு வரின் பெருங்கெடுதிகளை விளைக்குமெனவும் பிரதானமாக இந்தியப் பத்திராதிபர்கள் தங்கள் கடமைகளைச்செய்ய வியலாதவராவரெனவும் இந்தியப் பத்திராதிபர் சங்கத்தினர் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். இச்சட்டத்தை நாம் கண்டிப்பதற்கு அறிகுறியாக இம்மாதம் 27-ந் திகதி இந்தியப்பத்திரிகைகள் ஒன்றும் வெளிபிடாதிருக்கும்படியும் தீர்மானித்தனர்.

### கட்டளையை மீறியதற்காக

கல்கத்தா வாசியாகும் ஸ்ரீமதி. பரல்பாலு மூக்கர்ஜி என்னும் மாது நீதிமன்றத்தில் வெளிப்படும்படி அரசினர் விடுத்த கட்டளையை மீறி மறைந்திருந்தனர். பின்னர் கைதியாக்கப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டனர். அரசகட்டளையைமீறியதற்காக அம்மாது (18-வயது) ஒரு வருடக் கடுங்காவற் சிறைவாசம் கல்கத்தா நீதிபதியால்விதிக்கப்பட்டனர்.

### ஸ்ரீமதி கமலாநேரு

பண்டிதர் ஜவஹர்லால்நேரு அவர்களின் பாரியாராகும் ஸ்ரீமதி கமலாநேருவின் தேகாரோக்கியம் இன்னும் நன்னிலையடையவில்லையாம். பண்டிதர் பக்கலில் நிற்பது கமலாநேருவுக்குப் பெரும் ஆறுதலைக் கொடுக்கின்றதாம். மாலையில் சுரம் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. இப்போது பழச்சாறே அவர்க்கு ஆதாரமாகிறது.

பண்டிதர் ஜவஹர்லால்நேரு இடை நேரத்தைத் தாம் எழுதிய ஓர் புத்தகத்தைத் திருப்பிப் பரிசீலனை செய்வதில் செலவழிப்பாராம். அப்புத்தகம் விரைவில் லண்டனில் ஒரு கம்பெனியாரால் அச்சிடப்படும். சுபாஷ்சந்திரவஸு அவர்களும் இடைக்கிடை சென்று நோயாளரைப் பார்க்கின்றாராம். கனம். C. F. அன்ட்றூஸ் அவர்கள் வருகையும் அங்கே எதிர்பார்க்கப்படுகிறது.

எப்படியாயினும் கமலாநேருவின் ஆரோக்கியம் நன்னிலையை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### காங்கிரஸ்தலைவரின் தென்னிந்திய யாத்திரை.

காங்கிரஸ் தலைவராகும் பாபு இராசேந்திரப்பிரசாத் விரைவில் சென்னைவந்து சேருவாரெனக் கூறப்படுகின்றது. இவர் முன்னர் இருமுறை தென்னிந்தியாவிற்கு வந்துள்ளார். 1921-ம் வருடம் மகாத்மாவுடனும், பின் 1926-ம் வருடத்திலும் சில விடங்களைத் தரிசித்துள்ளார்.

பட்டாபிசீதாராமய்யா எழுதியுள்ள காங்கிரஸ் வரலாறு இப்போதும் காங்கிரஸ் தலைவரால் பரிசீலனை செய்யப்படுகிறது. அது விரைவில் சென்னையிலச்சிடப்படும். காங்கிரஸ் பொன்விழா இந்தியாவில் மாத்திரமன்று வேறும் இந்தியர் வசிக்குமிடங்களில் இவ்விழா நிகழவேண்டுமென்பது காங்கிரஸ் தலைவரின் அபிப்பிராயம். அதாவது அமெரிக்கா, யப்பான், சீனம், மலாய்நாடு, தென்னாபிரிக்கா என்னும் நாடுகளில் கொண்டாட்டம் நடைபெறுமாம்.

இந்தியாவினைப்பற்றி அமரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பிரசங்கஞ் செய்வதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்வதைப்பற்றியும் சென்னையில் கூடவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும். இதைக் குறித்து ஒரு திட்டம் தயாரிப்பது அவசியமெனக் காங்கிரஸ் தலைவர் கூறினர்.

### தொழிலாளர் தலைவர்க்குச் சிறைத்தண்டனை.

பம்பாயின் பிரபலதொழிலாளர் தலைவராகும் ஸ்ரீமான் R. S. நிம்கார் அவர்கள் சென்ற ஜூன் மாதம் முதலாந் திகதி சென்னையில் ஓர் அரசியற் பிரசங்கஞ் செய்தனர். அது இராசத் துரோகமானதெனப் பொலிசார் இவர்மீது வழக்குத் தொடுத்தனர். இப்போது அவ்வழக்கு விளங்கப்பட்டு நிம்கார் குற்றவாளியாகக் காணப்பட்டமையால் நீதிபதியால் இவர்க்கு ஆறுமாதக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டது. சென்ற சில வருடங்களாக நிம்கார் சிறையில் இடைவிடாது வசித்துவருகின்றனர். ஆபேதவாதக் (Communis) கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டதாக முன்னர் இவர் குற்றஞ் சாட்டப்பட்டு பலவருடம் விளக்கமறியலிலிருந்து பின் சிறைத்தண்டனையடைந்து பின் விடுதலை பெற்றனர். இவர் ஓர் காங்கிரஸ்வாதி. இப்போது அளிக்கப்பட்ட தீர்ப்புக்குமாறாக உயர்தர நீதிமன்றத்தினர்க்கு மனுச் செய்துள்ளார்.

### லாகூரில் வகுப்புக்கலகம்

லாகூரிலுள்ள ஷாஹிட்கஞ் என்னும் சீக்கிய ஆலயப் பிரகாரத்திலுள்ள ஒரு பள்ளிவாசலையும் ஒரு கல்லறையையும் சீக்கியர் இடித்தநாட் டொட்டுப் பெருங்கலகமாகவே யிருக்கிறது. இவைகளை இடித்ததைக்குறித்து இரு வழக்குகள் சீக்கியர்மீது நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருக்கிறது. இடித்த குற்றத்திற்காக 14 சீக்கியர் கைதியாக்கப்பட் டிருக்கின்றனர். விரைவில் விசாரிக்கப்படுவர். இது ஒருவாறாக, மகமதியர் தாம் இனி சீக்கியா இந்துக்கள் என்போரது கடைகளிலிருந்து ஒரு பொருள்களும் விலைக்குப பெறுவதில்லையென்று முடிவுசெய்துள்ளார். இந்துக்களும் சீக்கியரும் ஒருங்குசேர்ந்து மகமதியரை முற்றாகப் பகிஷ்கரிக்கவேண்டுமென முடிவுசெய்துள்ளார். இவ்வாறு இவ்வகுப்பினர் முடிவுசெய்தமையால்அநேக கெடுதிகள்வருமெனக் காங்கிரஸ் தலைவர்கள் கருதுகின்றனர்.

மாகாணக காங்கிரஸ் சபை கூட்டப்பட்டு இவ்விதபிரச்சினைகளை எதிர்த்துப் பிரசாரஞ் செய்யும்படி காங்கிரஸ்வாதிகட்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

# சுற்றுடல்.

—"வாராந்தன்."

சேர் டீ. பீ. ஜெயத்திலக்கா சென்ற சனிக்கிழமை காலை ஐரோப்பாவிலிருந்து கொழும்புவந்துசேர்ந்துவிட்டார். இவர் இததாலிய—அபிசீனிய யுத்தம் தொடங்காவிடில் இலங்கைக்கு நிச்சயமாக அரசியற்றிருத்தம் கிடைக்குமெனக் கூறியிருக்கிறார். இவர் ஓர் சிறந்த அரசியல்வாதி. ஆகையால் யுத்தம் நிச்சயமாகத் தொடங்குமென்ற எண்ணத்துடன் இதைக் கூறியிருக்கலாம். யுத்தம் தொடங்குமாகையால் இலங்கைக்கு அரசியற்றிருத்தங் கிடையாது என்று கூறுதலமையும். இவர் பாராளுமன்ற அங்கத்தவர்களுடனும் குடியேற்றநாட்டு மந்திரியுடனும் இலங்கை யரசியல் விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தாராம். அவர்களும் அனுதாபத்துடன் அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தார்களாம். ஆனல் இவ்வித அனுதாபங்காட்டுவது அரசியல் ஞானம் படைத்தவர்களின் ஓர் பெருங்குணமாகும்.

* * *

### கடேந்தியானம்

நமது சேர் ஜெயத்திலக்கா தமது முழுததியானத்தையும அரசியல்விஷயஙகளிலேயே செலுத்தி வருவார். இவரது காலஞ்சென்ற மனைவியார் இவரைப்பற்றிச் சிலவிஷயங்களை ஒருபோது வெளியிட்டார். இவர் எந்த நேரமும அரசியல்விஷயமாக யோசனைசெய்தபடியே யிருப்பாராம். 'இவர் தாம் சாப்பிடுவது எனனவென்பதும் சிலசமயங்களில் தெரியமாட்டாதாம். ஏதோ மனதில் யோசனைசெய்தவண்ணம் சாப்பிடுவாராம். சாப்பிட்டு முடிந்ததும் என்ன சாப்பிட்டாரென்பதற்குப் பதிலளிக்கவியலா திருப்பாராம். இவர் மதுவிலக்கு முயற்சியில் பெரிதும ஈடுபட்டவர். அக்காலததிலொருநாள் குடிவகைசேர்ந்த மருந்து இவரதுவீட்டிலிருந்தது. அதை எண்ணெயெனவெண்ணித் தலையில் தப்பிக்கொண்டார். இவரில் மதுமணம் அதிகமாக வீசிற்று. இவரது மனைவியார் இதைக் கண்டதும் போதியளவு சிரித்து அதைத் துடைத்துவிட்டார். மனைவியார் இதைக் கவனியாதிருப்பரேல் இவரது நண்பர் இவரைப்பற்றி என்ன யோசிப்பார்கள்? மதுவிலக்கில் ஈடுபட்ட ஜெயத்திலக்கா தலைக்குத் தப்புவதும் குடிவகையானல்........

* * *

### இல்லாத பொருளே அருமை

ஒருவரின் மகிமை அவர் இறந்தபின்னரே புலப்படுமென்று சிலர் சொல்வார்கள். இத்தாலிய—அபிசீனிய விஷயத்தையிட்டு ஒருவராலும் ஒன்றும் சொல்லவியலாதிருக்கின்றது. சோதிடர்கள் பலர் பலவாறாகக் கூறுகிறார்கள். ஆனல் யாழ்ப்பாணத்திற்பிறந்த ஒருவரைப்பற்றி இங்கு குறிப்பிடுதல் அவசியமாகின்றது. இவர் எதிர்கால விஷயங்களை அறிவதில் பெரும் ஞானம்படைத்தவர். இவர் இன்று உயிர்வாழ்ந்திருப்பரேல் யுத்தவிஷயத்தை நாம் முன்னரேயறிந்துகொள்ளலாம். இத்தாலிய—அபிசீனிய விஷயத்தையிட்டு முன்னரே அறிவதற்கு இன்று "புறபெசர்" குமாரசுவாமி அவர்களேவேண்டும்!

* * *


### கோமகனும் குமாரசுவாமியும்

இந்தப் "புறபெசர்" குமாரசுவாமி என்பவர் உடுப்பிட்டியிற் பிறந்தவர். சென் தொமஸ் கல்லூரியில் பயிலும்போது இரகசியமாக இந்தியாவுக்குச் சென்றார். சோதிடத்தில் பெரும்புகழ் படைத்த ஞானி ஒருவர் இவரைத் தமது மாணவனாகத் தெரிந்தெடுத்தார். தற்போது இந்திய இராசப்பிரதிநிதியாயிருப்பவரும் அப்போது சென்னைத் தேசாதிபதியாயிருந்தவருமான விலலிங்டன்பிரபு இலஙகையில மனிங் தேசாதிபதியுடன் சிலகாலந்தங்கியிருந்தார். "புறபெசர்" குமாரசுவாமி விலிங்டன் பிரபுவுக்குக் கூறிய சில விஷயங்கள் அவரை அதிசயிக்கச்செய்தது. அவர் உடனே அப்போது இந்திய இராசப்பிரதிநிதியாகவிருந்த செல்ம்ஸ்போட் பிரபுவுக்கு ஓர் அறிமுகக் கடிதம் கொடுத்தார். இதைக்கொண்டு இந்தியாவுக்குச்சென்று அவ்வமையம் அங்குவந்திருந்த முடிக்குரிய வேல்ஸ்கோமகனையுஞ் சந்தித்தார். புத்திரபாக்கியமில்லாது வருந்தியவோர் மகாராசாவுக்குக் குறிதத தினத்தில் ஓர்பெண்மகவு பிறக்குமெனக் கூறினர். அப்படியேநடந்தேறியது. மகாராசா 40,000 ரூபாவை வெகுமதியாக இவருக்களித்து மாதவீதம் 400 ரூபா சீவியகாலம்வரைக்கும் உபகாரசசம்பளமாகவுமுதவினர். இவர்செய்த சோதிட அறபுதங்கள் அளப்பில. ஆயினும் இங்கு கூறுதல் அமையா.

* * *

### 40 வருடங்களின் முன்.......

சென்றகிழமை களுத்துறையில் பொலிஸ்நீதிபதிக்கும் ஓர் வழக்கறிஞர்க்குமிடையில் பெருமவிவாதமேறபட்டதெனப் புதினங்கள் கூறின. வழக்கறிஞர் நீதிபதிமீதும் பொலிஸ் சார்ஜண்டுமீதும் வழக்குவைத்தாராம். ஆனல் உதவி நீதிபதி முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் அவ்விஷயத்தைக் கண்ணாரக் காணவில்லை. ஆதலால் அதைபபற்றி யொன்றுங் கூறாது 40 வருடங்களுக்குமுன் நடந்த இதுபோனற ஓா சமபவத்தை இங்கு குறிப்பிடுவோம். சிவில்சேவிஸ் உதத்யோகத்திலிருந்து பிரதம அரசியற் காரியதரிசியாகி பின்னர் உயர் பதவிபெற்ற ஆஸ்மூர் என்பவர் கண்டிப் பொலிஸ்நீதிபதியாகவிருந்தபோது ஒரு வழக்கறிஞருக்கு மிவருக்குமிடையில் பிணக்கு ஏற்பட்டது. நீதிபதி உடனே வழக்கறிஞரை வெளியேபிடிததுவிடும்படி பொலிஸ் சார்ஜண்டிடங்கூறினர். அப்படியேநடந்தது. பின்னர் இந்த வழக்கறிஞர் நீதிபதி மீதும் சார்ஜண்டுமீதும் முனிசிப்பல் கோட்டில் வழக்குத் தொடர்ந்தார், நீதிபதிக்கு 10 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஆனல் முனிசிப்பல் கோடு பொலிஸ் கோட்டு விஷயததைக் கையாள அதிகாரமில்லையென அப்பீலில்தீர்ந்தது. ஆயினும் அப்பீல் நீதிபதி பொலிஸ் நீதிபதியின் நடத்தையை அங்கீகரிக்கவிலலை. நாறபது வருடங்களாக இல்லாதிருந்த சம்பவம் பின்னர்தொடங்கியிருப்பதையிட்டு அனுதாபப்படவேண்டி யிருக்கிறது.




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவ௵ புரட்டாதி௴ ௧௩௳

## விசேஷ உரிமைகள் வேண்டுமாம்!

அரசாங்கசபை யங்கத்தவருக்கு மற்றையோரைப் போலன்றி எத்தனையோ விசேஷ அதிகாரங்களும் உரிமைகளும் உண்டு. அவைகள் சனங்களின பிரதிநிதிகள் என்றமையால் அவர்கட்குக் கௌரவம் ஏற்படுவது முறைமையே யாகும். இவ்விதவுரிமைகள் இப்போது ஏற்பட்டனவன்று. சட்டசபைகள் ஏற்பட்ட காலந்தொட்டே இருந்துவருகின்றன. இப்போது சில அரசாங்கசபை அங்கத்தவர் தமக்குள்ள உரிமைகளும், அதிகாரமும், பாதுகாப்புகளும் போதியதாயில்லையென்றும், இன்னும் அநேக உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் கருதி ஒருபுதிய திட்டத்தை அரசாங்க சபையில் கொணர்ந்து நிறைவேற்ற எத்தனிக்கின்றனர். அத்திட்டம் விரைவில் அரசாங்கசபையில் விவாதிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டத்தின் அம்சங்கள் முன்னரே வெளியிடப்பட்டுள்ளன. அவைகள் சட்டமாக நிறைவேற்றப்படின் அநேக தீமைகள்வந்தெய்துமென்பதை நாம் முன்னரே எடுத்துக்காட்டியுள்ளோம்.

இப்போது அத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றிவிடவேண்டுமென்பது சில அரசாங்கசபையினரின் பிடிவாதமாகிறது. பொதுநீதிக்குப்பயந்து, நடுநிலைகுன்றாது, சுயநலத்தைநாடாது, தேசவிருத்தியையே சதா தியானமாகக்கொண்டுள்ள அங்கத்தவர் தமக்கு விசேஷ பாதுகாப்புகள் வேண்டுமெனக்கங்கணங்கட்டிநிற்க வேண்டியதில்லையே. பொதுநலத்தை மறந்து, அரசாங்க சபையில் தாம் அங்கத்தவரென்ற துணிவுடன் அநீதியான செயல்களைச்செய்து பொருளீட்டுதற்குவழி பார்த்துநிற்கும் அங்கத்தவ ரிருப்பின் அவர்க்கே பாதுகாப்புகள் வேண்டும் என்போம்.

அரசாங்கசபை ஏற்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாயின. அது குலைக்கப்பட வேண்டியகாலம் அடுத்துவருகின்றது. இதற்கிடையில் இத்திட்டத்தை நிறைவேற்ற எண்ணுவதின் நோக்கம் யாது? தம்மைத் தெரிந்தனுப்பிய பொதுசனங்களின் அபிப்பிராயத்தை இவ்விஷயத்தில் அங்கத்தவர் உசாவினரா? பொதுசனங்களின் அனுமதியைப்பெற்றன்றோ இந்தக் கெடுதியை விளைக்கும் சட்டத்தைநிறைவேற்ற முன்வரவேண்டும். அடுத்த அரசாங்கசபையில் இவ்விஷயம் விவாதிக்கப்படுவதே உசிதம். தெரிவு காலங்களில் இச்சட்டத்தைச் சனங்கட்கு விளங்கச்செய்து அவர்கள் விருப்பத்தையும் அறிந்துசெய்வதே முறையும் பொருத்தமுமான விஷயமாகும். அவ்வாறன்றி அரசாங்கசபை முடிவுகாலத்தில் இச்சட்டத்தை நிறைவேற்றி யாவருடைய வாய்க்கும் பூட்டுப் போட்டுவிட்டுத் தமது நாடகத்தை நடத்தலாமென அங்கத்தவர் எண்ணுவது பெருந் தவறாகுமல்லவா?

அரசாங்கசபையில் இப்புதிய திட்டம் சட்டமாக நிறைவேற்றப்படின் வரும் அலங்கோலங்கட்களவின்றாகும். இப்போது ஓர் அங்கத்தவரைப் பத்திரிகைகாரர் அல்லது வேறெவராவது குறைகூறிப் பொய்யபவாதங்கிளப்பின் அவ்வங்கத்தவர் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்துத் தம்மை நியாயமின்றிக் கண்டித்தோர்க்குத் தண்டனை வருவிக்கலாம். இதே ஏற்றவழியும் முறையும். ஆனால், இப்போதுகொண்டுவரப்பட்ட திட்டம் நிறைவேற்றப்படின், அரசாங்கசபைத்தலைவர்குறைகூறினோரை அழைத்துத் தாமாகத் தண்டிக்கும் உரிமையைப்பெறுகின்றார். அதாவது வழக்காளியும், நீதிபதியும், சிறைவைப்பவரும் ஆகிய எல்லோரும் ஒருவராகின்றனர். வேலிக்கு ஓணான் சாட்சிகூறியவாறு அரசாங்க சபையினர் வழக்காளிகளாக, அவர்களையே வழக்குத் தீர்ப்புச் சொல்லும்படி எப்படிவிடுவது? விஷயத்தை உற்றுநோக்கின் அரசாங்க சபையினர்க்கும் அவர்கள் தலைவர்க்கும் (Speaker) உள்ள அதிகாரம்உயர்தர நீதிமன்றத்தினர்க்கும் இல்லையாகுமென்றே கூறவேண்டும். உயர்தர நீதிமன்றத்தினர் தீர்வைக்கும் மனு (Appeal) உண்டு. அரசாங்கசபைத் தீர்வைக் கதுவும் கிடையாது.

மேலும் அரசாங்கசபையதிபர்க்கு நீதிமன்றங்களில் அரசாங்க சபையங்கத்தவர்க்கு மாறாக வழக்குகள்தொடுக்கப்படின் அதை நிற்பாட்டவும் அதிகாரமுண்டு. இவ்வளவு பாதுகாப்புகள் இவர்கட்கேனோ? விஷயங்களைப்பார்த்தால் அரசாங்க சபையங்கத்தவர் வேறுபிறவிகளாகின்றனர். அவர்கள் மனிதர் அல்லப் போலும். இவ்வளவு அதிகாரங்கள் வழங்கப்படின் பொதுசனங்கள் வாழ்க்கையும் பங்கமடையுமே. மேலும் நீதிமன்றங்களின் நடபடிக்கைகளிலும் அரசாங்க சபையினர் தலையிடின் நீதிபரிபாலனம் எப்படி நன்கு நிலைபெறும்? இத்துடன் நில்லாது பத்திரிகைகட்கே பெருமாபத்து உண்டாகின்றது. அரசாங்க சபையங்கத்தவர் போக்குகள் பொதுசன விருத்திக்கு மாறாயின் அவர்களைக் கண்டிப்பதும் கஷ்டமாகிறது. ஒரு தேசத்தின் அரசியல் வாழ்க்கை, சமயவளர்ச்சி, நாகரீக வளர்ச்சி என்பன பத்திரிகைகளின் உதவியின்றி முன்னேறுமா? அன்று. பத்திரிகைகட்கும் இப்புதிய சட்டம் வாய்ப்பூட்டிடுகின்றதன்றோ? இப்படிப் பத்திரிகைகள் நசிக்கப்படின் பின் என்னதான் நன்னிலையடைய முடியும்? பத்திரிகைகள் ஏதாவது மாறாகஎழுதின் நீதிமன்றங்களில் அவைகட்குப் பரிகாரம்இருக்க, தாமே அப்பரிகாரத்தைச் செய்யமுற்படுவது அரசாங்க சபையினர்க்குப் பெரும் இழுக்காகாதா?

இவ்விதமான கெடுதியை விளைக்கும் சட்டம் இப்போது நிறைவேற்றப்பட வேண்டிய அவசியத்தைச் சிறிதும் காணோம். அடுத்த தெரிவில் இத்திட்டத்தின் அம்சங்களைப் பொதுசனங்கட்கு விளங்கச் செய்யின் அவர் தங்கள் சம்மதத்தையும் தெரிவிப்பர். சனங்கள் விருப்பத்தை மேற்கொண்டு தெரிவில் சித்தியடைவோர் பின் வேண்டியதைச் செய்யலாம். இப்போது அரசாங்கசபை யங்கத்தவர் நியாயம் சிறிதுமின்றித் தாம நினைத்தபடி செய்யமுற்படுவதை நாம்முற்றாகக் கண்டிக்கவேண்டியிருக்கிறது. அதிகாரம் கிடைத்துவிடின் அதை அலங்கோலமாகப்பாவிப்பதா? பொதுசனங்களின்பிரதிநிதிகள் பொதுசன அபிப்பிராயத்தை மீறின் அதிலும் நம்பிக்கைத்துரோகம் வேறு யாது? தங்கள் எண்ணங்களைச் செய்துமுடித்தற்கு இத்திட்டம் அவசியமென எண்ணி, இவர்கள் பொதுசன அபிப்பிராயத்தை உதறித்தள்ளக்கூடும். அப்படியாயின் தேசாதிபதி தேசத்தவரின் விருப்பத்தை மட்டிட்டறிந்து மேற்படி திட்டத்தை அங்கீகரியாது விடுவாராக. இத்திட்டத்தை யாழ்ப்பாணப் பொதுமக்கள் மகாசபைகூடிக் கண்டித்துள்ளார். யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் யாதுசெய்ய வேண்டுமென்பதை நாம் கூறவேண்டியதில்லை. நான்கு வருடமும் வாளாவிருந்துவிட்டு அடுத்ததெரிவுக்குத்தமக்குஉறுதுணையாகுமென வெண்ணி அங்கத்தவர் செய்யும்சேட்டைக்கு அரசினரிடங் கொடாதிருப்பாராக. அரசாங்க சபையினர் செய்யும் அலங்கோலங்கட்கு எப்போதான் முடிவுவருமோ?

# தலைப்பாரமெய்திய இத்தாலி

## பிரிட்டிஷார் ஆயத்தத்தைக்கண்டு திகைத்தல்

## பிரான்சியமந்திரியாரின் திடமானஉறுதிமொழி

### சர்வதேசசங்கப் பிரச்சினைகள் அபிஸீனியாவால் ஏற்கப்பட்டன

## இத்தாலியர் உதவாதெனக் கூறியுள்ளார்

### இன்னும் அதிகம் மாற்றங்கள்செய்தால் தாம் அங்கீகரிப்பாராம்.

சர்வதேச சங்கத்து ஐவரடங்கிய நிருவாக சபையினர் தயாரித்து அனுப்பிய திட்டம் முன்னரே வெளியிடப்பட்டது. அத்திட்டத்தை அபிசீனியர் சிறிதும் முரணின்றித் தாம் ஏற்பதாக சர்வதேச சங்கத்திற்கு அறிவித்துவிட்டனர். இத்தாலியரோ அதைத் திருப்பித்திருப்பிப்பார்த்தும் தமது கோரிக்கைகள் முற்றாக வழங்கப்படாமையைக்கண்டு ஆவேசம் அடையலாயினர். இத்தாலிய அரசியல் மந்திர சபை (Cabinet) நீண்டநேரமாலோசித்து சர்வதேசசங்கத்தினர் திட்டத்தை ஏற்கமுடியாதென உதறித்தள்ளினர். அத்துடன் கூறிவிட்டுநிமிர்ந்துநின்றாற் காரியமின்று. முசோலினி ஒன்றும் பேசாவிடினும் மற்றைய மந்திரிமார் சிறிதுபேச ஆரம்பித்தனர். சர்வதேச சங்கத்தினர் இத்தாலியரைத் திருப்திசெய்யக் கூடியதாக முடிவுசெய்யும் பிரேரணைகளை தாம் எதிர்பார்ப்பதாகக் கூறுகின்றனர். இத்தாலியர் திட்டத்தில் விருப்பமில்லாதவராயின் உடனே யுத்தத்தைக் கிளப்பாரா? உட்கூதலும் பயமும் ஏற்பட்டது. காரணம் யாது?

* * *

பிரிட்டிஷார் சர்வதேச சங்கத்தின் கௌரவத்தைக்காக்கமுன்வந்தனர். பிரான்சியர் தாமும் ஆயத்தமென்றனர். தமது யுத்தகோலத்தையும் ஆயத்தங்களையும் காட்ட ஆரம்பித்தனர். மத்தித்தரைக்கடலில் மோல்டா தீவிலுள்ள கடற்படை ஸ்தானத்தில் துருப்புகளைக் கொண்டுசென்று இறக்கினர். சூயெஸ்கால்வாயின் வடகோடியிலுள்ள போட்செட் நகரில் 20 யுத்தக் கப்பல்களை நிரையே நாட்டினர். ஜிப்ரோல்றரில் வேண்டிய பாதுகாப்புகளைச் செய்து பெலப்படுத்தினர். ஜிப்ரோல்றரில் வசிப்போர் இரவில் பிரகாசமுள்ள விளக்குகள் பாவிக்கக்கூடாதெனவும் நன்றாக மறைத்து மெழுகுவர்த்தி விளக்குகளே பாவிக்க வேண்டுமென்றனர். யுத்தக்கப்பல் நிற்குமிடங்களில் ஆகாயக்கப்பல்களும் பல நிறுத்தப்பட்டன. இதைக் கண்ட இத்தாலியர் யாது செய்வர்? முசோலினியும் திமிர்முறிந்து யோசித்தனர்.

* * *

ஜனீவாத்திட்டம் (சர்வதேசசங்கம்) போதியதாயில்லை என்ற பேச்சு இத்தாலிய தூதரால் எழுப்பப்படுகின்றது. இன்னும் சில உரிமைகள் அளிக்கப்படின் முசோலினி திருப்தியடைவர்போலும். பின் எப்படி முடியினும் முசோலினி இப்போது சிறிது சோர்வடைந்தார்தான். எப்படியாயினும் இன்னும் புதுப்புதுத் துருப்புக்கள் அபிசீனியாவுக்கு இத்தாலியர் அனுப்பியவண்ணமாகவே யிருக்கின்றனர். சர்வதேச சங்கத்தினர், இப்போது அனுப்பிய நிபந்தனைகட்கு மேலாக ஒன்றுஞ்செய்ய வியலாதெனவுந் தெரிவித்துள்ளார். இத்தாலியர் மறுத்தாராயினும் இன்னும் இழுவலாகவே சிலர் கூறுகின்றனர். இத்தாலியர் அபிசீனிய அரசினரின் பதில் 28-ந் திகதி கூடவிருக்கும் சர்வதேச சங்கத்தில் ஆலோசிக்கப்படும்.

* *

சர்வதேச சங்கத்தினர் அறிக்கைப்படி அபிசீனியாவினைத் திருத்துதற்கு எந்த நாடும் உதவிசெய்ய முன்வரலாமென்பதே. இத்தாலியர் மற்றைய நாடுகள் அபிசீனியா விஷயத்தில் தலையிடுவதை ஒத்துக்கொள்ளவில்லை. தாமே அபிசீனியரின் மேற்பார்வைக்காரராக வேண்டுமாம். பிரான்சியர், இத்தாலியர் சர்வதேச சங்கத்தினரின் கோரிக்கையை ஏற்பாரெனப் பெரிதும் நம்பியிருக்கின்றனர். நம்பிக்கைக்கு மோசம்வருமோ வென்பது அறியக்கிடக்கின்றது. மேலும் சர்வதேசசங்கம் இன்னும் வேறுசிலாக்கியங்களைக் கொடுக்கப் போவதாகக் காணோம். பிரான்சிய மந்திரியாராகும் லவால் என்பவர் முசோலினிக்கு ஒரு செய்தி அனுப்பியுள்ளார். அதில் சங்கம் இதற்குமேல் ஒன்றுஞ்செய்யவியலாதென்றும் அறிவித்தனர். மேலும் வில்லங்கங்கள் வரின் தாம் பிரிட்டிஷாருடன் பிரியாது நிற்பது நிச்சயமென்று ஈடினுக்குச் சொல்லியுள்ளார்.

* *

இது ஒருபுறமாக யுத்தம் வருகின்றதென ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அபிசீனிய பிரதானிகள்பொறுமையிழந்து இத்தாலியரைத் தாக்க எத்தனிக்கின்றனர். எத்தனைநாட்களுக்கு இவர் பொறுத்திருப்பது? அபிசீனிய அரசர் பொறுமையை வேண்டுகின்றனர். இத்தாலியர் தாக்கினால் பின்வாங்கும்படி கட்டளையிட்டுள்ளார். சர்வதேசசங்கத்தின் முடிவினைக் கண்டே என்னசெய்யினும். இதை இவர்சேனைகள் கேட்குமோவென்பது ஐயத்துக்கிடமாகின்றது. அபிசீனியாவில் யுத்தாயத்தங்களெல்லாம் கெதியாக நடைபெறுகின்றன. அபிசீனிய சேனையின் தலைமையை ஒரு துருக்கிதேசப் போர்வீரன் வகிக்கின்றனன். அவன் ஓரிடத்தில் ஹிண்டன்பேர்க் அவர்கள் முறையில் அரண் ஒன்று கட்டுகின்றான். அவ்வூர்ப் பெண்களும் படைகளில் சேருகின்றனர்.

* * *

இத்தாலியர் சர்வதேச சங்கத்தவரின் பிரேரணைகளை ஏற்காவிடின், உடனே அதைவிட்டுவெளியேறவேண்டியதே. பின் சர்வதேசசங்கத்தார் தாம்செய்யவேண்டியதை யோசிப்பர். பிரிட்டிஷார் கீழைநாடுகளில் சும்மாவிருக்கவில்லை. சிங்கப்பூர் கடற்படை ஸ்தானம் பெலப்படுத்தப்படுகிறது. இந்து சமுத்திரத்தில் நின்ற கப்பல்களுடன் மூன்று கப்பல்கள் புதிதாகக்கூட்டப்பட்டன. திரிகோணமலையில் மூன்றுகப்பல்கள் புதிதாக வந்திருக்கின்றனவென்று கூறப்படுகின்றது. இதுவரையும் இத்தாலிய பத்திரிகைகள் நினைத்தவாறு பிரிட்டிஷாரைத் தூஷித்துநின்றன. இப்போது அதைநிற்பாட்டிவிட்டன. பிரிட்டிஷாரையும் பிரான்சியரையும் அணைந்துநின்றுதான் காரியம்பார்க்கவேண்டுமென இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி எண்ணுகிறார்போலும்.

* * *

உலகில் சமாதானம் நிலைபெறவேண்டின் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ருஷியா ஆகிய நாடுகளும் ஒத்துழைத்தால்

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து.

ஆகுமென்பது ஒரு பத்திராசிரியரின் அபிப்பிராயம். மேலும் சமாதானம் நிலைபெறுவதற்கு இத்தாலி, ஜெர்மனி, யப்பான் ஆகிய வல்லரசுகட்குப் 'புதிய குடியேற்றநாடுகள் கொடுக்கப்படவேண்டும். சென்ற ஐரோப்பிய மகாயுத்தம் முடிவடைந்தகாலத்தில் இந்நாடுகட்கு அனேகநாடுகள் கொடுக்கப்பட்டிருப்பின் இவ்வளவு சங்கடம் ஏற்பட்டிரா? அபிசீனியாவினைக்கைப்பற்றின் இத்தாலியர் பழைய ரோம ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டலாமென எண்ணுகின்றனர். வெப்பம் மிகுந்த ஆபிரிக்காவில் இத்தாலியர் எப்படி விருத்தியடைவாரோ?

* * *

இந்திய அரசினர் தமது கோரிக்கையாதெனக் கூறாது சர்வதேச சங்க நிபந்தனைகள் ஏற்கக்கூடியதாயில்லையெனப் பொதுவாகக் கூறிவிட்டனர். ஆனால் இத்தாலிய பிரதிநிதி வாயால் காரணங்களைக் கூறியுள்ளாராம். அவைகள் யாவும் சர்வதேச சங்கக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும். இது நிற்க, அபிசீனிய அரசினர் சிறையிலிருந்த 50000 பேரை விடுதலை செய்துள்ளார். அவர்கள் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டனர். இவர்களுள் பலர் யுத்தவீரர்களாம். இப்போது பலவழியாலும் அபிசீனியா 10 லட்சம் யுத்தவீரர்களைச் சேர்க்கக்கூடியதாயிருக்கின்றது. * *

இதுவரையில் இத்தாலியர் யுத்த ஆயத்தத்தின் பொருட்டு நற்பத்தாறரைக் கோடிரூபா செலவுசெய்துள்ளார்கள். இனி யுத்தமாரம்பித்தவுடன் செலவுசெய்ய 62 கோடி ரூபா வேண்டுமென வரவு செலவுத் திட்டத்தில் இத்தாலிய அரசினர் கணக்கிட்டுள்ளார். முசோலினி இத்தாலியில் 16 வயதுக்கும் 55 வயதுக்கும் இடையிலுள்ளோர் யாவரையும் மாதிரிக்கு அணிவகுக்கப்போகின்றார். அத்தினம் எப்போவென எவருக்குந்தெரியாது. எல்லோரும் அன்று யுத்தகோலமாகநிற்பின் ஒருகோடி துருப்புகள் இத்தாலியரிடம் இருப்பதாகும். மேலும் முசோலினி இத்தாலியிலுள்ள யாவரும் கேட்கக்கூடியதாக றேடியோமூலமாகப் பேசப்போகின்றார். அப்பேச்சினை ஒன்றரைக்கோடி சனங்கள் கேட்பாராம்.

* * *

அபிசீனியர் யுத்தத்தில் உபயோகித்தற்பொருட்டு 5 லட்சம் கழுதைகள் விலைக்குப் பெறுகின்றனர். இந்த விஷயத்துக்கென ஒரு சிலர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அநேக குதிரைகளும் விலைக்கு வாங்கப்படுகின்றன. ஒட்டகங்கள் அதிகம் பெறப்படுகின்றன. 80,000 ஒட்டகங்கள் யுத்தத்தில் உபயோகிக்கப்படுமெனச் சொல்லப்படுகின்றது. ஐரோப்பாவில் மிருகவைத்தியம் கற்கச் சென்ற மாணவர் சடுதியில் அழைக்கப்படுகின்றனர். இம்மிருகங்களுக்குப் பணங் கொடுத்தே அபிசீனிய வரசர் பெறுகின்றனர். பலாத்காரமாக ஊரவரிடம் பெறின் அவர்கள் அரசினர்மாட்டுத் துவேஷங்கொள்வாராம். அப்படிச்செய்ய அரசர்க்குப் பிரியமின்று. ஒரு குதிரையின் விலை 60 ரூபா, ஒரு கழுதையின் விலை 105 ரூபா, ஒட்டகத்தின் விலை 150 ரூபா

* * *

சர்வதேசசங்கத்தில் இத்தாலிய பிரதிநிதியாகும் பறன் அலோயிஸி சர்வதேச சங்கத்தினரின் அறிக்கையைப்பற்றிக் கூறியதாவது:—இத்தாலியர் எடுத்துக்காட்டிய குறைகளைச் சர்வதேசசங்கத்தார் நன்கு நோக்கவில்லை. சர்வதேசசங்கத்தினர் விதித்தபடி அபிசீனியா இன்னும் தமது நாட்டில் திருத்தங்கள் கொண்டுவராமையால் அத்தேசம் மேற்படி சங்கத்தில் அங்கத்துவம் வகிக்க இடமில்லை. அபிசீனியர் அயல் நாட்டவர்க்குக் கஷ்டங்களைக் கொடாதிருக்கச் செய்யவேண்டும். அதற்கு வழி நாகரீகம் அங்கே விருத்தியடையச்செய்வதே. அபிசீனியாவின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமெனச் சர்வதேசசங்கம் எண்ணுவது சரியல்ல. எல்லா வல்லரசுகளும், அந்நாட்டில் நுழைந்து திருத்தங்களைக் கொண்டுவருவதென்பது கஷ்டமான காரியம். ஒரு நாட்டின் மேற்பார்வையில் அபிசீனியா விடப்படவேண்டும். ஆங்கிலேயரும் பிரான்சியரும் இத்தாலியருக்கும் அபிசீனியருக்கும் நிலம் விட்டுக்கொடுத்துச் சமாதானம் நாட்ட முயல்வதை இத்தாலி முற்றாகக் கண்டிக்கிறது. அபிசீனியா கடற்கரையையடுத்து நிலம் பெறின் இன்னும் பெருங்கெடுதிகள் வந்துசேரும். * *

இப்போது 500,000 அபிசீனிய போர்வீரர் எல்லைப்புறத்தில் திரண்டுவந்து நிற்கின்றனர். இத்தாலியர் எல்லையிலிருந்து 19 மைல்களுக்கப்பால் நிற்கின்றனர். கிட்ட நிற்பின் இத்தாலியர் சிலருடன் மூட்டுப்பட்டு இந்தச் சாட்டை ஆதாரமாகக்கொண்டு யுத்தத்தை ஆரம்பிக்க முயல்வர் விஷயங்கள் நெருங்கிச் சங்கடமான நிலையை அடையமுன் பிரான்சிய முதன்மந்திரியாராகும் லவால் றோம்நகர் சென்று முசோலினியைக் கண்டு பேசினால் நல்லதென எண்ணுகிறார். இவ்விஷயம் இன்னும் முடிவாகவில்லை. இத்தாலிய–அபிசீனிய எல்லைப்புறத்தில் இருபகுதிச் சேனைகளும் வந்துநிற்கின்றன. எப்போது யுத்தம் ஆரம்பிக்குமெனத் தெரியாது. எக்கட்சியினர் தொடக்குகின்றனரென்பதை ஒரு சபையினர் வந்து பார்க்கும்படி அபிசீனியவரசர் சர்வதேசசங்கத்திற் கறிவித்துள்ளார். எப்படியாவது யுத்தம் கிளப்பவேண்டுமென முசோலினி பிடிவாதமாக நிற்கும்வரையும் சமாதானம் என்பது எப்படி வரும்? யுத்தம் அக்டோபர் மாதம் 15-ந்திகதி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மலாய்நாட்டுத் தமிழன்பர்களுக்கு!

நமது "ஈழகேசரி"க்குச் சந்தாப்பணம் அறவிடுவதற்கும் புதிய சந்தாதாரர்களைச்சேர்ப்பதற்கும், திரு. தை. நாகலிங்கம் அவர்கள் மலாய் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் வந்திருப்பதால், அன்பர்கள் தங்களால் வரவேண்டிய சந்தாத்தொகையைக் கொடுத்து உதவிசெய்வதுடன், தங்கள் நண்பர்களையும் புதிய சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டி ஆதரவளிக்குமாறும் வேண்டிக்கொள்ளுகின்றேம்.

சுன்னாகம், 22-9-35. } அதிபர், ஈழகேசரி.

---

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

## 'ஈழகேசரி' தீபாவளி இதழ்

**32 பக்கங்களில் 20-10-35-ல் வெளிவரும்!**

விளம்பரம்செய்பவர்கள் முன்னடியே தெரிவித்தல்வேண்டும்,

"ஈழகேசரி" அதிபர், சுன்னாகம்.

---


## மகத்தான "தேங்காய் எண்ணிக்கை"ப் போட்டியின் விடை.

இந்தப்போட்டியில் ஜனங்கள் காட்டியிருக்கும் விசேஷ ஊக்கத்தை முன்னிட்டு, கீழ்க்கண்ட படி

**பரிசுகளை அதிகரித்திருப்பதாக**

ஸன்லைட் சோப், லக்ஸ் டொய்லெட் சோப் கம்பெனியார் மிகச் சந்தோஷத்துடன் அறிவிக்கிறார்கள்.

**ரொக்கப் பரிசுகள்**

**ரூ. 850-க்குப் பதிலாக**

**ரூ. 1245 அளிக்கப்படுகிறது.**

**சந்தோஷப் பரிசுகள்**

**லக்ஸ் டொய்லெட் ஸோப் பெரியகட்டிகள்**

**2400-க்குப் பதிலாக 3440**

**கட்டிகள் கொடுக்கப்படுகிறது.**

சரியான விடையனுப்பிய 1245 பேர்களுக்கு ரொக்கப்பரிசுப் பணத்தைச் சமபங்கிட்டும், கூடியவரை சரியான விடையனுப்பிய 3440 பேர்களுக்கு சந்தோஷப் பரிசுகளைச் சமபங்கிட்டும் கொடுக்கப்படுகிறது.

பரிசுக்கு உரிமையுள்ளவர்களுக்கெல்லாம், தபால்மார்க்கம் எல்லாப் பரிசுகளையும் அனுப்புவதுடன் பரிசு பெற்றவர் பெயர்களடங்கிய ஒரு ஜாபிதாவும் அனுப்பப்படுகிறது.

போட்டியில் கலந்துகொண்ட வேறு யாராவது இந்த ஜாபிதா வேண்டுமென்று விரும்பினால் கீழ்க்கண்ட அட்ரஸுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

அட்ரஸ் விபரம்:—

**'ஸன்லைட் போட்டி'**

தபால்பெட்டி: 366

கொழும்பு.

**சரியான விடை:-**

**171**

**தேங்காய்கள்.**

லீவர் பிரதர்ஸ் லிமிட்டெட், போர்ட் ஸன்லைட், இங்கிலாந்து.


## வயாவிளானிற் கொலை.

### கத்தியால் குத்திவிட்டு ஓட்டம்.

வயாவிளான் என்னுமிடத்தைச் சேர்ந்த கார்த்திகேசு-தம்பர் என்னும் ஒருவர், சென்ற 25-ந் தேதி புதன்கிழமை இரவு 7-மணியளவில், அவ்வூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை-ஆறுமுகம் என்பவரால் படுகாயமுறக் கத்தியால் குத்தப்பட்டு, ஆபத்தான நிலைமையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பெற்று அங்கு அடுத்தநாளாகிய வியாழக்கிழமை இரவு உயிர்துறந்தார். குறித்த தம்பர் என்பவர் ஆறுமுகம் என்பவருக்குக் காசு கடன் கொடுத்திருந்தாரென்றும், சென்ற புதன்கிழமை இரவு கணக்குச் சரிபார்ப்பதற்கென இருவரும் கந்தர்-சின்னையா என்பவரின் வீட்டுக்குச் சென்று அங்குள்ள சிலரது சமுகத்தில் கணக்குப் பார்க்கும்போது, கணக்குச் சம்பந்தமாய் எழுந்த பிணக்குக் காரணமாகக் கடன் பெற்றிருந்த ஆறுமுகம் என்பவர் குறித்த தம்பரின் வயிற்றில் கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டாரென்றும் சொல்லப்படுகிறது. எதிரியைப் பொலிசார் தேடித்திரிகின்றனராம்.

—நமது நிருபர்.

## சுப்பையா பிடிபட்டார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த கச்சாய் என்னுமிடத்தில் அடித்துப் பறித்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சென்ற சில மாதகாலமாக மறைந்து திரிந்த கந்தர்-சுப்பையா என்பவர், சென்ற 26-ந் தேதி வியாழக்கிழமை இரவு 9-மணியளவில், சாவகச்சேரி ஸ்ரீ வல்லிபுரம் பிள்ளைச் சேர்ந்த X 5887-ம் இலக்க லொறியின் சாரதியாகிய இ. கந்தையா என்பவராலும், உதவியாளனாகிய த. செல்லத்துரை என்பவராலும் எருவன் என்னுமிடத்தில் பிடிக்கப்பட்டு மணியகாரனிடம் ஒப்புவிக்கப் பெற்றாராம். குறித்த சுப்பையாவைப் பிடித்துக் கொடுப்பவர்க்குப் பரிசு கொடுப்பதாகப் பொலிஸ் பகுதியாரால் விளம்பரஞ் செய்யப்பட்டிருந்ததாம்.

—நமது நிருபர்.

## பெரியகடையில் தீவிபத்து.

யாழ்ப்பாணம் 25.

சென்ற 22-ந்திகதி ஞாயிற்றுக் கிழமையன்று அதிகாலை 7-30 மணியளவில் பெரியகடையிலிருந்து ஆஸ்பத்திரிக்குச் செல்லுந் தெருவிலுள்ள பெற்றோல் ஷெட்டிற்கு முன்னாகவுள்ள ஏழு கடைகள் எரிந்து சாம்பராயின. வைக்கோற்கடைகள், தேநீர்க் கடைகள், மரச்சாமான்கடை பாபர் சலூன் முதலிய கடைகள் எரிந்தமைக்குக் காரணம் தேநீர் அடுப்பிலிருந்து நெருப்புப்பொறி, அருகேயிருந்தவைக்கோல் குவியலில் வீழ்ந்தமையே என அறியக்கிடக்கிறது. இவ்விபத்தினால் ஏறக்குறைய 7000ரூபாவரை நட்டமென ஊகிக்கவேண்டியிருக்கிறது.

ந—நி.

## மோட்டார் விபத்து.

யாழ்ப்பாணம் 24.

சுண்டிக்குளி சி. எம். எஸ். கல்லூரி ஆசிரியரான திரு. ஜே. சி. ஹன்டி என்பவரின் புதல்வனான பாபு ஹன்டி என்னும் 9 வயதுச் சிறுவன் ஓர் ஒஸ்றின் காரில் வந்திறங்கி, தான் வாசிக்கும் கல்லூரியாகும் சி. எம். எஸ். கல்லூரிக்குச் செல்லும்போது அவ்வழியாய்வந்த X 6606 இலக்க மோட்டார்க்காரினால் தட்டி நெரிக்கப்பட்டான். உடனே அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்தேகினர். நிலைமை மோசமாகவிருக்கிறதாம்.

ந—நி.

---

திருத்திக்கொள்க:—சென்ற வெளியீட்டில் திரு. கா. அரியகுட்டி அவர்களின் மரணம் 17-9-35 என்றிருப்பதை 18-9-35 புதன்கிழமை எனத் திருத்திக் கொள்ளுக.

# கணவனுக்குத் தூக்கு.

## மனைவியின் தற்கொலை முயற்சி

தெல்லிப்பழை 21

சென்ற 20-ந் திகதி இரவு 1-மணியளவில், தெல்லிப்பழைக் கொலைவழக்கில் தூக்குத்தண்டனை பெற்ற காசிப்பிள்ளை — இராசையாப்பத்தரின் மனைவி தங்கம்மா என்னும் பெண், தனது கணவனைக் கண்டியில் தூக்கப்படுவதாகக் குறிக்கப்பட்ட தினத்தன்று, எல்லாரும் நித்திரையிலிருக்கும் பொழுது, தன்னைப் பந்தோபஸ்தாகப் பல சீலைகளால் சுற்றிக் கயிற்றால் கட்டியபின், அடுத்தவளவுக் கிணற்றுக்குள் வீழ்ந்து அவஸ்தைப்படுகையில் உண்டான சத்தத்தைக்கேட்ட பூரணம், விசாலாட்சி என்னும் பெண்கள் கூக்குரலிட்டதாகவும், கூக்குரலைக்கேட்டதும் பலர் ஓடிவந்து தங்கம்மாவைக் கிணற்றிலிருந்து வெளியில் எடுத்ததாகவும், அப்பேது அறிவற்றநிலையில் காணப்பட்டதாககவுங் கூறப்படுகிறது. விதானைக்கு விபரம் அறிவிக்கப்பட்டது. குறித்த தங்கம்மா மனவருத்தத்தினிமித்தம் தற்கொலை செய்வதாகவும் தனது பிரேதத்தைப் பரிசோதனை செய்யவேண்டாமென்றும் கடிதமெழுதிவைத்திருந்ததாக அறிகின்றேம்.

ஒரு நிருபர்.

## கோயிலில் துணிகரக் களவு.

### ஐயருக்கு மண்டையிலடி.

யாழ்ப்பாணம் 25.

நேற்றையதினம் இரவு அராலி மூநகமூர்த்தி கோவிலினுள் சுவரைத்துளைத்து உட்புகுந்து மூலஸ்தானம் சென்று அங்கிருந்த யந்திரத்தைக் களதாடியதாகவும், அதன்பின் கள்வர் கோவிலுக்கருகேயுள்ள அர்ச்சகரின் வீட்டிற்குள்சென்று அவ்வீட்டில் ஓர் பெட்டியினுள்ளிருந்த ஒருசோடி காதோலையையும், அட்டியல் ஒன்றையும் எடுத்துக்கொண்டுபோகையில் சப்தங்கேட்ட கதிரேசஐயர் என்பவர் அவர்களைத் தொடர்ந்துபோய் ஒருவனது கையில் பிடித்தாரெனவும், அப்போது ஒருவன் ஐயரின் தலைமீது தடியினால் ஓர் அடி அடித்ததாகவும், அவ்வடியைத் தாங்கமாட்டாது ஐயர் பிடியைவிட்டுக் கீழே விழுந்தனரெனவும், அவர் மிகவும் ஆபத்தான நிலையில் கிடக்கிறாரெனவும், இது சம்பவத்தைப்பற்றிப் பொலீசார் புலன் விசாரித்து வருவதாகவும் ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. ந—நி.

## சுதுமலைக் கொலையில் சம்பந்தப்பட்ட கல்லூரி ஆசிரியர்.

யாழ்ப்பாணம் 25.

சுதுமலைவாசியாகிய அன்னைப்பிள்ளை என்னும்பெண் கொலைசெய்யப்பட்டதின்காரணமாக அருணி, குமாரசாமி ஆகியோர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டபின்னர், நேற்றுச் சாயந்தரம் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியராகும் திரு. எம். பேரம்பலம் (அல்லது இராசையா) என்பவருக்குக் கைதியாக்கப்பட்டுள்ள அருணி என்பவன் அனுப்பவிருந்த கடிதமொன்று பொலீசார்கையில் சிக்கியதாகவும், அதில் 100 ரூபாயும் ஒருபுசல் அரிசியும் தன்மனைவிக்குக் கொடுக்கும்படி அவன் பேரம்பலத்திற்கு எழுதியிருப்பதாகவும், மற்றும் மேற்படி கொலையில் பேரம்பலம் பங்குபற்றியிருக்கிறார் என்பதற்கான சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வாக்கியங்கள் காணப்படுகிறதாகவும் பொலீசார் பேரம்பலத்தைக் கைதுசெய்து பொலீஸ் நீதிஸ்தலத்தில் ஒப்புவித்தபோது நீதிபதி திரு. K. ஆழ்வாப்பிள்ளை அவரை அடுத்தமாதம் முதலாம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். ந—நி.

# கடிதங்கள்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கமும் திரு. க. பொன்னம்பலமும்.

"ஈழகேசரி"ப் பத்திராசிரியர் அவர்கட்கு:

ஐயா!

இக்காலத்தில் சைவசமய வளர்ச்சி கருதியும் தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தி கருதியும் பல சங்கங்கள் உழைத்து வருகின்றன. அவைகளுள் தலைசிறந்து விளங்குவது எங்கள் சைவவித்தியா விருத்திச்சங்கமே. இச்சங்கத்தின் மானேஜரவர்கள் காரியநிர்வாக சபையின் அங்கீகாரம் பெறுமுன்னரே ஆசிரியர்களை ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து மற்றொரு பள்ளிக்கூடத்துக்கு மாற்றுவதைக் குற்றமாகக் கருதி அவர்மேல் திரு. க. பொன்னம்பலம் அவர்கள் பழிசுமத்துகின்றனர். சைவ வித்தியா விருத்திச்சங்க ஆசிரியர்களைக் காரிய நிர்வாகசபையின் அங்கீகாரம்பெற்றே மாற்றவேண்டுமென்பதுதான் அவர் உறுதியான எண்ணம்போலும். சங்கப் பள்ளிக்கூடங்கள் ஏறக்குறைய75வரையிலுள்ளன. இப்பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்கும் ஆசிரியர்களைத் திடீரென விலக்க அல்லது மாற்றவேண்டியிருந்தால் என்செய்வது? காரிய நிர்வாகசபை கூடும்வரையும் விலக்காமல் அல்லது மாற்றாமல் இருக்கமுடியுமா? பரீக்ஷை சமீபித்த காலத்தில் ஒரு ஆசிரியர் ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து விலகிவிட்டால் அவர் படிப்பித்த வகுப்புப் பிள்ளைகளது நிலைதான் யாது? நேயர்களே! திரு. க. பொன்னம்பலம் அவர்கள் கூறும் கூற்றுப்பொருந்துமா?சற்றுக்கவனியுங்கள்.

காரிய நிர்வாகசபைகூடி அங்கீகாரஞ் செய்தபின்பே மாற்றங்களை நிகழ்த்தவேண்டின் ஒவ்வொரு மாற்றங்களுக்கும் காரிய நிர்வாகசபையைக் கூட்டமுடியுமா? கூட்டமுடியுமானாலும் அவ்வித அங்கீகாரம் செய்வதனால் வரும் இடையூறுகளும் வீண்முயற்சிகளும் பலவாகவே மல்கும். இவற்றையெல்லாம் சேர். பொன். இராமநாதன் அவர்கள் மானேஜராக இருந்த காலத்திலே நன்கு ஆலோசித்து திரு. வை. துரைச்சாமியவர்கள் மானேஜராக இருந்த காலத்தில் (9-6-87-ல்) ஆசிரியர் அல்லாத ஏனைய சங்க உத்தியோகஸ்தரை (லிகிதர் முதலியோரை நியமிப்பது காரியநிர்வாக சபையென்றும்;

ஆசிரியரை நியமிப்பதும் விலக்குவதும், மாற்றுவதும் மானேஜரே செய்தல் வேண்டும் என்றும்;

மானேஜர் செய்தாலும் அவர் செய்தவற்றை காரியநிர்வாகசபை அங்கீகரித்தாற்றான் உறுதியாகுமென்றும்; அரங்கேற்றிப் பிரமாணமாக்கப்பட்டது. அப்பிரமாணத்தின்படியே மானேஜரவர்கள் 11 வருஷ காலமாக ஆசிரியர்களை நியமிப்பதையும், விலக்குவதையும், மாற்றுவதையும் செய்து வருகின்றார். காரிய நிர்வாக சபையும் அங்கீகரித்து வருகின்றது. 11 வருஷகாலமாக மானேஜர் செய்துவந்த மாற்றங்களுள் இற்றைக்கு மூன்று வருஷங்களுக்கு முன் நடந்த மாற்றமொன்றையே காரிய நிர்வாகசபை அங்கீகரியாதுவிட்டது. இஃதிப்படியாகவும் சங்கப்பிரமாணங்களை விளங்கிக்கொள்ளாத திரு. க. பொன்னம்பலம் அவர்கள் மானேஜர்மீது வீண் அபவாதங்களை ஏற்றுகின்றனர். பொன்னம்பலமவர்களால் குறிக்கப்பட்ட ஆசிரியர்கள் எண்மரது மாற்றத்தையும் பிரமாணப்படியே மானேஜர் செய்துவிட்டுக் காரிய நிர்வாகசபையில் அரங்கேற்றியிருக்கின்றாரே. அப்படியாகவும் மானேஜரைக் குறைகூறுவது நியாயமா?

### மயிலிட்டிதெற்குப்பள்ளிக்கூடம்.

இப்பள்ளிக்கூடத்திலே இற்றைக்கு ஒருவருஷகாலத்திற்குமுன்னரே தலைமை ஆசிரியருக்கும், உதவி ஆசிரியர் மூவர்க்குமிடையில் திருத்தியீனம் ஏற்பட்டது. அதையறிந்த மானேஜர் இற்றைக்கு நாலு மாசத்திற்குமுன் நாலு ஆசிரியர்களையும் அழைத்து எச்சரிக்கைபண்ணி இனிமேல் ஒற்றுமையாக இருத்தல்வேண்டுமென்று வற்புறுத்தினர். அவர்கள் மானேஜர் கட்டளையையும் பொருட்படுத்தாது திருத்தியீனத்தை அதிகப்படுத்தி பள்ளிக்கூடத்திலொழுங்கீனம்விளையக்கூடியவிதமாக நடக்கலாயினர். அதனால் அந்நால்வரையும் மீண்டும் மானேஜர் அழைத்து நீங்கள் இவ்விதம் குழப்பங்களை நிகழ்த்தின் நிச்சயமாக மாற்றிவிடுவேன் என்று கூறியனுப்பினர். அதையும் அவர்கள் பொருட்படுத்தாததினாலேயே மீண்டும் ஆவணிமாசம் 1-ந்தேதி வரவழைத்து விளங்கி நால்வரிலுங் குற்றமிருப்பதைக்கண்டு ஆவணிமாசம் 5-ந்தேதி நால்வருக்கும் மாற்றம்கொடுத்தனர். இவைகளே நடந்த உண்மைகள். அங்ஙனமாகவும் பாலர் ஞானோதய வித்தியாசாலை ஆசிரியர் நால்வரை ஒருவித நியாயமுமின்றி மாற்றியதென்றும் 24-மணித்தியால அறிவித்தல்தானுமின்றி மாற்றியதென்றும் திரு. க. பொன்னம்பலமவர்கள் கூறுவது நியாயமா? திரு. க. பொன்னம்பலமவர்கள் மயிலிட்டி தெற்குப் பள்ளிக்கூடம் புரட்டாதி மாசம் தொடக்கம் தலைமை ஆசிரியரின்றி இருக்கின்றதென்றும் கூறுகின்றனர். அப்பள்ளிக்கூடத்தில் பயிற்றப்பட்ட வாசிரியர் நால்வர் இப்பொழுதும் இருக்கின்றார்களென்பதையும், அவர்களுள் ஒருவர் பாலபண்டித பரீட்சையில் சித்தியெய்தியவர் என்பதையும் அவர் அறிவாராக.

திரு. அ. பொன்னையா அவர்கள் காரணமாக நிகழ்ந்த குழப்பத்தாற் சென்ற வாரம் பள்ளிக்கூடம் மூடப்பட்டது என்று கூறினர். அவ்வாரத்தில் இப்பள்ளிக்கூடம் மாத்திரமல்ல இன்னும் பல பள்ளிக்கூடங்கள் விடுதலையடைந்தன. அதற்கும் திரு. அ. பொன்னையா அவர்கள்தான் காரணமென்பார்போலும். சென்றகிழமை முழுவதும் விடுதலை விடப்படவில்லை. செல்வச் சந்நிதி உற்சவத்துக்காக மூன்று நாட்கள் மாத்திரம் விடுதலை விடப்பட்டதென்பதை அவர் அறிவாராக.

இன்னும் அவர் சென்ற ஆனி மாசந் தொடக்கம் இவ்வித்தியாசாலை ஒழுங்கீனமாக நடைபெறுகின்றதென்கின்றனர். ஒழுங்கீனமாய் நடைபெற்றமையினாலேயே ஆசிரியர்களை மனேஜர் அழைத்து காரியங்களை விளங்கி அதுகாரணமாக ஆவணி மாசம் 5-ந் திகதி அவ்வாசிரியர்கள் மாற்றப்பட்டனர் என்பதையறியார் போலும்.

குப்பிழான் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் அவ்வித்தியாசாலையை ஆரம்பிக்க ஏதுவாயிருந்தாரென்றும்; அவர் நியாயமின்றி உத்தியோகத்தினின்றும் தடுக்கப்பட்டனர் என்றும் கூறுகின்றனர். அவர் பாடசாலை ஸ்தாபிப்பதற்கு ஏதுவாய் இருந்தது உண்மையே. இச்சங்கம் சைவநன்மக்களாலும், சைவ ஆசிரியர்களாலும் நடத்தப்பட்டு வருகின்றது. அதனால் இதன் விருத்திக்கு யாவருங் காரணராவர் என்பதை உணர்ந்தே அவரும் அவர்போன்ற பலரும் இன்னும் இன்று முழைத்து வருகின்றனர். இனி அத்தலைமை ஆசிரியரை அவர்தாமே முன் ஒருமுறை கொடுத்த அனுமதியோடும் அவர் பாடசாலை உதவி மானேஜரின் அனுமதியோடும் 7 நாள் அறிவித்தலுடன் மாற்றியபோது அவர் பின் மறுத்தமையும் வந்த தலைமையாசிரியருக்கு வேலை ஒப்புக்கொடாமையும் ஆகிய குற்றங்களுக்காகவே தடைப்படுத்தப்பட்டனர் என்பதை உணர்தல் சால்புடைத்து. அவரிடத்தில் அவ்வூரவர்கள் காட்டிய பரிவினாலும்; மாற்றப்பட்ட இடத்தில் சில காலங் கடமையாற்ற அவர் உடம்பட்டமையாலும், அவரைப் பழையபடி குப்பிழான் பாடசாலைக்கே தலைமை ஆசிரியராக்கிய மனேஜரது பெருந்தன்மை எத்துணைத்து.

சை. வி. வி. சங்க
காரியகர்த்தர்களில் ஒருவர்.

## "தினவர்த்தமானி"யின் நீலிக்கண்ணீர்.

(முற்றொடர்.)

"ஈழகேசரி"ப் பத்திராசிரியர் அவர்கட்கு:

ஐயா!

சென்ற வாரம் வெளிவந்த தங்கள் பத்திரிகையில் 'தினவர்த்தமானி' கூறியபடி மாயமாய் மறைந்த (48) நாற்பத்தெட்டுக் கண்டி புகையிலையைப்பற்றியும் தினவர்த்தமானியின் சில விரும்பத்தகாத செய்கைகளைப்பற்றியும் அதன் நோக்கம் என்னவென்பதை அறிய விரும்புவதாகவும் எழுதினேன். அதற்கு இன்றுவரையும் எவ்வித விடையையும் காணோம். உண்மையில் நன்மையை விரும்பிய பத்திரிகையாயின் நான் கூறிய நியாயம் சரி அல்லது பிழையெனக் கூறித் திருத்தி நடத்தக்கூடிய வழியைக் காட்டவேண்டும். அதை விடுத்து "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா", "மூன்றுமாச வாழ்வடி மோருவித்த கசடி"யென்று நாடோடியாகச் சொல்லுவார்கள். அதுபோல தாம் நினைத்ததைச் செய்யவும் விரும்பியதைக் கீறித் தள்ளிவிட்டு மறைந்துபோகவும் "தினவர்த்தமானி" விரும்பினால் அது ஏற்றமுறையாகாது. இந்த மாசம் 25-ந்திகதி வெளிவந்த "தினவர்த்தமானி"யி லப்பத்திராதிபர் பத்திராசிரியரின் யோக்கியதையைக் குறித்து ஓர் விரிவுரை எழுதியுள்ளார். அங்ஙனம் எழுதிய பத்திராதிபர் அதேபத்திரிகையில் 'துணுக்கு, ஓர் அவிவேக பூரண குரு" என்னும் தலையங்கத்தின்கீழ், அறிவுடையோர் விரும்பத்தகாத கொச்சைமொழிகள் பாவித்துச் சில குறிப் பெழுதியிருப்பதைக் கண்ணுற்று அப்பத்திராசிரியரின் விவேகத்தை மெச்சினேன். இப்படிப்பட்ட விவேக சிகாமணிகள் பத்திரிகை நடத்தினன்றோ உலக மக்கள் சீர்திருத்தமடைவர். "குரைக்கிற நாய்க்குக் கோலைக் கொடுத்தால் நெடுகக் குரைக்கும்" என்று ஊரில் சொல்லிக்கொள்வார்கள். ஆனபடியால் "தினவர்த்தமானி" தன் மனம் போனவாறு நடந்து கொள்ளட்டும். எமக்குக் கெட்டதெதுவுமில்லை. நியாயம் பேசப்போய் மயிரில் கை போட நான் விரும்பவில்லை. ஆயின், "தினவர்த்தமானி" ஓலமிட்டவாறு நட்டம் ஏதும் வந்துற்றதோ என்பதை இவ்விதழில் வரைந்து மறுவிஷயங்களைப்பற்றி அடுத்த இதழில் எழுதுவேன். சங்கம் கமக்காரருக்கு (100) நூற்றுக்கு அறுபதுவீதம் கொடுக்கும் காசுதான் பொதுவாக வியாபாரிமார் கொடுக்கும் முழுத்தொகை. இதில் ஏதுங் கொஞ்ச வித்தியாசமுண்டு. ஆனால் எப்படிப் பார்த்தாலும் வியாபாரிமார் கொடுக்கும் அறுதி விலைக்கும் சங்கம் கொடுக்கும் அறுபதுவீதத்துக்கும் உள்ள வித்தியாசம் இருபது (20) ரூபாவுக்கும் முப்பது(30) ரூபாவுக்கு மிடையில்தான் உண்டு. சில இடங்களில் பத்து அல்லது பதினைந்து ரூபாவரையு முண்டு. இதை எக்கமக்காரனும் மறுக்கமாட்டானென நம்புகின்றேன். இக்கணக்கை இவ்விடத்திலுள்ள சிலரின் புகையிலையை வியாபாரிமார் பார்த்தபின் சங்கத்துக்குக் கொடுத்துப் பெற்றுக்கொண்ட கணக்குப்படி எழுதப்பட்டது என்பதை வேண்டுமானால் அத்தாட்சிப்பண்ணவும் முடியும்.

உலர்த்திய பின் விலைக்கு வாங்கிச் சங்கத்துக்குக் கொடுத்தால் அதில் கொஞ்ச வித்தியாசமுண்டு. ஆனால் பச்சைக் குத்தகை வாங்கி அல்லது தான் உண்டுபண்ணிய புகையிலையை உலர்த்திச் சங்கத்திற்குக் கொடுத்தால் சங்கம் கொடுக்கும் அறுபது (60) வீதத்தில் கொஞ்சம் ஆதாயமுங் காணலாம். இது அனுபவத்தில் கண்ட உண்மை. இதனால்தான் சங்கம் பங்கப்படாது நடைபெறவேண்டுமென்றும், சென்ற வருஷம் கொள்வனவுசெய்த புகையிலையால் மிகுதி 40 வீதமும் சங்கம் கொடாதுவிட்டாலும் பாதகமில்லையென்றும் நாங்கள் கூறுவது. நாங்கள் நம்பியிருந்தவாறு மிகுதி நாற்பது வீதமும் பெறமுடியாதுவிட்டாலும் பெரும் பகுதியைப் பெற்றுக்கொள்வோம் என்பது தற்போது மலையாளத்தில் நடைபெறும் விலையை ஒட்டிச் சகல செலவும் தள்ளிக் கண்ட கணக்கின்படி காணக்கிடக்கின்றது. குறித்த நாற்பதுவீதமும் பெற இயலாமற் போகுமானால், அதற்குக் காரணம் சங்கத்துக்கு எதிரிடையாக மலையாளத்திலும் மற்றும் இடங்களிலும் வியாபாரிமாரும் தரகர்மாரும் எடுத்துக்கொண்ட நடபடிக்கையால் என்பதைத் "தினவர்த்தமானி" குறித்துக்கொள்ளவும். அப்படித்தான் நாற்பதுவீதத்தில் எப்பாகமும் வராதபட்சத்தில் கமக்காரருக்கு ஏற்படப்போகும் நட்டம் பெரிதல்ல, மிகவும் அற்பம். யாழ்ப்பாணக் கமக்காரருக்கு இனிமேல் வரப்போகும் நன்மைக்காக அதைப் பொறுத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம். நாங்கள் அறுபதுவீதம் பெற்றுக்கொண்ட பணத்தில் எப்பாகத்தையாவது திருப்பிக் கட்டவேண்டி வருமோவென்ற எண்ணத்தைக் கமக்காரரும் "தினவர்த்தமானி"யும் விட்டுவிடவும். எனக்கு வால் உருவியவர் தினவர்த்தமானி யென்பதையும் அறிவிக்கிறேன்.

(தொடரும்.)

அ. கந்தையா
கமக்காரன், ஐக்கியசங்கத்தலைவர்,
மத்தியமயிலிட்டி

வறுத்தலைவிளான்,
26-9-35

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ், செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

## இலங்கையில் பிரிட்டிஷ் அரசியல் வரலாறு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமனாதன் சட்டசபையில் நுழைந்ததும் இலங்கை அரசியல் புதிய ஒரு போக்கைக்கொண்டது. பொதுசன உரிமைக்காக வாதாடுவதில் ராமனாதன் தீரன். இதனால் அரசாங்கத்துடன் அவர் அடிக்கடி மிண்டிக்கொண்டார், இக்காலத்திலே அரசாங்கம்ஒருபுதியமதுபானக் கொள்கையை ஏற்படுத்தியது. ஒருபுறத்தில் கேணல்ஒக்கல்ட் அவர்களின் பெருமுயற்சியால்புத்தசமயம் நாட்டில் புத்துயிர்பெற்றது. எனவே சிங்களப் பௌத்தர்கள் ராமனாதனுடன் சேர்ந்து அரசாங்கத்தின் புதிய மதுபானக் கொள்கையை எதிர்த்தார்கள். புதிய அம்மதுபானத் திட்டம் ஏற்பட்டால் நாடெங்கும் குடியில் மூழ்கிவிடுமென்று பொதுசனப் பிரதிநிதிகளால் கருதப்பட்டது.

இத்தருணத்தில் ஐரோப்பிய மகாயுத்தம ஏற்பட்டது. சிங்கள ஜனத் தலைவர்கள் மதுவிலக்கு விஷயத்தில் அடைந்த வெற்றியை முன்னிட்டு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் மனக்கசப்புக் காட்டினார்கள் 1915-ம் ஆண்டில் ஒரு மசூதி (பள்ளிவாசல்) சம்பந்தமாகச் சில புத்தர்களுக்கும் முகமதியருக்குமிடையில் பிணக்குண்டானது. அதன்பயனாய் ஒருகலகம் உண்டானது. கலகம் சிங்களக் குறிச்சிகளெங்கும் பரவிற்று. சில முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். பலருக்குக் காயமேற்பட்டது. அரசாங்கமும் கலகம் பலத்தால் மோசம்வருமென் றெண்ணி ராணுவச் சட்டத்தை (Martial Law) அமுல் நடத்திற்று. நூற்றுக்கணக்கான சிங்களவர் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களுள் தற்போதைய மந்திரிகளுள் மூவரு (சர். ஜயதிலகர், சேனநாயக்க, பட்டுவந்துடாவை) ம், அரசாங்கசபை உபதலைவரும் (திரு. விஜயரத்ன) சிறைசென்றவர்களாவார். மேலும் அரசாங்கம் சிங்களவர்மீது அநியாயமான தண்டனை விதித்ததால், பொதுசன அபிப்பிராயமும் அரசாங்கத்துக்கு மாறாக எழுந்தது.

சீர்திருத்த இயக்கம் (S. H.)

இச்சந்தர்ப்பத்தில் இராமநாதனின் இளவல் சர். அருணாசலம் அரசியல் மேடையில் காலவைத்தார். இவர் ஏற்கனவே இலங்கை சிவில் சர்விஸ் அணியில் இருந்து ரிஜிஸ்ரார் ஜெனரல் என்ற உயர்பதவியை வகித்துச் சட்டநிருபண நிர்வாக சபைகளில் அங்கத்துவம வகித்து அருந்தொண்டாற்றி இளைப்பாறியிருந்தார். உத்தியோக அங்கத்தவராயிருந்த காலத்திலேயே இவர் ஒருமுறை உத்தியோகஸ்தர்கள் அரசாங்கச் சார்பாக வாக்குக் கொடுக்கவேண்டுமென்ற வழக்கத்துக்கு மாறாக அரசாங்கத்துக்கு எதிராய் ஒருமுறை வாக்களித்தார். உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய பின் இவர் சமூக சீர்திருத்த வேலையில் ஈடுபட்டிருந்தார். ராணுவச் சட்ட அமுல் நடந்தேறிய பின், முன்னணியில் நிற்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. வன்மையும் உறுதியும் உடைய இவ்வரசியல் விற்பன்னர் இதுதான் நல்ல தருணமென்று எண்ணி அரசியற் கிளர்ச்சிசெய்ய முற்பட்டார்.

ஏற்கனவே அவர் தமையனார் சிங்களத் தலைவர்களுடைய குறைகளை எடுத்துரைக்க ஜெர்மன் குண்டுகளும் நீர்மூழ்கிக் கப்பல்களும் கீழே சுழன்றுகொண்டிருக்கும் கடல்மீது சீர்மை நோக்கிப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார். 1915 கலகத்தையும், அதன் அட்டூழியங்களையும்பற்றி விசாரணைசெய்ய ஒரு கமிஷன் நியமிக்கவேண்டுமென அவர் பிறிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்பதற்குச் சென்றார். அவருடன் திரு. (பின் சேர்.) ஜெயத்திலகாவும் திரு. ஈ. டபிள்யு. பெரேராவும் சென்றார்கள். சேனநாயக்கர் சகோதரர்கள் அவர்கள் முயற்சிக்குப் பணஉதவி செய்தார்கள்.

இலங்கையில் அருணாசலம் அவர்கள் ஒரு அரசியல் இயக்கத்தை உண்டாக்கினார். நாளுக்குநாள் அவ்வியக்கம் வளர்ந்துகொண்டுவந்தது. "மகாசனங்களுக்குப் பொறுப்பில்லாத அரசாங்கமும் ஆட்சியும் நடைபெறும்வரை கலகங்களுண்டாவது சகசமே. இம்மாதிரியான காருண்யமற்ற தான்றோன்றித்தனமான அரசாட்சியை மாற்றுவதானால் பொறுப்பாட்சியே வேண்டும்" என்று அவர் கூறினார். பிறிட்டிஷார் தங்களுடைய வியாபாரத்தை விருத்திசெய்வதற்காக எங்களுடைய சனங்களை அடக்கிக் கீழே வைத்திருக்கிறார்களென்று அரசாங்கத்தின்மீது குற்றஞ்சாட்டி வாதாடத் துவங்கினார். அரசாங்கத்தில் உயர்பதவியை வகித்ததினால் அதன் உட்சூத்திரங்களையெல்லாம் நன்கறிந்து அவர் தமது கட்சியை ஸ்திரப்படுத்தக்கூடியதாயிருந்தது.

காத்திராத அளவில் அவருடைய இயக்கம் பயனளித்தது. சிங்களரும் தமிழரும் முதல்முதல் ஒன்றுகூடி நின்று இலங்கையில் அரசியல் சீர்திருத்தத்திற்கு வாதாடினார்கள். இலங்கையின் க்ஷேமம் என்ற உயர்ந்த லட்சியம் இவ்வியக்கத்திற்கு ஊக்கமளித்தது. (தொடரும்)


ஈழமண்டல திருத்தல தேவார திருப்புகழ்.

விலை சதம் 5.

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னாகம்.



எதிர்பாருங்கள்!

உயரிய நூல்! ஒப்பற்ற விளக்கம்!!

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்கள் இயற்றிய

**புதிய தமிழ் - - ஏழாந்தரக் கணிதம்**

(அச்சில்)

இந்த பாடகணிதம், அக்ஷரகணிதம், க்ஷேத்திரகணிதம் எனனும் மூன்று பகுதிகளும இணைக்கப்பெற்று பல உதாரணக் கணக்குகளுடனும் நூற்றுக்கணக்கான அப்பியாசக் கணக்குகளுடனும் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்று 200 பக்கங்கள்வரையில் கொண்டுள்ளதாய் அதி சீக்கிரம் பிரசுரமாகும். ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கு உபயோகிக்கத் தக்கது.

Publishers:

வடலங்கா புஸ்தகசாலை
கடைத்தெரு, பருத்தித்துறை

(25) 1-9-35



Ginger Rogers பேசுகிறாள்.



Radio Pictures.

ஜின்ஜர் ரோஜர்ஸ் என்ற ஸினிமா ஸ்டார் லக்ஸ் டொயிலெட் ஸோப்பைப் பற்றி சொல்லுவதை வாசித்தீர்கள். ஹோலிவுட்டிலும், இங்கிலாந்திலும் உள்ள 857 பிரபல ஸினிமா நடிகைகளில் 846 பேர்கள் இவ்விதமாகவே கருதுகிறார்கள். மாசற்ற அழகைப் பாதுகாக்கும் குணம் லக்ஸ் டொயிலெட் ஸோப் ஒன்றிற்கே உண்டு என்பதைக் கண்டு அதையே அவர்கள் உபயோகிக்கிறார்கள். லக்ஸ்டொயிலெட் ஸோப்பின் வெண்மையான நுரை மிருதுவாய் சுத்திசெய்வதுடன் சருமத்தின் மேலிலும் மயிர்க்கண்களினிடையிலும் படிந்துள்ள எல்லா அழுக்குகளையும் அறவே நீக்கி தேகத்தை சோபிக்கச் செய்கிறது. ஸினிமா நடிகைகள் அனுஷ்டிக்கும் லேசான இவவழகுபடுத்தும் முறையை நீங்களும் அனுசரித்து ஆனந்தமடையலாம். லக்ஸ் டொயிலெட் ஸோப் ஒரு கட்டி இன்று வாங்கி அதனால் உங்கள் தேக சருமத்திற்கு ஏற்படும் விசேஷ குணத்தை நீங்களே மனதார உணருங்கள்!




LUX TOILET SOAP

X-LTS 407-288A TAMIL LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

சிறுவர் பகுதி

# கியூபிட்டும் பிச்சியும்.

சி. த.

முன்னொருகாலம் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு மூன்று குமாரத்திகள் இருந்தார்கள். மூத்தவர்கள் இருவரும் அழகுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால், மூன்றாவது குமாரத்தியினுடைய அழகை ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் விபரிக்க முடியாது. இவளுடைய அழகு உலகெங்கணும் பரம்பியது. இவளுடைய அழகைப் பார்ப்பதற்குப் பலர் பல்வேறிடங்களிலிருந்தும் வந்தார்கள். ஆகவே, அழகுத் தெய்வமாகிய "வீனஸ்" என்னும் தேவதையினுடைய கோயிலுக்கு ஒருவரும் போவதில்லை. இது கண்டு, அத்தேவதைக்கு மிகவும் கோபம் உண்டாயது. அத்தேவதை தனது மகனாகிய கியூபிட் என்பவனை அழைத்து, "மகனே! எனக்கு நேர்ந்த அவமானத்தை நீ தீர்த்துவைக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டது.

பிச்சியினுடைய மூத்த சகோதரிகள் இருவரும் இரு அரசர்களை விவாகஞ் செய்துகொண்டனர். பிச்சி என்பவளை ஒருவரும் மணம்புரிய முன்வரவில்லை. இதனால் தந்தை மிகவும் விசனப்பட்டான். தேவதைகளின் சாபமோ என்று நினைத்தான். "அப்பொலோ" என்னும் தெய்வத்தின் ஆலயத்துட் சென்று பலிகள் செலுத்தித் தனது மகளுக்கு ஒரு விவாகஞ் செய்துவைக்கவேண்டுமென்று வேண்டினான். அத்தெய்வம், "உனது மகளுக்குக் கறுப்புடைகளை அணிந்து, மலைகளுக்கிடையிற் கொண்டுபோய் விடுங்கள். ஏனெனில், மனிதன் எவனாவது அவளை மணக்கமாட்டான். ஒரு பயங்கரமான இராக்கதனே அவளை மணப்பான்" என்று கூறிற்று. அரசன் துக்கத்தோடு வீடு திரும்பினான். பிச்சிக்கு நேர்ந்த பாழும் விதியைத் தன் மனைவிக்குங் கூறினான்.

பின்பு, தெய்வங் கூறியபடியே பிச்சி மலைகளுக்கிடையில் விடப்பட்டாள். தனிமையாய் விடப்பட்டதும் அவள் அழுதாள். பயத்தால் நடுங்கினாள். ஏதாவது பிராணிவந்து தன்னை விழுங்கிவிடுமோவென்று பயந்தாள். ஆனால், ஒரு மெல்லிய காற்று அவளை ஒரு சந்தோஷமான பள்ளத்தாக்கிற் கொண்டுபோய்விட்டது. நறுமணம் கமழும் பூக்கள் நிறைந்த ஒரு ஆற்றங்கரையிலே அவள் நின்றாள். அப்பொழுது இராக்காலமாகவிருந்தது. பிச்சி அயர்ந்து நித்திரையானாள். விடியற்காலத்தில் நித்திரைவிட் டெழுந்தாள். அந்த ஆற்றங்கரையோரமாக அங்குமிங்கும் நடந்தாள். கடைசியாக ஒரு புல்வெளியிலே கட்டப்பட்ட மாளிகைக்கு வந்தாள். அந்த அழகிய அரண்மனையைக் கண்டதும் அதன் அழகில் அவள் ஈடுபட்டு, அதனுள்ளே பிரவேசித்தாள். ஆனால், கதவுகளெல்லாந் திறக்கப்பட்டிருந்தபோதும், அங்கு ஒருவரையுங் காணவில்லை. அவள் ஒவ்வொரு அறையாகப் பார்த்துக்கொண்டு சென்றபோது, "பிச்சியே! நீ யேன் அதிசயப்படுகிறாய்? இந்த மாளிகையும், அதிலுள்ள சாமான்களு முனக்குச் சொந்தமானவைகளேயாம். உனது வேலைக்காராகிய நாங்கள், உனக்கு இராசபோசனம் தயார்செய்யும் வரைக்கும், சற்றே ஆறியிரு" என்று ஆரோ கூறுவதுபோன்ற சத்தங் கேட்டது. அப்படியே காரியங்கள் யாவும் நடந்தன. அவளுக்குச் சாப்பாடு கொடுக்கப்பட்டது. பாட்டுக்களும் பாடப்பட்டன. ஆனால் ஒருவரையும் கண்ணாற்பார்க்க முடியவில்லை.

மாலைப்பொழுதில், எங்கும் இருட்டியபின்பு, அவளது கணவன் அங்கு வந்தான். அவனையும் பார்க்க முடியவில்லை. மறுநாட் காலை, அவன் வெளியேபோனான். மாலைநேரம் வரையும் அவன் அங்கு வரவில்லை. இந்தவிதமாக அநேக நாட்கள் சென்றன. தனது தாய் தந்தையரையும், சகோதரிமாரையுங் காணவேண்டுமென்ற வியாகுல மொன்றுமேயன்றி அவளுக்கு வேறு கவலையொன்றும் இல்லை. அவர்களும் இவளை மறந்துபோகவில்லை. மறுநாட் காலை இவளைப் பார்ப்பதற்காக மலைக்கு வந்தார்கள்.

கடைசியாக, பிச்சி தன் கணவனிடம், தான் தனது, சகோதரிமாரைப் பார்க்கவேண்டுமென்று கூறினாள். அவர்களை அந்தப் பள்ளத்தாக்கிற் கொண்டுவரும்படி காற்றுக்குக் கட்டளையிடும்படி அவள் அவனை வேண்டினாள். அவனுக்கோ அது முற்றாய் விருப்பமில்லை. அவளுடைய மன்றாட்டத்துக்காகவே சம்மதித்தான். "உனது சகோதரிகள் என்னைப்பற்றிப் பல கேள்விகள் கேட்பார்கள். என்னைக் கண்ணாற் பார்த்திருக்கின்றாயா என்றும் கேட்பார்கள். நீ என்னைப் பார்க்க முயன்றாயோ, அன்றோடு உனது இன்பம் யாவும் பாழடைந்துவிடும் என்பதை மனதிற் பதித்துக்கொள்" என்று அவன் வற்புறுத்திக் கூறினான். மறுநாட் காலை, ஒரு மெல்லிய காற்று, அவளது சகோதரிமாரை யப்பள்ளத்தாக்கிலே கொண்டுபோய்விட்டது. (தொடரும்)

## மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதருக்கு உபசரிப்புக்கொண்டாட்டம்

திருவாளர் | சி. கந்தவன உபாத்தியாயர் அவர்கள் (கந்தவனலயம், பொலிகண்டி, வல்லுவெட்டித்துறை) மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிற் சித்தியெய்தியதன் சந்தோஷத்தை முன்னிட்டு, சென்ற வியாழக்கிழமை (19-9-35) கரணவாய்ச் சைவவித்தியாசாலையில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது.

ஆரம்பமாகத் தேவாரம் ஓதப்பெற்றதும் தலைமை வகித்த தலைமை ஆசிரியர் திருவாளர். ச. செல்லையா அவர்களுக்கும் பண்டிதர் அவர்களுக்கும் கமழ்பூமாலைகள் அணியப்பெற்ற பின்னர், சிறப்புக் கவிகளும் வாழ்த்துப் பாக்களும் பாடியதும் தலைவரவர்கள் பண்டிதரவர்களின் குணசீலங்களைப்பற்றியும், போதனா சக்தியைப் பற்றியும் நன்கனம் எடுத்துரைத்தனர். அதன்மேல், ஆசிரியர்களும் மாணவர்களும் பண்டிதர் அவர்களின் சிறப்புக்களை எடுத்தோதினர். சபையோரின் கரகோஷ ஆரவாரத்தினிடையே பண்டிதர் அவர்கள் எழுந்து நின்று, மேற்படி பாடசாலையாருக்கும், பரீட்சையிற் சித்தியடைவதற்கு உதவிபுரிந்த தம் ஆசிரியர் வித்துவான் பிரம்மஸ்ரீ. சி. கணேசையர் அவர்களுக்கும் தமக்கு ஊக்கந்தந்த மற்றியாவருக்கும் என்ஞான்றும் மறவாத மனமார்ந்த நன்றி கூறினர். கூறியதும் அரியபெரிய செந்தமிழ் நூல்கள் பரிசாக வழங்கப்பட்டன. விளம்பரத்திற் குறிக்கப்பட்டபடி தேவாரபாராயணத்தின் பின் சிற்றுண்டி வழங்கப்பெற்றுப் பிற்பகல் நாலுமணியளவில் கூட்டம் குலைவுற்றது. பண்டிதர் அவர்கள் நீடூழிவாழ்க!

—நடித

# கலம்பகம்

தென் ஆபிரிக்காவில் வசித்துத் தற்போது காலஞ்சென்ற ஜான்டன் என்ற ஆங்கிலேயர் 79 பிள்ளைகளுக்குப் பிதாவாயிருந்தாராம்.

o o

பாணந்துறை நகரசபையைச் சேர்ந்த நாய்சுடுபவரான இஸ்மாயில் என்பவர், சூடுபட்டுக் குற்றுயிராகக் கிடந்த ஒரு நாயின் வாலை வெட்டினாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டு 3 வாரவெறுங்காவற்றண்டனை விதிக்கப்பெற்றாராம்.

o o o

சென்ற 14-ந் திகதி றங்கூன் துறைமுகத்துக்கு வந்துசேர்ந்த "தால்மா" என்னுங் கப்பலில் 20,000 ரூபா பெறுமதியான அபின் காணப்பட்டதாம்.

o o o

இறந்தபின் 45 நிமிஷங்கள் கழித்து அவர்களை மீண்டும் உயிர்த்து எழச் செய்யலாமெனச் சோவியத் விஞ்ஞான நிபுணரான பேராசிரியர் புரக்கனிக்கோ என்பவர் கூறுகிறாராம்.

o o

அழகுடன் சீவிப்பதைப் போதிப்பதற்கும், தேசக் கலைகளைக் கற்பதற்குமாகக் கராச்சி என்னுமிடத்தில் ஓர் கல்லூரி சமீபத்தில் திறக்கப்படுமாம்.

o o o

கொழும்பைச் சேர்ந்த பிரான்ஸிஸ் அப்புஹாமி என்பவரை ஸ்கின்னர்ஸ் தெருவில் விட்டுக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கே. பி கர்னேலிஸ் அப்புஹாமி என்னும் வாலிபனுக்கு 4 மாதக் கடுஞ்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாம்.

o o o

புதாபெட்ஸ் என்னுமிடத்தைச் சேர்ந்த சென் யோன் ஆஸ்பத்திரியிலிருக்கும் டாக்டர் லாஸ்லேபார்க்காஸ், டாக்டர் யோசேப்கிராஸ் என்னும் இருவர் ஒரு பெண்ணுக்குச் சத்திர வைத்தியம் செய்யும்முறையில் அபிப்பிராய பேதப்பட்டு ஒருவரோடொருவர் ஆயுதபாணிகளாகச் சண்டையிட்டதினால் இருவரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்களாம். o o o

அமெரிக்காவில் பறவைகளுக்கும் சங்கீதத்தில் சர்வகலாசாலைப் பரீட்சை யளிக்கப்பட்டுவருகிறதாம். இதற்கெனச் சங்கீத வித்துவான்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம். o o o

மக்கா நகரத்திற்குச்செல்லும் யாத்திரிகர்களிற் சிலரைக்கராச்சிஎன்னுமிடத்தில் விஷமூட்டிக் கொன்றுவிட்டனர். அவர்களிடமுள்ள பொருள்களை அபகரிப்பதற்காகவே இவ்விதம் செய்யப்படுகின்றதாம்.

o o o

சென்ற ஆகஸ்டுமாதம் 26-ந் திகதி கொள்ளுப்பிட்டியில் தனது மோட்டார்வண்டியை மணிக்கு 40 மைல்வீதம் செலுச்திச்சென்றாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கொழும்பு உதவிச் சுப்பிறின்றெணிய திரு. ஜீ. ஏ கே. ராக்வுட் என்பவருக்கு 15 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாம். o o o

அரசாங்கசபைப் பலப்பிட்டி ஸ்தான உபதேர்தல் நடைபெற்றபோது ஏற்பட்ட ஒரு கலகங் காரணமாக நாலு பெண்களும் ஒரு ஆடவனும் காயமடைந்தனர். காயமடைந்த ஆடவன் வைத்தியசாலையில் உயிர் துறந்தானும். o o o

காலிப் பொலிஸ் பரிசோதகராகிய திரு. டி. லாஹர்பி என்பவர், தன்னைத் தனது காரியாலயத்துக்குச் செல்லவிடாது மோட்டார்வண்டியுடன் தடைசெய்தாரெனக் காலிப் பிறக்றராகிய திரு. ஆர். கே. ஏ. டி சில்வா என்பவரால் ஒரு வழக்குத் தொடரப்பெற்றிருக்கிறதாம்.

o o o

இலங்கை அரசாங்கசபையின் பலப்பிட்டி அங்கத்தவர் ஸ்தானத்திற்கு அபேட்சகர்களாகத் தோற்றிய மூவரில் திரு. ஜீ. ஆர்தர் டி. சொயிசா என்பவர் வெற்றியடைந்தாராம்.

o o o

நீர் கொழும்புவாசியான திரு. நதானியேல் குணசேகரா என்பரை, கிம்புல்பிட்டி ஆயுள்வேதக்கல்லூரி மாணவனாகிய திரு. தம்பு வாதிக பீற்றர் பர்னாந்துவும், அவரது சகோதரனாகிய அக்னிஸ் பர்னாந்து என்பவரும் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டனராம்.

அமெரிக்காவைச்சேர்ந்த நியூஜெர்ஸி என்னுமிடத்திலுள்ள 6 வயதுடைய சிறுவன் ஒருவன் "பீர்" முதலிய மதுபானங்களைக் குடித்துவருகிறானும்.

o o o

சென்ற 7-ந் திகதி நீர் கொழும்பைச் சேர்ந்த ஜி. எம். எட்டி என்பவர், தனது மோட்டார் லொறியை மணிக்கு 35 மைல்வீதம் செலுத்திச் சென்றாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டு 75 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றார். இவர் இதற்குமுன் இதேவிதமான 11 குற்றச்சாட்டுகளில் தண்டனை பெற்றவராம்.

o o o

காபூலி வாலாவான ஒரு பட்டாணியன் கோஜரா என்னுமிடத்திலுள்ள 6 வயதுடைய ஆண்குழந்தை யொன்றையும், 5 வயதுடைய பெண்குழந்தையொன்றையும் திருடி அக்குழந்தைகளின் வாய்க்குள் துணியை அடைத்துக் கைகால்களைக் கட்டி ஒருமூட்டையிலிட்டுக் கொண்டு செல்லுகையில் பொலிசாராற் கைது செய்யப்பட்டானும்.

o o o

றத்மலானையில் ஆகாயவிமான நிலயத்திறப்பும், கொழும்பு—சென்னை ஆகாயவிமானத் தடாற்போக்குவரவு ஆரம்பமும் இன்னும் ஒருமாதகாலத்துக்குப் பின் போடப்பட்டிருக்கிறதாம்.

o o o

சென்ற 22-ந் தேதி கொனஹீன என்னுமிடத்தில் சேவற்சண்டைச் சூதாட்டம் நடத்தினார்களென எட்டுப்பேர் குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்களில் இரு எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தனித்தனி 60 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பெற்றனர். ஏனையோர் பிணையில் விடப்பட்டிருக்கின்றனராம்.

o o o

வங்காளத்தில் விசாரணையின்றிச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு, கமத்தொழில், கைத்தொழிற்பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்று தயாரிக்கப்படுகிறதாம்.

o o o

கல்கத்தாவில் அனுமதி பெறாது வெடிமருந்து வைத்திருந்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள திரு. 'எர்பன் என்னும் அமெரிக்கருக்கு 300 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், அவர் அவ்வூரை விட்டு வெளியேற வேண்டுமெனவுந் தீர்ப்புக் கூறப்பட்டதாம்.

o o o

சென்ற 19-ந் தேதி வியாழக்கிழமை கொழும்பு சர்வகலாசாலை மாணவராகிய திரு. டி. பி. எவ். வீரசேகரா என்னும் மாணவர் வெள்ளவத்தைக் கடலில் ஸ்நானஞ் செய்யும்போது நீரில்மூழ்கி உயிர் துறந்தார் இவரது பிரேதம் அடுத்தசனிக்கிழமை கொள்ளுப்பிட்டிக் கடற்கரையிற் காணப்பட்டதாம்.

o o o

பாட்டியாலா தேசத்தில் பிச்சை எடுத்துப்பிழைத்து வந்த கணேசி என்னும் பெண் இறந்தபின் அவளது வீட்டைச் சோதித்துப் பார்த்ததில் அங்கு 50,000 ரூபா பெறுமதியுள்ள நாணயங்கள் காணப்பட்டனவாம்.

o o o

பெலியகொடை மோட்டார்பஸ் போட்டிக் கலகங்காரணமாக, பி. எம். ஆர். பஸ் கம்பெனி மனேசராகிய திரு. கே. தோமஸ் பெரேராவைக் கொலை செய்தார்களெனவும் திரு. என். எஸ். விக்கிரமசிங்கா என்பவரைக் கத்தியால் குத்திக்கொலை செய்ய முயற்சிசெய்தார்களெனவுங் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த 6 எதிரிகளில் 4 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. 2 எதிரிகள் விடுதலைசெய்யப்பெற்றனராம்.

o o o

வருகிறமாதம் 1-ந் தேதி தொடக்கம் இலங்கைக்கும் லண்டனுக்குமிடையில் டெலிபோன் பேச்சு நடைபெறுமாம்.

o o o

சிங்கப்பூரில் 15 லட்சம் வெள்ளி செலவில் ஓர் புதிய சுப்பிறீம்கோடு சமீபத்தில் கட்டப்படுமாம்.

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்.

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 1. காட்சி 6.

இடம் :— காந்தாரியின் அந்தப்புரம். காந்தாரியும் துரோபதியுமிருக்கின்றனர்.

(துச்சாதனன் வருகின்றான்)

துச்சா :— ஏ துரோபதி!

“ தானே சூது பொருதழிந்து
தலைவன் றனக்குன் பதியான
கோனே சொல்லி யாவையுமுன்
கொடுத்தான் ; கொடுத்த பின்னிசைவு
யர்னே யென்றும் வீமன்முதல்
இளையோ ரென்று மென்வேள்வி
மானே யென்றும் குறித்திழந்தான் ;
வழக்கால் வென்றேம் வருவாயே.

பொன்னைச் சிரிக்கும் பூங்கோயில்
புனல்வா வியிலென் றெங்கள்குல
மன்னைச் சிரித்த செங்கனிவாய்
மாறு திரங்கி யழுதாற்ற
மின்னைச் சிரிக்கும் நுண்ணிடையாய்
வேந்தர்க் கெதிருன் மெய்க்கணவன்
தன்னைச் சிரிக்க விருக்கின்ற
சனம்நீ காணிற் றரியாயே ”

உனதுபதிகளில் ஒருவனான தருமனென்பான் எம்மோடு சொக்கட்டாடி யாவற்றையுந் தோற்றபின்னே உன்னையும் ஓட்டப்பொருளாக்கித் தோற்றுவிட்டனன். பஞ்சவருக்குப் பொதுமகளாய் நிலவுகின்றவளே! இராயசூய யாகத்தில் மன்னர் மன்னனாகிய எமது மூத்தோனைப் பார்த்து நகைத்தனையன்றோ! உன்னைத் தோற்றவனாகிய உனது தலைவனைப்பார்த்து யாவரும் நகைக்கும் காட்சியைக் காண்பதற்காய், மின்னலையும் பழிக்கும் நுண்ணிய இடையை உடையவளே! இப்போ உன்னை அவைக்கண் இழுத்துச்செல்ல வந்திருக்கின்றேன். ஆகையின் என் பின்னே கூசாது வருகுவாய்.

(செங்கரந்தீண்டிப்பற்றுகின்றான்)

துரோ :— (காந்தாரிக்குப்பின் ஒடி ஒதுங்கி) மாமி, மாமி! அந்தோ! என்செய்வேன்!

காந்தா :— துரோபதி! மாதுலர் மைத்துனர் இருக்கும் அவைக்கண் செல்வது வசையாகுமா? எதற்காக எனக்குப்பின் வந்து ஒதுங்குகின்றாய்! “ கரும்புதின்னக் கைக்கூலி வேண்டுமா,” உனக்கு.

துரோ :— (துச்சாதனன் கூந்தலைப்பற்றி இழுக்க) ஆ கண்ணபிரானே! வெண்ணெய் திருடிய விட்டுணுமூர்த்தி! உரலோடு ஆய்ச்சியர் கட்டிவைத்த உத்தமனே! மலர்மேவிய மாவாழ்திருமார்பா! மாயா! மணிவாயா! மறையாவும் பகர் பகவானே! பாலாழியின் மேலே துயின் மாலே! யாதுசெய்வேன்! அந்தோ, மாமி! துச்சாதனன் என் குழலைப்பிடித்து இழுக்கின்றானே. நட்டாற்றிற் கைவிடுமாப்போல என்னைக் கைவிடாதேயுங்கள்.

காந்தா :— பெண்ணே! உன்னைப் பற்றவந்தவன் விடுவானா? இந்நிலையில் உன்னைக் காப்பதற்கு என்னால் எங்ஙனம் முடியும்! “ஆணிக்கிணங்கிய பொன்னும் மாமிக்கிணங்கிய பெண்ணுங்கிடையா” என்பதை உணராயா?

(துச்சாதனன் இழுத்துச் செல்கின்றான்)

துச்சா :— (செல்லும்பொழுது) ஏ பெண்ணே! நீ எமது அன்னைக்குப் பின்சென்றொதுங்கினால் விட்டுவிடுவேனென்று நினைத்தாய்? “காமாறிக் கட்டினாற் கனமானது குறையுமா”?

(காட்சி முடிகின்றது.)

அங்கம் 1 காட்சி 7

இடம் :— நகரவீதி.

துச்சாதனன் துரோபதியின் கூந்தலைப்பிடித்து இழுத்துவருகின்றான். நகரமாந்தர் கண்டு தமக்குட் பரிவுறுகின்றனர்.

1-ம் ந. மா :— அம்மம்ம! மேகத்தினின்று இடிமாத்திரமா விழுகின்றது. அல்லது அம்மேகமுங்கூட விழுகின்றதா! அவனியில் அத்தகை அநீதி அதிகரித்துவிட்டதா! அன்று. இது மேகமன்று, மேகம்போன்ற கரிய கூந்தலானது பூமியில் அலையத் துரோபதி என்னும் அரசமங்கையைத் துச்சாதனன் இழுத்துவருகின்றான். கற்புக்கரசியாம் ஒப்பற்ற இத்தலைவியின் கூந்தலோ, அன்றித் துரியோதனன் குலமோ இவ்விடம் குலைந்து காண்கின்றது!

2-ம் ந. மா :— (கரங்களாற் கண்புடைத்து) ஆ, துரியோதனனின் வெண்கொற்றக்குடையின் நீழலும் ஓர் நீழலா! அங்கியைப்போற் சுடுகின்றதல்லவா! அந்தோ, பாஞ்சாலி படும் பாட்டைப் பாருங்கள்!

3-ம் ந. மா :— அந்தோ, அருச்சுன மன்னன் தனது சொந்தக் கரங்களினால் வாரிக் கோதி முடித்து மலர்களைச்சூட்டும் கார்நிறக்கூந்தலோ புழுதிபிற்படிந்தது!

4-ம் ந. மா :— இப் பெண்மணியைத் துச்சாதனன் இழுத்தலைக்க வாளாவிருந்து விட்டுக்கொடுத்த காந்தாரியென்பாள் தன் குலத்தோடும், ஈன்றெடுத்த பாலகரோடும் கெடப்போகின்றாள்.

1-ம் ந. மா— என்னே கொடுமை! மாருதிகுமான் பொறுப்பானாயினும் மருத்துவன் குமான் இதைக்கண்டு பொறுப்பானா!

2-ம் ந. மா :— இந்த நாட்டைவிட்டு இனி நாம் அகன்றுவிட வேண்டும். “கொடுங்கோன் மன்னன் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங் காடு நன்றே.”

3-ம் ந. மா :— அணித்தாகச்சென்று நாமேதுங் கூறுவோமாயின் துச்சாதனன் கோபிப்பானே! (அருகிற் சென்று அச்சத்துடன்) அம்மணி, கவலையடையாதீர்கள்.

4-ம் ந. மா :— என்னே காலத்தின் விபரீதம்! பாஞ்சாலநாட்டு வேள்வியிற்றோன்றிய வசிட்டமாமுனிவனின் நல்லற மனையாளைப்போன்ற அரசகன்னிகையோ இத்தகை யிடும்பைக் காளாயினள்! இதை நாம் நேரிற் காண்பதற்கு நேர்ந்த துர்ப்பாக்கியமே துர்ப்பாக்கியம்.

(காட்சி முடிகின்றது.)

## மானிடதேகம் எடுத்ததின் நோக்கமும் அதை நிறைவேற்றும் வழிகளும்.

(ஆசிரியர், திரு. ஆ. காசிப்பிள்ளை அவர்கள், மறவன்புலோ.)

சைவாபிமானிகளே!

**வ**றிதே காலத்தைப் போக்காதீர்! உலகஇன்பங்களை விரும்பாதீர்! இவையெல்லாம் மேகக்காரும், கானல்நீரும், நீர்க்குமிழியும், வானவில்லும் போன்று கணத்திற்றோன்றி அழிவன. இவ்வாறாக அழிதன் மாலையவாய உலக இன்பங்களை அனுபவித்தற்காகவா கடவுள் எம்மைப்படைத்துள்ளார்? அவ்வாறாயின் அவரிடத்து அருள் இல்லையாய்முடியுமே. எனவே அவர், ஐந்தொழிலும் அவர் வேண்டி யாங்கு எடுக்குந் திருமேனிகளும் பயனில்லனவாகும். ஆகவே அவற்றைக் கூறுஞ் சாஸ்திரங்களும் அவற்றின் உள்பொருளாய சமயமும் பொய்படுமன்றோ! ஆகவே அவர் அப் பொய்நிலையில் எம்மனோரைப் படைக்கவில்லை. அப்படியாயின் அவர் கருணை இழுக்காய் முடியும், வேறென்னையெனின்? அஃதோர் நன்நெறி.

அதனைக் கூறுமுன் இம்மானுடதேகத்தின் அருமையைச் சிறிது கூறுவாம். நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பில் எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதத்துள்ளே மானிடதேகத்தில் வந்து பிறத்தல் அருமை. அதிலும்,

“ நார்பயி றேயந் தன்னி
ளுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன்
மிக்கபுண் ணியத்தா ளுகும்
தரையினிற் கீழை விட்டுத்
தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப்
பாக்கியம் பண்ணொ ணாதே ”

என்னுந் திருவிருத்தத்திற்கியைய மானிடப்பிறவி எய்தினும் வேதாகமங்கள் ஓதப்படும் உத்தம தேயத்தில் பிறத்தல் அருமை. அதிலும் உத்தமசாதியில் பிறத்தல் அருமை. அதிலும் புறச்சமயங்களிற் செல்லாது சைவசித்தாந்தத்துள் பிறத்தல் அருமையினுமருமை. இவ்வாறாய எடுத்தற்கருமை உடைய சகலமும் நிரம்பிய சைவசித்தாந்த சமயத்தில் பிறந்த நாம் அதனையோராது அவமே காலங்கழித்து, வீணே பூமியிற் பிறந்து பாரந்துய்த்து வந்தநோக்கம் முடியாது வீண்விடயங்களில் அழுந்திக் காலங்கழித்து இறந்தொழியும் மானிடரை நன்னெறியுய்க்குமாறு பின்வரும் கவிகளைக் கூறியுள்ளார்.

“ மாணிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயத் தானிடத் தைந்து மாடு மரன் பணிக் காகவன்றே, வானிடத் தவருமண்மேல் வந்தான் றனையர்ச் சிப்பர், ஊனெடுத் தழலுமூம ரொன்றையு முணரா ரந்தோ.” எனவும்,

“ மந்திரவாட் பெற்றும் பகைவெல்லான் மற்றதுகொண், டந்தோதன் மெய்யை அரிந்தான்போல்—இத்தவுடல், கொண்டுழந்தி செல்லுங் குறிப்பின்றிச் சிற்றின்பங், கண்டுவினைக் காளாங் கணக்கு.”

ஆகவே மானிடதேகத்தின் நோக்கந்தான் யாது என்பதைச் சிற்றறிவுக்கெட்டியவரையில் விளக்கியுள்ளேன். மானிடப்பிறவியாகிய இப்பிறவியானது ஜென்மாந்தரங்களில் செய்துகொண்ட புண்ணிய விசேடத்தால் வந்தெய்தியது. ஆனால் அது அநித்தியமானது என்பதை நீங்களே நேர்முகமாகக் கண்டுவருகிறீர்கள். ஆகையால் ஆகமப் பிரமாணமாவது அனுமானப் பிரமாணமாவது காட்டவேண்டியதில்லை. அடுத்தபிறவிக்கும் இம்மானுடப்பிறவி நிச்சயமோவெனில் அதுவுங் கூறமுடியாது. ஏனெனில்,

“புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி, வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்” என்னுமடியானும்,

“இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ” என்னுந் தாயுமானவர் கூற்றானும் அறியக்கிடக்கின்றது. கிடைத்தற்கரிய இச்சென்மமுள்ளபோதே சிவனை வழிபட்டு அவனருள்கொண்டு எங்கள் நோக்கத்தை நிறைவேற்ற முன்வருவோமாக.

ஏனெனில், நாம் கருதிச்சென்ற ஒருவிஷயம் முடியாவிடத்து நாம் எவ்வளவு துன்பமுறுகின்றோம். அதை எதுவிதத்திலும் முடிக்க முயல்கின்றோம். முடித்துவிட்டால் இன்பமடைகின்றோம். அதுபோல நாம் இச் ஜென்மமெடுத்ததின் நோக்கத்தையும் நிறைவேற்றப் பிரயாசை கொள்ளாது துயிலுதல் என்னே! முயற்சிகொள்ளுவோமாயின் ஜெயம் பெற்றுப் பேரின்பவீட்டை யடைவோம். பேரின்பவீட்டை அடைய வேண்டுமானால் மலத்தைத் தொலைக்கவேண்டும். அதைத் தொலைத்தற்குச் சித்தாந்தநெறியே வாயில், சிவனை வழிபடலே உபாயம். ஆகையால்,

வாசகர்களே!

பொருட்செல்வ சம்பந்தமான விடயபோகங்கள் எல்லாம் அநித்தியம். செல்வச் செருக்குடையார் பின்சென்று பொருட்செல்வம் ஈட்டுதலைவிட்டுச் சிவபெருமானை வணங்குவோமாயின் அவர் என்றும் அழிதலில்லா அருட்செல்வத்தை யெமக்களிப்பார். அவ்வருட்செல்வத்தைப் பெறுதற்கு இறைவனருள்வேண்டி இடையறு முயற்சி செய்வோமாயின் நோக்கத்தை முடித்தவர்களாவோம்.

நம்பிக்கை.

“கடவுள் தமது அபாரசக்தியை எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார்”

“எங்களால் செய்யமுடியாத காரியமில்லை”

“எதுவும் எங்களால் செய்ய முடியும்”

என்னும் வாக்கியங்களை நினைவிற்கொண்டு பணியாற்றுவோமாயின் யாவும் பெறுவோம்.

இந்திய வங்கி லிமிற்றெட்
THE INDIAN BANK Ltd.
[Incorperated in British India in 1907]
ஷை வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற யூன்௴ 13௳ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.
(2) 2-6-35.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் சாவகச்சேரி, வீ. இ. இராமலிங்கம் என்பவரிடம் (1933ஹூ மாசிமீ தொடக்கம் 1934ஹூ பங்குனிமீ வரையும்) அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | மா 1933ஹூ | உ | ரு. | பெயரும் ஊரும் அடைவுப்பொருளின் விபரமும் |
|---|---|---|---|---|
| 8321 | மாசி | 3 | 12 | நாராயணபிள்ளை பெண் ராசம்மா, புலோப்பளை, பதக்கம் 1 |
| 8338 | | 4 | 8 | கதிரன் சரவணை, அல்லாலை, குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 8378 | | 7 | 12 | தாமோதரம்பிள்ளை இராமனுதர், விடத்தற்பளை, கவுத்தோர் 1 |
| 8420 | | 11 | 3 | சின்னத்தம்பி ஆசைப்பிள்ளை, மந்துவில், வாளி சோடி 1 |
| 8461 | | 14 | 18 | முருகர் சுப்பையா, சாவகச்சேரி, குண், சங். துண்டு 1 எஸ் இல்லை |
| 8463 | | 14 | 6 | சரவணமுத்து சுப்பையா, மட்டுவில், மோதிரம் 1 |
| 8566 | | 22 | 7 | வல்லி சின்னத்தம்பி, மீசாலை, கல்லுத்தோடு சோடி 1 |
| 8608 | | 25 | 7 | நாகமுத்து ஆறுமுகம், மட்டுவில், கம்மல் தோடு சோடி 1 |
| 8619 | | 25 | 10 | சங்கரன் சின்னப்பு, மீசாலை, கம்மல் தோடு சோடி 1 |
| 8620 | | 25 | 6 | வேலுப்பிள்ளை ஆறுமுகம், கொடிகாமம், தாலி 1 |
| 8781 | பங் | 11 | 4 | குஞ்சன் தம்பு, வரணி-இயற்றாலை, வாளி சோடி 1 |
| 8798 | | 14 | 5 | சங்கரப்பிள்ளை செல்லம், கைதடி, வாளி சோடி 1 [சோ.1 |
| 8843 | | 16 | 6 | கதிர்காமர் முருகேசு, நாவற்குழி, சிறு கொண்டைப்பூ 1, வாளி |
| 8849 | | 17 | 10 | நாகமுத்து தம்பாபிள்ளை, மீசாலை, கம்மல் தோடு சோடி 1 (ஒன்று |
| 8943 | | 25 | 6 | கணபதிப்பிள்ளை கந்தையா, பளை, பதக்கம் 1 [செம்புச்சுரை) |
| 8971 | | 27 | 10 | வேலு முருகேசு, கொட்டிப்பள்ளம், தோடு சோடி 1 |
| 8982 | | 28 | 5 | மாரிமுத்து கந்தையா, அல்லாலை, காய்க்கடுக்கன் சோடி 1 |
| 8985 | | 28 | 9 | நாகமுத்து விநாசித்தம்பி, மீசாலை, கம்மல் சோடி 1 |
| 8996 | | 28 | 12 | காசியர் வேலுப்பிள்ளை, வரணி, அரும்புக்கீச்சி 1, வாளி சோடி 1 |
| 9001 | | 29 | 10 | கார்த்திகேசர் கந்தையா, புலோப்பளை, குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 9091 | சித் | 4 | 12 | சின்னப்பொடியர் தில்லையம்பலம், கச்சாய், குவளைக்கடுக்கன் சோடி 1 சுரையில்லை |
| 9112 | | 5 | 8 | சின்னத்தம்பி தம்பு, சாவகச்சேரி, சிறுபிள்ளைக்காப்பு சோ 1 காவ |
| 9358 | | 25 | 8 | கதிரன் சின்னப்பு, மந்துவில், அச்சரக்கூடு 1 [டியில்லை |
| 9362 | | 25 | 5 | நெல்லையப்பபிள்ளை செல்லையா, சாவகச்சேரி, கலா. குச்சி சோ 1 |
| 9377 | | 26 | 15 | வெங்கிட்டர் நங்கபோயன், கிளிநொச்சி, கம்மல்தோடு சோடி 1 |
| 9409 | | 28 | 7 | அருணாசலம் விநாசித்தம்பி, மண்கும்பான், முருகுகுச்சி சோடி 1 |
| 9413 | | 29 | 7 | இளையதம்பி கந்தையா, சாவகச்சேரி, குண்டுடன் ½ பவுண் 1 |
| 9421 | | 29 | 13 | பெரியான் அப்புக்குட்டி, சாவகச்சேரி, கம்மல் சோ 1, வாளி |
| 9442 | வை | 1 | 4 | சின்னப்பு சதாசிவஐயர், நுணாவில், வாளி சோ 1 [சோடி 1 |
| 9475 | | 3 | 5 | வீரகத்தி சின்னத்தம்பி, சாவகச்சேரி, பொன் அச்சரக்கூடு 1 |
| 9476 | | 3 | 5 | சின்னப்பு சதாசிவஐயர், நுணாவில், காதோலை சோடி 1 |
| 9526 | | 6 | 5 | பொன்னையா வள்ளிப்பிள்ளை, சாவகச்சேரி, 1கல் கம்மல் சோ 1 |
| 9573 | | 11 | 3 | சின்னவன் வல்லி, சாவகச்சேரி, வாளி சோடி 1 |
| 9857 | ஆனி | 3 | 5 | ஆறுமுகம் வேலர், மறவன்புலவு, பதக்கம் 1 [காப்பு சோடி 1 |
| 9876 | | 5 | 35 | வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை, நுணாவில், சிறுபிள்ளை பூக் |
| 9889 | | 6 | 5 | வல்லி இளையவன், சாவகச்சேரி, வாளி சோடி 1 |
| 9900 | | 7 | 6 | கணபதிப்பிள்ளை கார்த்திகேசு, மன்னார், குவளைக்கடுக்கன் சோ 1 |
| 9927 | | 8 | 15 | முத்துக்குத்தி வயிரம்மா, கிளிநொச்சி, வாளி சோ 1, கம்மல் சோ 1 |
| 9955 | | 10 | 8 | கந்தன் கணபதிப்பிள்ளை, கொடிகாமம், தாயத்து 1 |
| A 24 | | 15 | 5 | முருகர் சின்னத்தம்பி, நுணாவில், வாளி சோடி 1 |
| 159 | | 24 | 6 | சபாபதி ஞானப்பிரகாசம், சாவகச்சேரி, கம்மல் சோடி 1 |
| 204 | | 29 | 7 | இளையவன் வல்லி, மட்டுவில், தாலி 1 |
| 228 | | 29 | 4 | மூத்ததம்பி கந்தையா, சாவகச்சேரி, வாளி சோடி 1 |
| 245 | ஆடி | 1 | 4 | வல்லிபுரம் ஆறுமுகம், மீசாலை, காய்க்கடுக்கன் சோ 1 |
| 289 | | 4 | 7 | சின்னத்தம்பி கார்த்திகேசு, மீசாலை, கொண்டைப்பூ 1 |
| 332 | | 6 | 5 | வேலன் சின்னவன், நாவற்குழி, பொன்தாலி 1 [மோதிரம் 2 |
| 352 | | 8 | 30 | வல்லிபுரம் கனகசபை, சாவகச்சேரி, சிறுபிள்ளைகாப்பு சோடி 1, |
| 443 | | 18 | 5 | ஏ. கே. பவுலீஸ், யாழ்ப்பாணம், மோதிரம் 1 |
| 454 | | 18 | 7 | கதிரன் சீக்கிலான், இத்தாவில், பொன்வாளி சோடி 1, காதுக்குச்சி சோடி 1 (ஒன்றில் பின்சுரையில்லை, ஒரு கல்லும் இல்லை) |
| 491 | | 21 | 12 | வெங்கிட்டன் நங்கபோயன், கிளிநொச்சி, பொன்தோடு சோ 1 |
| 501 | | 22 | 6 | சின்னப்பொடியன் கதிராமு, நாவற்குழி, கொண்டைப்பூ 1 |
| 516 | | 25 | 23 | வயிரவநாதர் கதிரித்தம்பி, சாவகச்சேரி, நெளிந்த அச்சரக்கூடு 1, கவுத்தோர் 1 |
| 540 | | 27 | 5 | உலகநாதர் நன்னித்தம்பி, மட்டுவில், சிறுபிள்ளை கம்மல் சோடி 1 |
| 581 | ஆவ | 1 | 10 | சேக்கம் அய்சக், எழுதுமட்டுவாள், தோடு சோடி 1 |
| 619 | | 5 | 22 | சி கந்தர் இளையதம்பி, கொடிகாமம், கொண்டைப்பூ 1 மோதிரம்1 |
| 649 | | 8 | 5 | வல்லிபுரம் சுந்தரம், சாவகச்சேரி, சிறுபிள்ளைகம்மல் சோடி 1 |
| 726 | | 15 | 5 | வல்லிபுரம் இராமலிங்கம், சாவகச்சேரி, காதுக்குச்சி சோடி 1 |
| 731 | | 15 | 4 | சின்னத்தம்பி மூலைகுடி, நுணாவில், பொன் சிமிக்கி வாளி சோ 1 |
| 738 | | 15 | 3½ | கவுரியல் தெனிசு, சாண்டாம்பொக்கட்டி, காதுக்குச்சி சோடி 1 |
| 765 | | 17 | 7 | இளையதம்பி கந்தையா, சாவகச்சேரி, மோதிரம் 1 [சோ 1 |
| 785 | | 19 | 5 | ஆசாரி நன்னியர் சின்னத்தம்பி, மட்டுவில்வடக்கு, சிறுகம்மல் |
| 859 | | 25 | 70 | சுப்பர் நல்லதம்பி, குடமியன், தென்னம்பூ சங்கிலிக்கொடி 1 (தா |
| 981 | புரட் | 2 | 5 | செல்லையா சுப்பையா, கல்கமம், தாலி 1 [லியில்லை) |
| 1036 | | 7 | 3 | விசுவநாதர் பொன்னம்பலம், கைதடி, சிமிக்கிவாளி சோடி 1 |
| 1142 | | 14 | 7 | சந்தனம்பிள்ளை செல்லம்பிள்ளை, சாவகச்சேரி, ½ பவுண் 1 |
| 1176 | | 16 | 6 | சங்கரப்பிள்ளை பரமசாமி, சரசாலை, மோதிரம் 1 |
| 1201 | | 19 | 5 | வயிரவன் சரவணை, நாவற்காடு-கோயிலாக்கண்டி, கல்லுக்குச்சி 1 |
| 1212 | | 20 | 11 | பொன்னையா யோகலிங்கம், சாவகச்சேரி, கம்மல் சோ 1 [கம் 1 |
| 1288 | | 26 | 10 | ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை, சாவகச்சேரி, டிம்மியுடன் பதக் |
| 1326 | | 28 | 13 | சின்னத்தம்பி செல்லையா, சாவகச்சேரி, மோதிரம் 2 |
| 1438 | ஐப் | 7 | 8 | சின்னத்தம்பி சின்னக்குட்டி, பளை, கம்மல் சோடி 1 |
| 1470 | | 10 | 2 | ஆறுமுகம் நமசிவாயம், மட்டுவில், காதுகுச்சு சோ 1 [வடியில்லை) |
| 1480 | | 11 | 8 | வல்லிபுரம் சின்னையா, சாவகச்சேரி, சிறுபிள்ளை காப்பு சோ (1கா |
| 1493 | | 12 | 6 | சின்னவன் வல்லி, சாவகச்சேரி, பொன்தோடு சோ 1 |
| 1564 | | 17 | 7 | தம்பன்பெண் பொன்னி, மீசாலை, கம்மல் சோ 1 |
| 1587 | | 17 | 3 | வல்லிபுரம் வயிரமுத்து, கச்சாய், சிமிக்கிவாளி சோ 1 |
| 1589 | | 17 | 8 | பூதத்தம்பி பொன்னையா, மீசாலை, பஞ்சாயுதம் 1 |
| 1596 | | 17 | 8 | கன்னையா நல்லையா, கிளிநொச்சி, பொன்தோடு சோடி 1 |
| 1649 | | 23 | 9 | அப்புக்குட்டி கந்தையா, சாவகச்சேரி, கல்லுக்கடுக்கன் சோடி 1 |
| 1659 | | 24 | 8 | சின்னத்தமபி கணபதிப்பிள்ளை, மறவன்புலவு, தோடு சோடி 1 |
| 1706 | | 27 | 3 | தம்பன்பெண் பொன்னி, மீசாலை, மூக்குத்தி 3 |
| 1713 | | 28 | 50 | அவுலியா முகம்மது அசனு மரைக்காயர், வன்னிஆலங்குளம், முகப்புகளுடன் பீலிக்காப்பு சோடி 1 |
| 1793 | கார்த் | 4 | 20 | கந்தர் ஆறுமுகம், சாவகச்சேரி, சிறுகுண்டுச்சங்கிலி 1 |
| 1820 | | 7 | 5 | சுவாமிநாதர் அப்பாக்குட்டி, சாவகச்சேரி, சிறுகம்மல் சோ 1 ஒரு கல்லும் ஒரு சுரையும் இல்லை |
| 1826 | | 7 | 5 | கந்தன் சுப்பன், மட்டுவில், தாயத்து 1, காதுக்குச்சு சோடி 1 |
| 1897 | | 14 | 8 | கணபதிப்பிள்ளை சின்னப்பு, சாவகச்சேரி, கம்மல் சோடி 1 |
| 1939 | | 16 | 5 | ஆறுமுகம் நல்லையா, சாவகச்சேரி, தாலி 1 |
| 1979 | | 21 | 7 | கதிரன் சீக்கிலான், இத்தாவில், பொன்தோடு சோடி 1 |
| 2003 | | 22 | 50 | முருகேசு பொன்னையா, சோரன்பற்று, பீலிக்காப்பு சோடி 1 |
| 2022 | | 24 | 7 | கந்தன் கணபதி, கொடிகாமம், குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 2090 | மார் | 2 | 8 | தம்பிஐயா கனகரத்தினம், சாவகச்சேரி, புரூச் 1, மோதிரம் 1 |
| 2178 | | 13 | 10 | குழந்தையர் முருகுப்பிள்ளை, நெல்லியடி, கம்மல் சோ 1 (ஒன்றில சுரையில்லை ஒரு கல்லும் இல்லை) |
| 2200 | | 15 | 15 | ஆறுமுகம் நல்லையா, சாவகச்சேரி, மோதிரம் 1 |
| 2215 | | 19 | 3 | விநாசித்தம்பி முருகேசு, யாழ்ப்பாணம், சிறுமோதிரம் 1 |
| 2232 | | 20 | 6 | வேலுப்பிள்ளை வீரவாகு, மீசாலை, பஞ்சாட்சரம் 1 |
| | 1934ஹூ | | | [சோடி 1, கம்மல் சோடி 1 (சுரையில்லை) |
| 2343 | தை | 3 | 16 | வல்லிபுரம்பெண் சின்னம்மா, சாவகச்சேரி, பொன்சிமிக்கி வாளி |
| 2414 | | 10 | 6 | வேலுப்பிள்ளை பொன்னையா, கொடிகாமம், நெளிந்த தாயத்து 1 |
| 2461 | | 13 | 2½ | வாரி சின்னத்தம்பி, கைதடி, பொன்சிமிக்கிவாளி சோடி 1 |
| 2476 | | 13 | 12 | மயில்வாகனம் சோமசுந்தரம, சாவகச்சேரி, கவுத்தோர் 1 |
| 2483 | | 16 | 6 | தாமோதரி கந்தையா, சாவகச்சேரி, சிறுகம்மல் சோ 1 |
| 2547 | | 22 | 6 | சின்னத்தம்பிபெண் செல்லம்மா, கொடிகாமம், சிறுகம்மல் சோ 1 |
| 2616 | | 27 | 7 | சின்னவன் வல்லி, சாவகச்சேரி, கொண்டைப்பூ 1 |
| 2768 | மாசி | 8 | 1 | வயிரவன் கனகன், மட்டுவில், மூக்குத்தி 1 |
| 2837 | | 13 | 6 | சின்னவன் வல்லி, சாவகச்சேரி, காதுவாளி சோடி 1 |
| 2850 | | 14 | 2½ | சின்னப்பா சுப்பையா, கைதடி, சிறுமோதிரம் 1 |
| 2889 | | 17 | 6 | தம்பிஐயா தம்பாபிள்ளை, நுணாவில், சிறுதாயத்து 1 (கல் 1 இல்லை) |
| 2981 | | 25 | 10 | சரவணமுத்து வல்லிபுரம், சாவகச்சேரி, அச்சரக்கூடு 1 |
| 3062 | பங் | 3 | 7 | சின்னத்தம்பி ஆறுமுகம், தனங்கிளப்பு, நெளிந்த அச்சரக்கூடு 1 |
| 3109 | | 6 | 6 | வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை, நுணாவில், பொன்சிமிக்கிவாளி சோடி 1 |
| 3208 | | 15 | 15 | கதிரன் சீக்கிலான், இத்தாவில், வாளி சோ 1, நாலுகல் கீச்சு 1 |
| 3257 | | 20 | 5 | இளையவன் பெரியான் போபி, மறவன்புலவு, சிறுபதக்கம் 1 [பூ 1 |
| 3260 | | 20 | 3 | சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை, மட்டுவில்தெற்கு, கல் கொண்டை |
| 3261 | | 20 | 4 | வயிரமுத்து இளையதம்பி, மட்டுவில்தெற்கு, சிறுமோதிரம் 1 |
| 3267 | | 22 | 5 | சுந்தரம்பிள்ளை கந்தையா, வவனியா, ஸ்காப்பின் 1 |
| 3273 | | 22 | 15 | மு. இ. கனகரத்தினம், சாவகச்சேரி, கவுத்தோர் 1 |
| 3276 | | 23 | 9 | சீக்கிலாப்பிள்ளை சந்தியாப்பிள்ளை, மிருசுவில், மோதிரம் 1 |
| 3288 | | 24 | 26 | நல்லதம்பி சின்னத்தம்பி, மட்டுவில், குண்டுடன் அரைப்பவுண் 2 |
| 3388 | | 31 | 1 | கந்தன் செல்லன், மட்டுவில், காதுக்குச்சி சோடி 1 |

விற்பனவு:-1935ஹூ ஐப்பசிமீ 14உ திங்கட்கிழமை 1 மணி தொடக்கம் (அதற்குமுன் எடுபட்ட நகைகள் புறநீங்கலாக) மேற்படியாரின் கடையில் ஏலத்தில் விற்கப்படும்.

N. வீரவாகு உடையார்,
வெந்தீஸ் மேஸ்தர், மீசாலை,

(35) 29-9-35—2

# மகாளய சிராத்தம் புரட்டாதிமாசத்தில் செய்யவேண்டியதற்கு நியாயமும் பிறவும்

பிதிர் தேவதைகளின் ஆசிர்வாதத்தை இல்வாழ்வான் விரும்பி இருத்தலினாலும், அந்தப் பிதிர்தேவதைகளுடைய நல்ல ஆசிர்வாதமே இல்வாழ்க்கைக்குப் பிராணாதாரம்போன்றதாகலினாலும், அவர்களுடைய கருமங்களை வெகு சாக்கிரதையுடன் செய்யவேண்டியிருப்பதனாலும், அவ்வகைச் சாக்கிரதைக்குப் பிரதானமானது புத்தியானதினாலும் புத்திக்கு அதிதேவதை புதனாடியாலும், புதனுக்கு உச்சமூலத் திரிகோணமாகச் சிறந்த இராசி கன்னியாதலினாலும், பிதிர்காரகனும் ஆத்துமகாரகனும் சூரியனாகையாலும், சூரியன் கன்னிராசியில இருக்குங் காலமான புரட்டாதிமாதமே இந்த மஹாளய சிரார்த்தத்திற்கு விசேஷ காலமாகும்.

இறந்துபோனவர்களெல்லோரும் அவரவர்கள் குடும்பத்தினர்க்குப் பிதிராகின்றார்கள். ஒரு காலத்தில் இந்திராதிதேவர்களும், பிதிர்களும் அசுரர்களுடைய துன்பத்திற்காற்றாது காகரூபந் தாங்கி பூமியிற் சஞ்சரித்தார்கள். காகங்களுக்குப் பிண்டமிட்டுண்ணும் வழக்கம் உண்டாயது. இதுவே வாயசபிண்டமெனப்படும். "போசனகாலே காகபெலினும்" எனப் பெரியவர்களும் கூறியிருக்கின்றார்கள்.

பிதிர்தேவதைகள் சந்திரலோகத்தில் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு அமாவாசை கழித்த பிரதமை முதல் பூரணைவரையுமுள்ள காலமான வளர்பிறை பகலும், பூரணை கழித்த பிரதமை முதல் அமாவாசை வரையுமுள்ள காலமான தேய்பிறை இரவுமாகும். ஒரு சாந்திரமான மாசம் அவர்களுக்குப் பகலிரவு கூடிய ஒரு நாளாகின்றது. எந்தத் தினத்தில் நமக்கு எதிரிலிருக்கும் சந்திரகோளத்தின் பாதி முழுவதும் இருளாகிவிடுகிறதோ அதேநாளில் பிதிர்களிருக்கும் சந்திரகோளத்தின் பாதி முழுவதும் பிரகாசம் அடைகின்றது. அந்த நாளை அமாவாசையென்றும் தரிசமென்றும் வழங்குகின்றோம். அமா=கூட, வசு=வசித்தல் எனவே சந்திரன் சூரியனுடன் வசித்திருக்கும் நாளெனபதே அமாவாசையென்பதன் பொருளாகும். சூரியனுடன் சந்திரன் ஒரு ராசியில் காணப்படும் நாளென்பதே தரிசமென்பதின் பொருளாகும். ஒவ்வொரு பூரணைகாதமும் நடுராத்திரிப் பொழுதான அர்த்த ராத்திரி காலமாகின்றது. ஆகவே தேய்பிறை அட்டமி அவர்களுக்குச் சூரியோதய காலமும், வளர்பிறை அட்டமி சூரியாஸ்தமய காலமும் ஆகின்றது. ஆதலால் பிதிர்லோக வாசிகளின் மத்தியான போசன சமயமானதும், உச்சி சந்திகாலமுமான அமாவாசைநாள் அவர்களைத் திருப்தி செய்விக்கும் சிறந்த தினமாயிற்று. பிதிர்க்கள் ஆவிரூபமான தேவதைகளானபடியால இவர்களுடைய ஆராதனைக்குத் தக்ஷணயனம் தேய்பிறை விசேஷமாயிற்று.

பிதிர்தேவதைகள் எங்கள்மேல் அன்புடையவர்களாய் எங்களால் செய்யப்படும் ஆராதனையைப் பெற்றுக்கொண்டு இவ்வுலகத்தில் எல்லாச் சுகங்களையும் நாம் பெறும்படி ஆசிர்வதிக்க இந்த மஹாளய பட்சம் முழுமையும் எதிர்பார்த்தவண்ணமாயிருக்கின்றார்கள்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
சுதுமலை.

## காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாசாலை

நிகழும் யுவ௵ ஆவணி௴ 30 ௳ (15-9-35) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் ஷை வித்தியாசாலையின் புதுக்கட்டிட (திருநாவுக்கரசு நாயனார் மண்டப) பிரவேச தினக் கொண்டாட்டம் வெகுசிறப்பாக நடைபெற்றது. சரஸ்வதிதேவிக்கு விசேஷபூசை நடைபெற்றபின்னர் வித்தியாசாலைமாணவர்கள் கோலாட்டம் அடித்து விளையாடினர்கள் இரவு 6½ மணி முதல் முகாந்தரம் ஸ்ரீமான. க. முத்துக்குமாரு அவர்கள் தலைமையில் தேவாரபாராயணத்துடன் பகிரங்கக் கூட்டம் ஆரம்பமாயது. மனேஜர் அவர்கள் எழுந்து முகாந்தரம் அவர்களின் குணாதிசயங்களை எடுத்துரைத்து அவர்கள் பொதுவாக நம் யாழ்ப்பாணத்தவராலும் சிறப்பாக எம் காரைநகரத்தவராலும் பெரியாராக மரியாதை செய்யப்படுவதுடனமையாது அரசினரும் முகாந்தரம் என்னும் பட்டத்தைக் கொடுத்துக் கௌரவப்படுத்தியது சந்தோஷப்படக் கூடியதாகுமென எடுத்துரைத்து தலைவர் அவர்களுக்கு வரவேற்பு உபசாரம் கூறினர். பின்னர் மனேஜரவர்கள் வித்தியாசாலையின் வரவுசெலவு அறிக்கையை வாசித்து வித்தியாசாலைக் கட்டடங்கள் திருத்திய வகையாலும், உபாத்திமாரின் சம்பளம் கொடுத்த வகையாலும தற்பொழுது ரூபா 1091-84 சதம் கடனிருப்பதாக வெளியிட்டார்.

மேலும் வித்தியாசாலையானது எம் யாழ்ப்பாணத்தில் நாவலர் பெருமான் அவர்கள் காலத்து சைவபரிபாலன முறையில் கிராமங்கடோறும் பிரசங்கங்கள் செய்யப்பெற்ற காலத்து எம் காரைநகர் வாசிகள் சைவசமய அபிமானத்தால் உந்தப்பெற்று 1890-ம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பெற்றதாகுமென்றும், ஆரம்பத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றதாயினும் காலகதியில் தளர்வுற்றதனால் 1924-ம் ஆண்டளவில் வித்தியாசாலைக் கட்டடங்கள் திருத்தம் அடையப்படவேண்டுமென்றும், அல்லாத காலத்து உதவிநன்கொடைப் பணத்திலிருந்து நீக்கப்படுமென அரசினர் வற்புறுத்தினறதாலும் அதன்பயனாக 1925-ம ஆண்டு முதற்பகுதியில் வித்தியாசாலையின் பொறுப்பை ஏற்கலாயினேனென்றும் சில மாசங்களில் பழைய கட்டிடங்கள் இடிக்கப்பெற்றுத் தற்போதுள்ள நாம் இன்று கொண்டாடியுள்ளதாகிய பெரிய மண்டபம் நிறைவேற்றப்படலாயிற்றென்றும், (ஏற்ற காலத்தில் 79 பிள்ளைகள் வரை படித்த வித்தியாசாலையானது தற்பொழுது 235 பிள்ளைகள் படிப்பதான) வளர்பிறைச் சந்திரன்போல் வளர்வுறுவதாயிற்றென்றும், வித்தியாசாலையானது பூரணவளர்ச்சியடைவதற்கு சைவசமயப் பெரியார்களது அன்பையும் ஆதரவையும் எதிர்பார்த்திருக்கிறதென்றும விரித்துரைத்தனர். அடுத்ததாக வித்தியா ஆலோசனைச் சபையினராக திருவாளர்கள முகாந்தரம் க. முத்துக்குமாரு, மு. கதிரவேலு, க. அருணசலம், சி. க. ஆறுமுகம்பிள்ளை, சு. செல்லையா ஆகியோர் நியமனம் பெற்றனர்

அதன பின்னர் பிரசங்கத்திற்கெனக் குறிக்கப்பட்ட ஸ்ரீ. மத். சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள வாராததினால் ஆசிரியர் திரு. சு. வேலுப்பிள்ளை அவர்களால் "சைவசமயம்" என்னும் விஷயத்தில் ஒரு வியாசம் வாசித்தும், ஆசிரியர். திரு. ச. சபாபதிஅவர்கள் "தமிழ்" என்னும்விஷயத்தில் ஒரு உபந்நியாசமும் செய்தார்கள.

ஈற்றில் சில அன்பர்கள் குறிப்புரை கூறியதுடன் மனேஜரவர்கள் ஸ்துதியுடனும் தேவாரபாராயணத்துடனும் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.—கடித

## "வாணிவிலாச வாசிகசாலை" கந்தரோடை.

ஷை பெயரினையுடைய வாசிகசாலையொன்று கந்தரோடையிலுள்ள வத்தாக்கையென்னுமிடத்திற் கட்டப்பட்டிருக்கும் குருபூசைமடத்தில், கந்தரோடை இந்துவாலிப சங்கத்தாரால் நிகழும் 1-9-35 ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டிருக்கின்றதென்றும், அங்கு பல தமிழ்ப் பத்திரிகைகளும், ஆங்கிலப் பத்திரிகைகளும் வரவழைக்கப் படுகின்றனவென்றும், சனி ஞாயிற்றுக்கிழமைகளில் எந்நேரமும், மற்றைய நாட்களில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரையும் வாசிகசாலை திறந்திருக்குமென்றும் பத்திரிகைகள் வாசிக்க விரும்புவோர் ஷை நேரங்களில்வந்துவாசிக்கலாமென்றும் ஷை சங்கக் காரியதரிசி பிரம ஸ்ரீ வைத்தீசுவரஐயர் தெரிவிக்கின்றார்.

# தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலின் உற்பத்தியும் பழமையும்.

வராணிக் கிராமமானது ஒன்பது குறிச்சிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் வடக்குக் குறிச்சி வடதிசைநோக்கி வடகரையாய் அமைந்துள்ளது. இக்குறிச்சி கிழக்கு மேற்காய் நீண்டு வடக்குத் தெற்காய் அகன்று நீள்சதுரப்பட அமைந்துள்ளது. இக்குறிச்சியின் அயலில் தென்மேற்குத்திசையில் சில யார் தூரத்தில் 'தற்போது வயல்வெளிகள் கழிக்கரைகளின் மத்தியில் அமைந்துள்ளது தில்லையம்பலப்பிள்ளையார் கோயில். இதனைத் தில்லையம்பலம் என்ற பெயரால் அழைத்தற்குக் காரணம் யாதோ எனப் பலரிடைப் பல காலுசாவியதுண்டு. அங்ஙனம் உசாவியதன் பயனாய் பண்டுதொட்டுப் பரவணியாய் வழங்கிவந்த ஓர் பழங்கதையையும் அதற் குறுதுணையனவான புறச்சான்றுகள் சிலவும் ஒருவாறு உண்மை பகரலாயின.

இவ்வட வாணியில் மேற்குப் பக்கமாய் அதன் மேற்கெல்லை தொடங்கிக் கிழக்கே கால்மைல்தூரம் வரையில் உள்ள பகுதி தம்பான் என்ற பெயரால் வழங்கப்பட்டுவருகிறது. அதன் பெயர்க்காரணம் ஆராய்ச்சிக்குரியதாய் இருக்கிறது. தம்பானில் சூழலில் உள்ள இடங்கள் இற்றைக்கு ஏறக்குறைய 100 வருஷங்களுக்கு முன்னே அடர்ந்த காடுகளாயும் சேறு நிறைந்த பத்தனைகளாயும் மனுஷசஞ்சாரமற்றும் இருந்தனவாக ஊகிக்கக் கிடக்கிறது. தற்போது தில்லையம்பலம் இருக்குமிடம் அக்காலத்தில அடர்ந்த காடு. தம்பான் என்ற இடம் குடிகள் நிறைந்தும் வயல்நிலம் பரந்தும் இருந்தது.

இவ்விடத்தில் இற்றைக்கு 200 வருஷங்களுக்கு முன்னே கதிர்காமர்—அம்பலவாணர் என்ற ஓர் வேளாண்பிரபு சிறந்த செல்வாக்கோடு சீவித்திருக்கிறார். இவரை முதலியார் என்னும் பட்டப்பெயரோடு சேர்த்து அம்பலவாண முதலியார் என்றும் அழைப்பர். இவர் புலோலி வேளாண்பிரபு பெருமையினனது மகனும் தம்பானில் குடியேறினவனுமாகிய குமாரவேலன் அவனது மகன் சூரியர் மரபைச் சேர்ந்தவரும் இடைக்குறிச்சி வேளாண்பிரபு மளவராயர் வாரியார் மரபைச்சேர்ந்தவருமாவார். இவரது இல்லத்தின் அயலில் ஓர் குளந் தூர்ந்த நிலைபரத்தில் இன்றைக்கும் காணப்படுகிறது. இது இன்றைக்கும் அம்பலவாண குளக்கரை என்னும் பெயரால் வழங்கப்பட்டுவருகிறது. அவரது இல்லம் அழிந்த மணல் மேடாய் இருக்கிறது. இவரது பேர்ப்பட்ட காணிகள் இன்றைக்கும் இவர் சந்ததியார் ஆண்டுகொண்டு வருகின்றனர். இவர் இல்லத்திலிருந்து தில்லையம்பலப்பிள்ளையார் கோயில் தென்மேற்குத் திசையில் ஓர் கூப்பிடுதூரத்தில் அமைந்திருக்கிறது. இவர் தில்லையம்பலம் அம்பலவாணசாமி பேரில் மிகுந்த அன்பும் வைராக்கியமுமுடையவர். எந்நாளும சிவபூசை செய்தே போசனமருந்துவர். தில்லையம்பலம் என்று வாயாற் சொல்லும் வழக்கமும் சிந்தனையுமுடையவர். இவர்மாத்திரமன்று வராணிக் கிராமத்தில் உள்ளவர்கள் சமய வழிபாட்டிற் சிறந்தவர்களாயும் தில்லையம்பலம் அம்பலவாணசுவாமி பேரில் அன்பு வைராக்கியம் உடையராயும் காணப்பட்டமையை அவர்கள் அக்காலத்துத் தருமசாதனஞ் செய்துவிடப்பட்டுப் பரந்து கிடக்கும் வயற்காணிகளும் தோட்ட நிலங்களுமே சான்று பகரும். இப்படியாக இவர் சிவபூசை செய்து சாப்பிட்டுவருவார். ஆனால் அக்காலத்து ஒல்லாந்தர் ஆட்சி நடைபெற்றது. அவர்கள் தங்களுடைய கிறீஸ்த சமயத்தை வளர்த்தற்கேற்ற வழிகளைச் செய்து சைவசமயத்தை வீழ்த்தினர். ஆனால் உண்மையான வேளாண்பிரபுக்கள் ஒழித்து மறைத்தும் தம் சமயத்தை விடாது அனுட்டித்துவந்தனர். சிவலிங்கத்தை அடுப்புக்கல்லோடு சேர்த்தும் வணங்கிவந்தனர். கதிர்காமர் அம்பலவாண முதலியாரும் சிவபூசைசெய்து சமயமுறைகளை அனுட்டித்துவருங் காலத்தில் அவரில் கோபமுற்ற சில அரசாங்க வேட்டைநாய்கள் அவர் அங்ஙனஞ் செய்துவருதலை அரசாங்கத்தார்க்கு நேர் முகதாவில் மாயமாய்க் காண்பித்தனர். அதனால் அவர் அரசாங்கத்தாரால் கொலைத் தீர்ப்பிடப்பட்டார். அத்தீர்ப்பின்படி இவர் தற்போது தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலிருக்கும் அடர்ந்தகாட்டில் அந்தரவெளியில் கழிக்கரையில் வெட்டப்பட்டார். ஆனால் அவர் தான் சமய வைராக்கியத்தினாலே கொல்லப்படுவதினாலே சிறிதேனும் கவலையற்றவராய், தில்லையம்பலம் அம்பலவாண சுவாமி பேரில் முன்னரிலும பன்மடங்குகூடிய வைராக்கிய பக்தியோடு தில்லையம்பலம் என்று வாயால் ஓயாது செப்பியவராய்க் காணப்பட்டாராம். அவர் தரம் வெட்டுண்டு விழுஞ் சமயத்தில் தில்லையம்பலம் என முன்னும் பின்னர்த் தான் தன்னூரில் குலதெய்வமாய் வணங்கிவந்த பிள்ளையாரைப் பின்னும் செப்பினவராய் "தில்லையம்பலம் பிள்ளையாரே" என்று வாய்கதறியபடி தரம் தரையில் வீழ்ந்தது. அவ்விடத்தில் இருவர் அருளும் ஒருங்குசேர்ந்து பிரகாசித்தபடி இருப்பது யாவர்க்கும் கண்கூடு. (இன்னும் ஆராயப்படும்.)

ஆ. சின்னையபிள்ளை
18-9-35. வராணிவடக்கு.


## ஜோதிட விளம்பரம்

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர்
தங்கள் தங்கள் இஷ்டப்படி
சுத்தமாகவும் சீக்கிரமாகவும் செய்வித்துக்கொள்ளலாம்.

கிரகஸ்புடம், பாவஸ்புடம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், கிரகசமயம், கிரகபலன், அஷ்டவர்க்கபலனும், காலதெசை, பிராணதெசை, சீவதெசை, மனோதெசை, மிருத்துதெசை, இவைகளும், மகாதெசை அந்தரபலனுக எழுதியுங் கொடுப்பதற்கு ரூபா 60.
ஷை ஒருதெசைக்கு அந்தரபலனும் மிகுதி புத்திபலனுமெழுத ரூ. 35.
ஐந்துவருஷ அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 10.
முற்றும் புத்திபலனும் சுருக்கமான பிறபலன்களும் எழுத ரூபா 5.
குறிப்பு எழுத ரூபா 1. விவாகப் பொருத்தம் பார்க்க ரூபா 2.

கோவில், வீடு, கிணறு முதலிய கிருகசம்பந்தமான [illegible]மங்களும் எம்மிடம் செய்வித்துக்கொள்ளலாம்.

ஜா[illegible]ம், குறிப்பு, ரேகை முதலியனமூலம் தற்காலம் நடக்கும் பலாபலன் அறிய விரும்புவோர் ரூபா 1 கொடுத்தல்வேண்டும்.

☞ ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம், ஆண், பெண் முதலியவற்றின் சரியான விபரத்துடன் மேற்காட்டிய விகிதத்திற் பாதி முற்பணமாக அனுப்பவேண்டும்.

K. Vaithilingam,
Astrologer,
Urelu, Jaffna.

க. வைத்தியலிங்கம்,
சோதிடர், ஊரெழு,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(188) 9-9-34


## வடமராட்சித் தமிழாசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று நிகழும் 1935 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ம் தேதி சனி வாரத்தன்று முற்பகல் 9-30 மணியளவில் வடமாட்சி மத்திய துவிபாஷா வித்தியாசாலை மண்டபத்தில் வித்தியாதரிசி திரு. S. தியாகராசா அவர்களின தலைமையின கீழ் ஆரம்பமாயிற்று.

முதலாவதாக:- தலைவர் அவர்கள் முன்னுரையாக ஆசிரியத் தொழிலுக்கு இன்றியமையாத சில புத்திமதிகள் கூறினா

இரண்டாவதாக:- அச்சுவேலி அமெரிக்கன மிஷன ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர்களுள் ஒருவராகிய திரு. S. வீரசிங்கமவர்கள "பூமிசாஸ்திர பாடங் கற்பிக்கு முறை" எனனும் விஷயத்தில் தமது ஆராய்ச்சியின் பயனாக, தாம பெற்றுக்கொண்ட பேறுகளைத்திரட்டி ஓர் சிறந்த சொற்பொழி வாற்றி அவையோரை மகிழ்வித்தனர்.

மூன்றாவதாக:- பண்டிதர் S. கந்தவனம அவர்கள் "கவி இன்பம்" எனனும் விஷயத்தில் அவையிலுள்ளார் யாவரும; தமது செவிகளையே வாய்களாகக் கொண்டு, கவிஇன்பமாகிய இரசத்தைப் பருகி உருசிக்குமாறு ஒரு சொற்பொழிவு நிகழ்த்தனர்.

நான்காவதாக:- பண்டிதர் K. கிருஷ்ணபிள்ளையவர்கள் "சொல்லிலக்கணம் கற்பிக்குமுறை" என்னும் விஷயத்தில் நானகாமவகுப்பு முதல் S.S.C. வகுப்பு ஈறாக, சொலலிலக்கணம் கறபிக்கும் விதத்தை விஸ்தரித்து ஓர் அரிய, சொறபொழி வாறறினர்.

ஐந்தாவதாக:- பிரதம வித்தியாதரிசி திரு M. தம்பிப்பிள்ளையவர்கள், மேறபடி விடயங்க ளொவ்வொன்றையுந் திரட்டி ஒருசிறந்த குறிப்புரை கூறியதோடு, ஆசிரியராஒவ்வொருவரும கவனிக்கவேண்டிய சில முக்கிய குறிப்புகளையும கூறி முடித்தனர்

ஆறாவதாக:- சித்திர வித்தியாதரிசி திரு. S R. கனகசபை அவர்கள வரைதற பாட விஷயமாக ஆசிரியர் சங்கங்கள் கவனிகக வேண்டியன என்பதுபற்றிய சில குறிபபுகள் கூறினர்.

ஏழாவதாக:-தலைவர் அவர்கள் முடிவுரையாக ஷை விஷயங்களின பேரில், குறிப்புகள் கூறியதோடு இத்தகைய ஆசிரியா சங்கங்களில், மாதிரிபபாடம் படிபபித்தலும அவசியமானது என்று கூறி முடித்தனர்.

ஈற்றில் சங்க உபதலைவர் திரு. S. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்கள், சங்கத்தின்பேரால், அவைத்தலைவர், பிரதம வித்தியாதரிசி, சித்திர வித்தியாதரிசி, உபாத்தியாசகர்கள அம்மண்டபத்தை தந்துதவிய முகாமைக்காரர் ஆதியோர்க்கு நன்றி கூறியதும் பிற்பகல் ஒரு மணியளவில கூட்டம முடிவெய்தியது. —கடிதம்.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol 6 } Chunnakam, Jaffna, 29th September 1935, Sunday. { No. 13

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திரம் அல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினேம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, கிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதாஞசா லாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.


சிங்கப்பூர், பினங்கு, முதலிய தொலைவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினல் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P.O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும்
விசேடமாக மதிப்புப்பெறும்
பவுண்மார்க் ஓடுகள்
இவைகளே.



எப்பொழுதும் நன்கு
மதிப்புடன் அழகு மிளிரும்
உன்னத மாளிகைகளில்
வேயப்பெற்றவை.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பெலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்
### சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு | | சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ் |
| பருத்தித்துறை …. | | |
| வல்வெட்டித்துறை | | |
| காங்கேயன்துறை | | |
| காரைநகர் …. | …. | சி. க. ஆறுமுகம்பிள்ளை |
| ஊர்காவற்றுறை | …. | பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ் |

(103) 23-9-34.

அகில இலங்கை
## ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
### THE LANKA BENEFIT CO.,
GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் | வகு. | 1000/- | ரூபா | 40/- | ரூபா | வீதம் | 25 மாதத்திற்கு |
| B | 8-ம் | ,, | 500/- | ,, | 20/- | ,, | ,, | 25 ,, |
| C | 14-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, | ,, | 25 ,, |
| D | 7-ம் | ,, | 125/- | ,, | 5/- | ,, | ,, | 25 ,, |
| BMC | 2-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, | ,, | 12½ ,, |
| WC | 3-ம் | ,, | 250/- | ,, | 5/- | ,, | ,, | 50 கிழமைகட்கு |
| WD | 4 | ,, | 125/- | ,, | 5/- | ,, | ,, | 25 ,, |
| தினசரி | 6&7ம் | ,, | 100/- | ,, | 1/- | ,, | ,, | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்
### மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
[illegible]கைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும் குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-24

சிட்டுக்குருவி சத்தினல் செய்யப்பெற்ற
## மின்சார லேகியம்
சாப்பிடுங்கள்

ஒரேவேளையில் குணந்தரும்

48 நாள் டின் 1க்கு ரூபா 5-0-0. வி. பி. வேறு
இனம்! — வியாபாரிகள் பரீட்சிக்க சாம்பிள் டின் இனம்!

**எம். முகம்மது யூசுபு வைத்தியசாலை,**
பரங்கிப்பேட்டை, (Porto Novo.)

கொழும்பு ஏசண்டு :
ச. இ. காதர் மெய்தீன், 39, ஓல்ட் பிட்சர்ஸ்ஸ்ரீட், கொழும்பு.

[(10) 14-7-35—12 ]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி" திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ஞு செப்டெம்பர் மீ 29-உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.